இஃது.

இந்தகிதாபின் அட்டவணையிற் கண்ட நல்மாராயங்கள்,

உபதேசங்கள் பொதிந்த

# புஷா ருத்துல் மூமினீன்

(மஅ)

# தன்பீஹுல் ஜாஹிலீன்.

இதனை வாலாஜா தாலுக்கா

மேல் விஷாரம்

கடைக்கார - அப்துல்கனீ சாகிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்)

**க. முஹம்மது இப்ரூஹீம் சாகிபவர்களால்**

கோர்வைச் செய்து

இக்கிதாபின் டைடில்பேஜில் கண்ட உலமாக்களால்

சஹீஹு செய்து

ஷை அஹ்ஸன்

**க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்கள்**

கோர்வைச் செய்த ஹக்கை கிரயம் பெற்றுக் கொண்ட

ஆம்பூர்

உசைன் வீட்டு ஆஜீ ஐதர்சாகிபவர்கள் குமாரர்

**உ. ஜைனுல் ஆபிதீன் சாகிபவர்களால்**

சென்னை

...ீ. ஆர். ராம அய்யர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

திருத்தமாகிய முதற் பதிப்பு.

Q7!417
N26
177688

இ...

# புஷாருத்துல் ரு...

(மஅ)

# தன்பீஹுல் ஜாஹிலீன்.

OFFICE OF ... 9 APR... MADR...

இதனை

வாலாஜா தாலூக்கா மேல்விஷாரம்

கடைக்கார - அப்துல்கனீ சாகிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்)

**க. முஹம்மது இப்ருஹீம் சாகிபவர்களால்**

கோர்வை செய்யப்பெற்று

மேல்விஷாரம். ஆலீஜனுப், மவுலவீ, வாயிஜ்

**மா. அப்துல் றஜாக் சாகிபவர்களும்**

இன்னும் இராயவேலூர், மதறாஸ் இவ்வூர்களில் வசிக்கும்

கல்விக் கடல்களாகிய அனந்தம் உலமாக்களும் சஹீஹு செய்து

**ஷை. அஹ்ஸன் க. முஹம்மது இப்ருஹீம்**

சாகிபவர்களிட மிருந்து இந்த கிதாபைக் கோர்வை செய்த ஹக்கை

கிரயம் பெற்றுக் கொண்ட

ஆம்பூர்

**உசைன் வீட்டு ஆஜீ ஐதர் சாகிபவர்கள் குமாரர்**

**உ. ஜெமினுல் ஆபிதீன் சாகிபவர்களால்**

சென்னை

பி. ஆர். ராம அய்யர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

---

...கிய முதற் பதிப்பு.
...44-ம் ஹு ஷஅபான் மீ

ஈஸ்வி 1926ஹு மார்ச்சு மீ
ரிஜிஸ்தர் காபிரைட்.

## ...விப்பு.

...மீனின் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன்
...ப புத்தகத்தைச் சென்னையிலும், புதுவை
...செய்திருக்கிறபடியால் இப்பெயருடைய புஸ்த
...லும், இதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களில் சொல்லிய
...ற் சிலதையாகிலும், இப் புத்தகத்துக்குப் பாத்தியஸ்த
... இதை அச்சிற்பதிப்பித்து வெளியிட்டவரான ஆம்பூர் உசைன் வீட்டு ஜெயினுல் ஆபிதீன் சாகிபவர்கள் அனுமதியின்றி யாரேனு மச்சிடுவாராயின், அவ்வாறு அச்சிட்டவர்களும், அதைப் பதிப்பித்துக் கொடுக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும், அதைவைத்து விற்பனை செய்யும் புத்தக வியாபாரிகளும், 1848ஞ ஜனவரிமீ 25உ வெளியிடப்பட்ட கனம்பொருந்திய கவர்ன்மேண்டு கெஜட்டென்னும் பத்திரிகையில் 1847ஞ 20-வது ஆக்டு 12-13-வது பிரகாரணங்களிற் கூறியபடி நடத்தப்படும் நஷ்ட பிரியாதுக்கும் செஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாகக் கடவார்களென்று யாவரும் அறிவீர்களாக :—

இங்ஙனம்,

உ. ஜெயினுல் ஆபிதீன் சாகிபு,

ஆம்பூர். காதர் பேட்டை

(நார்த்தாற்காடு.)

## முக்கிய கவனிப்பு.

இந்த கிதாபைக் கைப்பற்றும் முஸ்லிம் சகோதரர்களுக்கு தெரிவிப்பதாவது.

இந்த கிதாபில், நமது சங்கையாகிய புறுகானுடைய ஆயாத்துகளும், அஹாதீசுகளும், பொதிந் திருப்பதால் இதைத் தமிழ் கிதாபுதானே என்றிலேசாக எண்ணி கண்ட இடங்களில் வைத்திடாமல் மருங்குடன் வைத்துக் கொள்ள மிகவும் விரும்புகின்றனன்.

இப்படிக்...

உ. ஜெயினுல் ஆபிதீன் சாகிபு.

# வேண்டுகோள்.

இந்தக் கிதாபை நோட்டமிடும் கல்விக் கடல்களாகிய அறிவாளர்களை வேண்டிக்கொள்வ தென்னவென்றால், இக்கிதாபு முதற்பதிப்பான தாகையால் இதில் கண்ட விஷயங்களிலேனும், பாட்டுகளிலேனும், எழுத்துப் பிழைகளிலேனும், அறபி பிளாக் செய்த எங்ரேவர்களால், ஏற்பட்ட அஅருபுகள் தவறுதலி லேனும், குறையுறக் கண்ணுற்றால் இன்சான் மறதியுள்ளவன் என்பதைக் கவனித்துத் தங்கள் தங்களுடைய மன்னிப்பென்னும் போர்வையால் மறைத்து அவைகளை முறைபோல் திருத்திப் படிக்கும் படியாக மிக்கத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். அதுபோல் நல்கருத்துள்ள நல்லோர்களுக்கும், இதனைக் கோர்வைச் செய்தவருக்கும், இதை சஹீஹ்செய்த அறிவாளர்களுக்கும், இதனைக் கோர்வைச்செய்து கொடுக்கும்படி வற்புறுத்தி அச்சிட்டு வெளிப்படுத்திய எனக்கும் அல்லாஹுத் தஆலா அவனது கிருபையால் இரண்டு பதியிலும் நற்கிருபையும் றஹ்மத்தும் செய்வானாக. ஆமீன், யாறப்பல் ஆலமீன்.

இங்ஙனம்,

உ. ஜெயினுல் ஆபிதீன் சாகிபு.

ஆம்பூர், காதர் பேட்டை

நார்த்தாற்காடு.

## பிழை திருத்தம்.

இக் கிதாபைக் கைப்பற்றும் இகுவான்கள் பிழை திருத்தத்தில் கண்ட 8-எட்டு பிழைகளையும் முன்னதாகத் திருத்திக் கொண்டு படிக்கக் கோருகிறேன்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 16 | 9 | இப்லீல் | இப்லீஸ் |
| 17 | 9 | பல்கியவர் | பல்கீயவர் |
| 28 | 10 | ஈஆனுமடன் | ஈமானுடன் |
| 30 | 21 | லதீன பில் | லதீன ஆமனூ பில் |
| 38 | 12 | யாமீனுமின் | யாமீனுமீன் |
| 57 | 1 | பகலில் | பகலிலே |
| 70 | 28 | தண்டித்தும் | தெண்டித்தும் |
| 90 | 8 | பேஈமாம்கள் | பேஈமான்கள் |

புஷாருத்துல் மூமினீன் (ம அ) தன்பீஹுல் ஜாஹிலீன்

என்னும் நூலின்

# அட்டவணை.


| பக்கம். | விஷயம். | இன்ன மெ. பாட்டு முதல். | பாடற் றொகை. |
|---|---|---|---|
| 1 | ஹம்து வ நஅத்து. ... ... ... | 1 | 3 |
| 2 | அவை யடக்கம். ... ... ... | 1 | 9 |
| 3 | நூன் முகம். ... ... ... ... | 1 | 23 |
| 5 | (பலதள் மாறயங்கள்.) | | |
| ,, | அமல்கள் செல்லும் எழுவான வாசற்படி சேதி. ... | 1 | 22 |
| 12 | அல்லாவை பயந்து ஜிப்ரீலும் நபியுல்லாவு மழுதது. ... | 1 | 1 |
| ,, | உமர்றலீ, அலிறலீ அன்ஹுமா உவைஸ் கிர்னைன் அவர்களிடம் இடம்வசியத்து பெற்றது. ... ... | 1 | 12 |
| 16 | இப்ருஹீம் பல்கீ அவர்களை இப்லீசு கலைக்க நாடியது. ... | 1 | 5 |
| 18 | ஒரு ராஜனுக்கு கிலுறுநபீ அலைஹி உபதேசம் சொன்னது. | 1 | 12 |
| 21 | தாஊத்நபீ அலைஹி லுக்மான்அலைஹிஇடம் நான்கு வசிய்யத்துப் பெற்றது. ... ... ... | 1 | 8 |
| 23 | அடியர்களை நரகில் போட காரணம் ஏனென்று அல்லாவிடம் நபீ மூசாஅலைஹி கேட்டது. ... | 1 | 3 |
| 24 | பீபீருபிஅ பஷிரியவர்கள் வணக்கமும் நாட்டமும் கவலையும், ஷை பீபியவர்கள் புருஷர்க்கு பணிவிடைகள் செய்ததும் புருஷர் வபாத்தும். ... ... | 11 | 1 |
| 26 | ஷை பீபியவர்களுக்கு தேறுதல் சொல்ல உஸ்தாதுடன் 11 ஆலீம்களும் சேர்ந்து போனது ... ... | 12 | 2 |
| ,, | ஷை பீபியவர்களை நிகாஹ்தானி செய்துக்கொள்ள உஸ்தாது அவர்கள் நல்மாராயம் சொன்னது. ... | 14 | 3 |
| 27 | ஷை பீபியவர்கள் உஸ்தாதிடம் 8 சுவால், செய்தது. ... | 17 | 2 |
| ,, | 1-வது சுவால், ஆலமே அர்வாஹில் நான் எந்தக் கூட்டத்தில் நின்றேன். ... ... ... | 19 | 3 |
| ,, | 2-வது சுவால் நான் பிறக்கும்போது என்ஹக்கில் சிதேவி, மூதேவியில் எதை எழுதப்பட்டது. ... | 22 | 4 |

| பக்கம். | விஷயம். | இன்ன செ. பாட்டு முதல். | பாடற் றொகை. |
|---|---|---|---|
| 28 | 3-வது சுவால், என் ஒடுக்கம் ஈமானுடனு, அல்லது மாற்றமா. ... ... ... | 25 | 5 |
| 29 | 4-வது சுவால், கபுரில் முன்கர்நகீர் கேள்விக்குப் பதில் கொடுப்பேனு. ... ... ... | 31 | 19 |
| 32 | 5-வது சுவால், கியாமத்தில் எந்தக் கூட்டத்தில் நிற்பேன். | 50 | 14 |
| 34 | 6-வது சுவால், மீஜானில் என் அமலில் எது கனக்கும் ... | 64 | 9 |
| 36 | 7-வது சுவால், பட்டோலை என் வலக்கையில் தரிபடுமா அல்லது இடது கையிலா. ... ... | 73 | 2 |
| ,, | 8-வது சுவால், நான் புல்சிறுத் கடப்பேனு அல்லது தவறி விழுவேனு. ... ... ... | 75 | 4 |
| ,, | அகலை, அல்லா எத்தனை பாகஞ் செய்தானென்று கேட்டது. ... ... ... ... | 79 | 2 |
| ,, | இஷ்கை அல்லா எத்தனை பாகஞ் செய்தானென்று கேட்டது. ... ... ... ... | 81 | 8 |
| 38 | தன்பீஃ. ... ... ... | 1 | 6 |
| 39 | விதியான ஹஜ்ஜை மறந்தவர்க்கு தன்பீஃ. ... | 1 | 24 |
| | (தன்பீஹுல் ஜாஹிலீன்) | | |
| 45 | மீசையை வெட்டாத தாடியை சிறைப்பவர்க்கு தன்பீஃ. | 1 | 36 |
| 51 | உருசு, கொடி, கூடு, முதலியவைகளை விலக்கல். ... | 1 | 60 |
| 61 | முஹற்ரம் மாதம் பிறந்ததைப் பற்றிய நல்மாராயம். ... | 1 | 11 |
| 63 | ஆஷூரு நாள் சங்கை. ... ... ... | 1 | 16 |
| 66 | (ஹுஸைன் றலியல்லாஹு ஷஹீதாக காரணம்) | 1 | 7 |
| 67 | நபீநாயக மவர்களுக்கு பேரர்களுடைய பிரிசம். ... | 8 | 6 |
| 68 | அபூபக்கர் சித்தீக்றலீ, உமர்றலீ இவர்கள் கிலாபத்து. ... | 14 | 1 |
| ,, | உதுமான்றலீ, கிலாபத்தும் மர்வானுல் ஏற்பட்ட கலகமும். | 15 | 6 |
| 69 | மிஸ்றுத் தலைவர் மதீனுகலீபாவின் பேரில் படை எடுத்து போராடினது. ... ... ... | 20 | 1 |
| 69 | உதுமான் றலீயவர்கள் ஷஹீதான துக்கம். ... | 21 | 2 |
| 70 | அலீ றலீ, கிலாபத்தும் மஆவியாறலீ, போர் செய்ததும் ... | 23 | 18 |
| 72 | அலீ றலீ யல்லாஹு வெற்றி பெற்றது. ... ... | 41 | 2 |
| ,, | அலீறலீ யல்லாஹு குற்றஞ் செய்த ஒரு கார்ஜியை கதல் செய்ய செய்தது. ... ... ... | 43 | 1 |
| 73 | அலீ றலீயல்லாஹு ஷஹீதான துக்கம். ... | 44 | 3 |
| ,, | ஹஸன் றலியல்லாஹு கிலாபத்தும் மஆவியா றலியின் மறுப்பும். ... ... ... | 47 | 1 |

| பக்கம். | விஷயம். | இன்ன செ. பாட்டு முதல். | பாட்டுத் தொகை. |
|---|---|---|---|
| ,, | மஆவியாறலீ தனக்கு கிலாபத்து வேணுமென்று கேட்டது. ... ... ... ... | 48 | 4 |
| 74 | மஆவியா றலியவர்களுக்கு ஹஸன்றலீ கிலாபத்தைச் சாட்டியது. ... ... ... | 52 | 4 |
| 75 | ஹஸன்றலீ ஷஹீதான துக்கம். ... ... | 56 | 35 |
| 80 | மஆவியா றலீவபாத்தும் அவர் மகன் யஸீத் ஹாகிமாய் செய்த அழிச்சாட்டியமும். ... ... | 91 | 2 |
| 80 | றாமி என்னும் நசாரு யஸீதுக்கு தந்தரம் சொன்னது. ... | 93 | 4 |
| 81 | குப்யாக்கள் கூபாவுக்குப் போனது. ... ... | 97 | 3 |
| ,, | யஸீதின் இம்சையால் ஹுஸைன்றலீ மக்கத்துக்கு வந்திட்டது. ... ... ... | 100 | 1 |
| ,, | கூபிகள் மக்கத்துக்கு கடிதங்கள் எழுதினது. ... | 101 | 1 |
| 82 | கூபா புத்திமான்கள் ஹுஸைன்றலியிடம் வந்தது. ... | 102 | 1 |
| ,, | ஹுஸைன்றலீ கூபாவுக்கு பிரயாணமாக முஹாஜரீன்கள் தடுத்தது. ... ... ... | 103 | 2 |
| 82 | முஸ்லிம்றலீ கூபாவுக்குப் போனது. ... ... | 105 | 3 |
| 83 | முஸ்லிம்றலீ கடிதங் கண்டு ஹுஸைன்றலீ குடும்பத்துடன் கூபாவுக்குப் புறப்பட்டது. ... | 108 | 2 |
| ,, | யஸீத் ஆர்டர்போல் பக்தாது கவர்னர் கூபாவுக்கு வந்தது. | 110 | 2 |
| 84 | கூபாத் தலைவரும் முஸ்லிம் றலியும் ஷஹீதானது. ... | 112 | 4 |
| ,, | ஹுஸைன்றலீ கூபாசேதிகளை முசாபிரைக் கேட்டது. ... | 116 | 4 |
| 85 | மதீனபுறம் இரவில் திருப்பிய வாகனங்கள் காலையில் கூபா எல்லையைச் சேர்ந்தது. ... ... | 120 | 1 |
| ,, | அப்துல்லா பின்ஸயாது முற்றுகை போட்டது. ... | 121 | 1 |
| ,, | கர்பலா தலத்துக்கு அன்னந் தண்ணீர் போகவிடாது ஆர்டர் செய்தது. ... ... ... | 122 | 1 |
| ,, | சண்டை ஆரம்பமாய் தோழமார்கள் ஷஹீதானது, ... | 123 | 1 |
| ,, | ஹுஸைன் றலீயல்லாஹு சண்டைச் செய்து பசியால் களைத்தது. ... ... ... | 124 | 2 |
| 86 | பாகர் என்போன் ஹுஸைன்றலீயை யஸீதுக்கு பைஅத்துச் செய்யச் சொன்னதும் பதிலும். ... | 126 | 1 |
| ,, | அப்துல்லா பின்ஸயாது ஷுமருக்கு ஆர்டர் செய்தது. ... | | |
| 87 | ஹுஸைன்றலீ ஷஹீதான துக்கம். ... ... | 130 | 5 |
| ,, | பீபீஉம்முகுல்தூம் மனமில் நபியுல்லா அவர்களை அலங்கோலமாய் கண்டது ... .. ... | 136 | 3 |
| 88 | கர்பலாவில் யஸீது கூட்டத் தார்களின் கொண்டாட்டம். | 1 | 9 |
| 89 | அஹ்ல பைத்துகளின் பரிதாபம். ... ... | 1 | 12 |

| பக்கம். | விஷயம். | இன்ன நெ. பாட்டு முதல். | பாட்டு தொகை. |
|---|---|---|---|
| 91 | முஹர்றமைக் கொண்டாடும் மூடர்களுக்கு தன்பீஃ. ... | 1 | 33 |
| 97 | சர்க்கிருவின் சவுக்கின் கோலம். ... ... | 34 | 7 |
| 98 | பஞ்ஜா உயிர்பெற்று எழும்பி உட்காரல். ... | 41 | 5 |
| ,, | முஜாவர் காணிக்கைப் பெற்று நேர்ச்சை யாளர்க்கு தரும் சாம்பல் வெகுமதி. ... ... ... | 46 | 9 |
| 100 | பஞ்ஜாவை எடுப்பதின் மகிமை. ... ... | 55 | 10 |
| 101 | நேர்ச்சையாளர்களின் பாணக்கம் கிச்சிடி. ... | 66 | 3 |
| 102 | நேர்ச்சைக்கு பாத்திஹாஓதும் லெப்பை மோதீன்களுக்கு தன்பீஃ. ... ... ... | 69 | 3 |
| ,, | கிதாபின் முடிவுரை. ... ... ... | 72 | 6 |


அட்டவணை முற்றிற்று.

---

## அஹ்ஸனுல் முனாஜாத் (லிதப்இ) குல்லில் பலிய்யாத்.

முஸ்லிம் சகோதரர்களே! இந்த றிஸாலாவில் எந்த நாளும் றஹ்மானிடம் நாம் கெஞ்ஜி கேட்கும் து ஆக்களுடன் இன்னும் பஞ்சம், வாந்திபேதி, பிளேக், விஷஜுரம் முதலிய ஆபாத்துகள் நீங்க கேட்கும். முனாஜாத்துகளை படிப்பவர் கேட்பவர் மனதில் இரக்கமும் ஊக்கமும் வருத்தும் வண்ணமாக மழைபைத்து, தாலாட்டு, கண்ணிகள் முதலிய இராகங்களால் கோர்வைச் செய்யப்பட்டு முதற் பதிப்பு 6 மீ க்குள் செலவாய் சுமார் 2 வருட காலமாக வரப்பட்ட ஆர்டர்களுக்கு இல்லை இல்லை என்று எழுதிய ஷை றிஸாலாவும் மேல் விஷாரம்-வாயிஸ் மா. அப்துல் ரஜாக் சாகிபவர்களால் அச்சிட்டு கமிஷனுக்கு விற்பனை செய்ய நம்மிடமும் தயாராக இருக்கிறது.

ஷை தமிழ் கிதாபு 1-க்கு, 0—4—0 வி. பி. யில் 0—7—0

ஷை 10 கிதாபு வி. பி, யுள்பட ரூ. 3—2—0

ஷை அறபு தமிழ் கிதாபு 1-க்கு 0—6—0 வி. பி. யில் 0—9—0

ஷை 10 கிதாபுக்கு வி. பி. யுள்பட ரூ. 4—6—0

கைப்பற்றுமிடம்.

உ. ஜெயினுல் ஆபிதீன் சாகிபு.

காதர்பேட்டை ஆம்பூர் P. O.

நார்த்தாற்காடு.

புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்னுமிந்த ரிஸாலாவை
பெண் பிறவிகளும் அவசியம் படிக்க வேண்டியிருப்பதால் இந்த தமிழ் ரிஸாலாவுக்குச் சரியாக
அறபுத் தமிழிலும் அச்சிட்டு தயாராக இருப்பதின் சுருக்க விளம்பரம்.

عَرَبُ تَمِضْ بُشَارَاةُ الْمُؤْمِنِيْنْ (مَعَ) تَنْبِيهُ الْجَاهِلِيْنْ، اِخْوَانْكَضِيْ اِنْتَ كِتَابِلْ چُمَارْ ٥ بَكَّمْ وَرِيلْ فَلْ نَمَارَا يَمِنْرُ فِيْشِيْضُ
نَلْمَارَا يِيْكَضِيْ وِفِرِكْ اِنْتَ چِرُوَرِكِيْ اِدْ نَتْرَاتْ كِتَابِيْ كِيفِرْ بَارِكْ وِشَيْغَكَضَيْكَبَدْ اَنْتِيفُو رْكَضُكِيْ تَرِيُمْ، اِنَّمْ بَاوِغِكَضَانْ كَرُ
مِعْكَضِيْ اَكِرْ فِبْفَاكْ فِيْشِ يُضَتُ، اِنَّمْ بِيْ رَابِعَه بَصْرِيْ رَحْمَةُ اللهِ اَوَرْكَضْ نَادْمُمْ كُوْ لَيِمْ وَبَكَمْ، اَوَرْكَضْ تِغْكَضْ
اُسْتَاذِ دَمْ سُوَالْ چِيْتُكَضُمْ فِيْشِ يُضَشِيْ فَارِكْ تَارِكْ فُثْمِيَا كُوِيْ كَانُمْ، اِنَّمْ نَانْكُ تُوْضَرْ كَضُبْدِيْ خِلَافَتْمْ، عُثْمَانْ
رَضِ عَلِيْ رَضِ حَسَنْ رَضِ اَوَرْكَضْ شَهِيدَانْ كَارَنَمْ دُكَعَكَضُمْ، حُسَيْنْ رَضِيَ اللهُ شَهِيدَاكْ كَارَنَمْ، مَرْوَانْ. يَزِيدْ
رُوْمِ. نَصَارَاوِنْ تَنْتِرْعِكَضْ. عَبْدُ اللهِ بْنِ زِيَادِنْ كُدُ مِيكَضْ، كُوْفَةْ كَارْچِيْتِ. كَرْبَلَا چَنْدِيْ تُوْضَمَارْ كَضُبْدَتْ
حُسَيْنْ رَضِ شَهِيدَانْ دُكَعَكَضْ اَهْلُ بَيْتُكَضْ فِرْثَافَمْ. يَزِيدْ كُوْدَمْ چِيْتْ فِرِكَاشَمْ اِكَالْتِلْ مُحَرَّمْ مِيكَبْدَ اُدَمْ مُوْدِرْ
كَضُكْ فَلْ اُفِيْشَغْ كَضُمْ، اَرْفُثْمَاكْ كَانْ كِيْضَكْ كُوْدِيْتَايْ فِيْفِرْ وِكَضْ فَارْتَمِلْ چِيْ عَرَبُ تَمِضِلْ چِلْفْ كَافِكَضْ
اَچِّدْ فَدَتْ. كِتَابُ اُنْكُ رُوْفَه اَنْرُوِيْ فِيلْ اَرُرُوْفَه نَالَنَا

# மதிப்புரைகள்.

இந்த புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்னும் ரிஸாலாவை நோட்டமிட்ட சங்கைபொருந்திய உலமாக்களின் அபிப்பிரா யங்களாவன.

இந்தியா முழுது மிலங்கிவரும் இலங்கைதீவு முழுதும் துலங்கி வரும், வேலூர், மதறஸே, பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் ஆலீ ஜனாப், நாயிபே நாதிரும் முதற் ரிஸுமாகிய ஹலரத்து ஆலிமே அல்லாம, மவுலானா மவுலவீ, அப்துற் ரஹீம்சாஹிபவர்கள் அபிப் பிராய மெழுதியதாவது :—

புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்கிற ரிஸாலாவை நான் பல இடங்களில் வாசிக்க சொல்லி கேட்டேன். இந்த ரிஸாலாவை கோர்வைச் செய்தவர் ஆலீம் மவுலவீகளுடைய சுஹுப்பத்திலிருந்து அவர்களிடம் பைலுபெற்று அவர்களுடைய நல்பேச்சுகளைக் கேட்டும் விசாரித்தும் பைத்துகளினால் குறுஆன்ஷரீப் இன்னும் சஹீஹான ஹதீதுகளினால் தற் சமயம் அவாம்களில் நடக்கும்படியான ஷிர்கு, பிதஅத் துகளை இந்த கிதாபில் றத்துசெய் திருக்கிறார்கள். அல்லாஹுத்த ஆலா (அஹ்ஸன்) சாகிபவர்களுக்கு அவர்களுடைய முயற்சிக்கு நற் கூலி கொடுப்பானாகவும். இந்த கிதாபினால் மூமினானவர்களுக்கு கிதாபின் பெயரைப்போல் பாயிதா செய்வானாகவும். முக்கியமாக மூமின்கள் இந்த கிதாபைப் படிக்கும்படியாக நான் விரும்புகிறேன். அல்லாஹுத்த ஆலா அஹ்ஸன் சாஹிபுடைய நிய்யத்தில் இகுலா சைக்கொடுத்து இந்த கிதாபு ஜனங்களிடத்தில் மக்பூலாகும்படி செய்வானாகவும். ஆமீன் பிஹுர்மதி தாஹா வயாஸீன்.

இப்படிக்கு.



இதுவும் வேலூர் பாகியாத்துஸ் ஸாலிஹாத்தின் முதற் ரிஸுாம் முப்தீயுமாகிய ஆலிஜனுப், ஹலறத்து ஆலிமே அல்லாமா, மவுலானு மவுலவீ ஷேக்ஆதம் சாஹிபவர்கள் அபிப்பிராயம் வரைந்ததாவது :-

புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுால் ஜாஹிலீன் என்னும் ரிஸாலாவை மேல் விஷாரம் அஹ்ஸன் க. முஹம்மது இப்ருஹீம் சாஹிபு கோர்வைச்செய்த ஷெ ரிஸாலாவை சில பல இடங்களிலிருந்து படிக்கவைத்து கேட்டதில் இஸ்லாம் லஈபான இக்காலத்தில் தீனுக்கு விரோதமான நடத்தைகளில் அதிலும் முக்கியமாக முஹற்ரம் இன்னும் அவ்லியாக்களுடைய உருஸில் நடத்திவரும் பெரும் பாவங்களை யாபேர்களும் நன்ருய்த் தெரிந்துக் கொள்ளும்படியான நசீஹத்துகள் அநேக மிதால்களைக்கொண்டும் றத்துசெய்திருக்கிருர். இஸ்லா மானவர்கள் அதை கொள்ளை வாழ்க்கையாக பாவித்து அதில் நின்றும் பிரயோஜனம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அல்லா சாகிபு கோர்வைச் செய்தவருக்கும் நல்கூலியைக் கொடுத்து இன்னும் மூமினுனவர்களும் அதை நோட்டம்செய்து அமல்செய்யும் படியான தௌபீகை கொடுப்பாருக ஆமீன்.

இப்படிக்கு.




வளத்தூர் ஆலீஜனுப், ஹலறத்து ஆலிமே அல்லாமா, மவுலானு மவுலவீ ஹகீம். முஹம்மது மூசா சாஹிபவர்கள் அபிப்பிராயம் கூறி வரைந்ததாவது:—

புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுால் ஜாஹிலீன் என்னும் ரிஸாலாவின் விஷயமாக மவுலானு மவுலவீ ஷேக்ஆதம் சாகிபவர்களுடைய அபிப்பிராயம்போல் என்னுடைய அபிப்பிராயமும் உண்டு. உண்மையில் பித்ஞக்கள் நிறைந்த இக்காலத்தில் அவாம்கள் இன்னும் மூடர்களுக்கு ஆக இந்த ரிஸாலாவில் சரியான எச்சரிக்கையா இருக்கிறது. இன்னும் ஷிற்குபித ஆத்துகளில் நின்றும் பேணிக்கொள்வதற்காக இந்த ரிஸாலா போதுமானது.

அவசியம் மிக அவசியமாக தமிழ் அறபுத் தமிழ் தெறிந்த ஒவ்வொரு முஸ்லிம்களும் இதைக்கொண்டு பாயிதா பெற்றுக்கொள்வார்களாக. ஆமீன்.

இப்படிக்கு.



மேல் விஷாரம் ஆலிஜனுப், ஹலறத்து மவுலவீ ஆலூர் முஹம்மது ஜஅபர் சாஹிபவர்கள் அபிப்பிராயந் தெரிவித்ததாவது :—

எங்கள் ஊர் (அஹ்ஸன்) அவர்கள் கோர்வைச்செய்த புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்னும் றிஸாலாவை நோட்டமிட்டதில் இந்த றிஸாலா மூமினனவர்களுக்கு துனியாஆகிர மிரண்டு பதியிலும் வெற்றிபெறும் நல்மாராயங்களை காண்பிக்கக் கூடியதாகவும் ஷிற்கு, குபிர்களை யகற்ற ஓர் வழிகாட்டி போலவுமுள்ள றிஸாலா என்றும் ஒவ்வொரு முஸ்லிம்களும் பார்த்து அமல் செய்யக்கூடிய றிஸாலாவென்று முழுமனதுடன் நம்புகிறேன்.

இங்ஙனம்.



மேல் விஷாராம் ஆலிஜனுப், ஹலறத்து மவுலவீ கதீப் அப்துல் கையூம் சாஹிபவர்கள் அபிப்பிராய மெழுதியதாவது:—

இந்தக் கடைசீஸமானுவில் சங்கையாகிய ஷறஉக்கு மாற்றமாக அநேகர் தீனை வீணுக்கி வீணை தீனுக்கி நடக்கும் முஸ்லிம்களுக்கு பலவிதமான நல்மாராயங்களையு முபதேசங்களையும், அறபீ, பார்ஸீ, உறுது பாஷைகளில் அனந்தமாக றிஸாலாக்கள் அச்சிட்டு வெளிவந்திருப்பவைகளை அப்பாஷைக ளறியாத முஸ்லிம் பிறவிகளறிந்து பாவமான கருமங்களைவிட்டு விலகிக்கொள்ள எதுவில்லாப் பெருங் குறைவாக இருந்தது. இக்குறைகளை யகற்ற நாயனுடைய கிருபை

யால் எங்கள் ஊர் (அஹ்ஸன்) அவர்கள் கோர்வைச்செய்த புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்னும் றிஸாலாவை யான் நோட்டஞ் செய்தவரையில் மூமினோர்களுக்கு நல்மாராயங்களும், மூடர்களுக்கு தன்பீஃகளும் ஷிற்கு, குபிரான கொடிய பாவமான கருமங்களை யகற்றவும், உரூஸு, கோடி, கூடு பஞ்ஜா முதலியவற்றை வைப்பதாலும் எடுப்பதாலும் நேரிடும் தீங்குகளையும், அநேக தம்ஸீலாத்துகளுடன் தமிழிலும், அறபுத்தமிழிலும் அபியாத்துகளாகப் பேசியுள்ளவைகளை ஒவ்வொரு முஸ்லிமக்களும் படித்தறிந்து அமல்கள் செய்ய மிக்க அவஸ்யமான றிஸாலாவென்று நம்புகிறேன்.

இப்படிக்கு.



ருணிப்பேட்டை ஆலிஜனுப், ஹலறத்து மவுலவி ஹாபிஸ் சே. முஹம்மது இப்ராஹீம் சாஹிபவர்கள் அபிப்பிராய மெழுதிய தாவது :—

மேல்விஷாரம் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்றாஹீம் சாகிபவர்கள் கோர்வைச்செய்த புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்னும் றிஸாலாவில் மூமினனவர்களுக்கு பலவித நன்மாராயங்களும் மூடர்களுக்கு அநேக உதாரணங்களுடன் உபதேசங்களும் இன்னும் குபிற், ஷிற்கு முதலியவைகளை விலக்க நற்போதனைகளும் பேசியுள்ளவைகளை முஸ்லீமாகிய ஆண் பெண்கள் பார்வையிட்டு அமல்செய்யத் தகுமான ஓர் புதினமான றிஸாலாவென்றும் இதைக் கண்ணுற்றவர்கள் மூர்க்கத்தை விட்டு மார்க்கத்தைப்பற்றி றஹ்மானுதவியால் நல்நடக்கைகளைப் பற்றலாகுமென்றும் ஹக்த ஆலாவினிடம் ஆதரவு வைக்கிறேன்.

இப்படிக்கு.



தேன் இந்தியாவெங்கும் பிரசித்திப்பெற்ற வாயிஸ், மேல் விஷாரம் ஆலிஜனுப், மா. அப்துல்றஜாக் சாஹிபவர்கள் அபிப்பிராய மெழுதியதாவது :—

எங்கள் ஊர். அஹஸன். க. முகம்மது இப்ருகிம் சாகிபவர்கள் கோர்வைச்செய்த புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பிஹுல் ஜாஹிலீன் என்னும் கிதாபை நான் பார்வையிட்டதில், இந்த பித்ஆ நிரம்பிய காலத்தில், முஸ்லிம்களில் பிறந்து தீனுக்கு விரோதமாக மூர்க்கத்தை மார்க்கமாய் கொண்டாடும் மூடர்களுக்கு பற்பல வித உவமைகளுடன்உபந்நியாசங்களைப் பேசியுள்ளார். இன்னுமிந்த றிஸாலாவில் உருஸு,கொடி,கூடு,பஞ்ஜா, முதலியவற்றைக் கொண்டாடுவதால் நேரிடுங் கெடுதிகளையும் இன்னும் ஷிற்கு, குபிற் பிதஆத்துகளை அகற்றவுந் தெளிவாகப்பேசியுள்ளார். இன்னும் முஹற்றமாத்தையின் நல்மாராயங்களும் ஆஷூறுநாளில் செய்யும் அமல்களையும் அதின் புண்ணியங்களையும், இன்னு மந்நாளையில், செய்யிதினா ஹுஸைன் றலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பேரில் நேர்ந்த ஆபாத்துகளுக்குக் காரணங்களும், அவர்கள் ஷஹீதானதுமதின் துக்கங்களும் இன்னு மிக்காலத்தில் சிலர் மார்க்கக் கல்வியையுணராது மூர்க்கத்தனமாக ஆங்கிலேய கல்வியையுணர்ந்து புது நாகரீகத்தைக் கொண்டாடுபவர்கள் கோலங்களையும், இன்னும் பலவித நற்போதனைகளை பலவித உவமைகளுடன் மிக்கத் தெளிவாகவும் பேசியுள்ளார். இந்த றிஸாலாவில் பொதிந்த விஷயங்களை முஸ்லிம் பிறவிகள் யாவருமறிந்து நல் அமல்களைப்பற்ற இது மிக்க அவசியமான றிஸாலாவென்று நம்புகிறேன்.

இப்படிக்கு.



அறபி, பார்சீ, உருது, அரவீ, ஆங்கிலேயம், ஆக இவ்வைந்து பாஷைகளில் தேர்ந்த சங்கைவான், மதருஸ் பெரியமெட்டு மண்டி ஆலீஜனுப், மலையாளம் அ. அப்துல் ரஹீம் சாஹிப் மாஹிர் அவர்கள் அபிப்பிராயம் எழுதியது :—

புஷாருத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன் என்னும் புத்தகத்தை நான் நோட்டமிட்டதில் இக்காலத்தில் அறிந்துமறியாதும் சில ஜனங்கள் செய்துவரும் கொடிய நடவடிக்கைகளை யகற்றவும் முஸ்லிமக்கள் இகபர மிரண்டிலும் ஜெயம்பெறும் வழிகளை சுட்டிக் காட்டியும் படிப்பவர் கேட்பவர் மனதில் பதியும் வண்ணமாக மேல் விஷாரம் (அஹ்ஸன்) க. முஹம்மது இப்றுஹீம் சாஹிபு அவர்கள் பாடல்களாகக் கோர்வைச் செய்து இதைத் தமிழிலும் அறபுத்தமிழிலும் அச்சிட்டிருப்பது முஸ்லிமாகிய ஆண் பெண்களுக்கு நல் மாராயங்களைத் தெரிந்துக்கொள்ள அவசியமான புத்தகமென்று நம்புகிறேன்.

இப்படிக்கு.



பிஸ்மில்லா ஹிற்ரஹ்மா நிற்ரஹீம்.

# புஷாரூத்துல் மூமினீன்

(மஅ)

## தன்பிஹுல் ஜாஹிலீன்.

காப்பு-வெண்பா.

பன்னும் புஷாரூத்துல் மூமினீ னத்துடனே
தன்பீஹுல் ஜாஹிலீ னிதைப்பாடவே-என்றுமுயர்
*முன்னூற் பின்னூற் கெட்டா முதலவனே
மன்னவனே நீயிதற்கு காப்பு. (1)

—(:)—

ஹம்து-வ நஅத்து.

கும்மி இராகம்.

எல்லாம் படைத்தாளும் வல்லவ னாயவன்
ஏகாந்த புகழுக் குடைய வனாய்
நல்லார் பொல்லாருக்கு நரகம்சுவர்க் கத்தை
நாட்டி வைத்தா னவன் தீனோர்களே. (2)

முந்தி மயில்வடி வாயிருந்து பிந்தி
மூவுல குக்கர சாகிவந்த
அந்த மில்லான்னபி பேரில்சல வாத்தை
அன்பாக சொல்லிபின் கேட்பீர்களே. (3)

——(:)——

* முன்னூற் பின்னூற் என்பது, முன்னூல் பின்னூல் என்றறிக.

## அவையடக்கம்.

கும்மி இராகம்.

அல்லாவின் பொருத்தமும் அவனுலீ டேற்றமும்
அடியர்கள் யாவர்க்கும் வேண்டு மல்லால்
பொல்லாப் பாவங்களைப் போக்கிநல் அமல்செய்யப்
புகழுக் குடையவன் காப்பாமே. (1)

ஆலநபியுல்லா உம்மத்தி லேசிலர்
அவர்களின் மூர்க்கத்தை மார்க்கமாக
ஓலமுடன் செய்யும் பிறவிக ளதைவிட
உரைக்குமிந் நூல்பெயர் கேட்பீர்களே. (2)

புஷாருத்துல் மூமினீன் தன்பீஹுல் ஜாஹிலீன்
புகழான தீனுள்ள மூமினோர்க்கு
இஷாரத்து செய்யவும் ஜாஹில்க ளுக்கிது
எற்றவழி காட்டும் தீனோர்களே. (3)

قَالَ النَّبِيُّ صلعم. اَلْغَفْلَةُ مِنَ اللّٰهِ مِنْ اَكْبَرِ الْكَبَائِرِ ○

(ஹதீஸ்) அல்கப்லது மினல்லாஹி மின்அக்பரில் கபாயிர்.

அல்கப்லதுமினல் லாஹிஎனும் ஹதீஸ்
அல்லாவை மறப்பது பெரும்பாவத்தில்
பொல்லாப் பெரும்பாவ மாகுமென்று இதைப்
புகழான நபியுல்லா சொன்னார்களே. (4)

அல்லாவை மறப்பதே பெரும்பாவ மென்பதை
அறியாமல் இணைவைக்கும் பாவமதும்
பொல்லாக் கொடிக்கூடு பஞ்சாவைத் தெடுத்ததை
பூஜித்து வெகுபேர்கள் கெட்டார்களே. (5)

அழியும் உலகாசை சதமாக சிலரெண்ணி
அல்லாற சூலுக்குப் பொருத்த மில்லா
பழிப்பான கருமத்தைப் பண்பாக உகந்தவாள்
பாவத்தைக் கிரயமாய்க் கொண்டார்களே. (6)

அவர்கள் நடக்கையை அஃஸன் கண்டுசொல்லும்
ஆகாத கருமத்தை இனியாவது
தவறு தகற்றியே தனியோனல் ஜெயம்பெற
தகுந்தநல் அமல்தேடி செய்வீர்களே. (7)

இந்தச் சிறுநூலில் இன்சான் மறதியால்
எதுங் குறைகண்ட அறிவாளர்கள்
அந்தமாய் திருத்தியே கொள்ளும் நல்லோர்கட்கு
ஹக்கன் றஹ்மத் துண்டாக ஆமீன். (8)

முசுலிம்கள் யாவர்க்கும் முன்னேன் தெளபீ கிந்து
மூர்க்கத்தை நீக்கியே மார்க்கம் பற்ற
விசுவாச மாய்பல நல்மாரா யஞ்சொல்ல
விருப்பமாய் கேளுங்கள் தீனோர்களே. (9)

—(o)—

## நூ ன் மு க ம்.

---

மஸனவீ—இராகம்.

புகழனைத்தும் ருஜனும்எஜ மானுக்கு
புகழசக்தி இல்லைஎந்த நாவுக்கும். (1)

மண்ணில்மனுவை படைத்துமருங்கிந் தோனுக்கு
எண்ணிலடங்காப் புகழுசொந்த மவனுக்கு. (2)

உதிரத்தைஅமு தாக்கிநமக்கு ஊட்டினான்
பதியிற்பற்பல உயிருக்கிரணந் தருகிறான். (3)

நல்லார்பொல்லார் பேரில்நோட்ட மவனுக்கு
எல்லோரும்நல்லோ ராகதேட்ட மவனுக்கு. (4)

துஷ்டனுடைய நாட்டம்போல கொடுக்கிறான்
கஷ்டம்பலதில் இஷ்டனைசோ திக்கிறான். (5)

துஷ்டருக்கு நிஅமத்தாயிர மாகவே
கஷ்டமில்லா தந்தான்றிஸ்கும் சுகத்தையே. (6)

தோஸ்துகளுக்கு அடிக்கடிதுயர் தருகிறான்
வாஸ்துவந்தன் தோஸ்த்தைப்பரிசோ திக்கதான். (7)

பைத்துல்லாவில் படைத்தான் * ஸிந்தீக்பாவியை
புத்கானுவில் தந்தான் † ஸித்தீக் அவர்களை. (8)

அல்லாமாஷைத் தானைமல்வூ னாக்கினான்
இல்மைபடிக்கா உம்மியைநபி யாக்கினான். (9)

பல்அமேபா ஊருக்குநர காக்கினான்
நல்பதியை ஜஹலின்மகனார்க் காக்கினான். (10)

பிர்அவ்னின்மனைவி துய்யமூமி னாகவும்
பிரிசநபினூத் மனைவிகாபி ராகவும். (11)

ஆஜர்மகனார் நபிகலீல் ஆகவும்
ருஜர்நபிநூஹ் மகன்வளிகே டாகவும். (12)

அழுகையால்யஅ கூபுநபிகண் போகவும்
புழுகறிப்பைய் யூபுநபிமே லாகவும். (13)

கர்பலாவில் நபியுல்லாதம் கண்மணி
பிரிசு லஹ்று பெரும்ஹு ஸைன்கல் புக்கனி. (14)

ஜாலிம்கள்கை யாலேஆக வும்ஷஹீத்
போலியவன்தன் னுடல்பெற்றானே யஸீத். (15)

கடினஸிந்தீ கையவனும் நாடினால்
நொடியில்மூமி னாக்கிடுவான் கிருபையால். (16)

---

* ஸிந்தீக்பாவியை என்பது, அபூஜஹல் பாவியை என்றறிக.
† ஸித்தீக்அவர்களை என்பது, அபூபக்கர் சித்தீக்றலி அவர்களை [என்றறிக.

பட்டணம்பஹ் ருக்கிபஹ்ரைப் பட்டணம்
தட்சணமவன் ஞடில்காடா யாகிடும். (17)

மாடக்கூட மாளிகையின் கட்டிடம்
நாடஅவனுங் குட்டிச்சுவரா யாகிடும். (18)

எண்ணிலடங்கா மால்மிகுத்த பொக்கிஷம்
திண்ணமாயவன் ஞடபறந்துப் போயிடும். (19)

இந்தறப்பை மறந்துஎமாந் திருப்பது
நிந்தனையிரு லோகிலுந் தவாரதது. (20)

ஆகையாலே மூமினுணு பெண்களே
ஜாகைப்புவியை சதமென்றெண்ணு தீர்களே. (21)

ஹக்கன்பொருந்தா வேலைசெய்யா தீர்களே
தக்கஷறஐ தவிர்ந்துநடக்கா தீர்களே. (22)

நம்முடைய நல்அமல்க ளானதே
நம்பிநாயன் றனைமறந்தோர் கேளிதே. (23)

——(o)——

## அமல்கள் செல்லும் ஏழுவான வாசற்படி.

—(o)—

### ஹ தீ ஸ்

தொங்கல்.

அருளி ஞர்மஆத் றலியல்லாஹு
ஹக்கன் னபியுல்லா ஒருநாளையில்
சருகா தம்தலை வானுயர்த்தி
சங்கை வல்லானை ஷுக்றுசெய்து
அருளினர் ஹக்கன் கல்குகளை
அவன் ஞட்டம்போல எவுகின்றான்
கரும மிதைசொல்லி எனையழைக்க
கருணை நபிமுன்னே ஹாலருனேன். (1)

உனக்கு யான்மஆத் ஒருஹதீஸை
உரைக்கி றேனதை நீயாபித்து
மனதில் கொண்டதை நீநடந்தால்
மவுலா திருமுன்னே உமக்குதவும்
வினவ விதைநீயும் மறந்து விட்டால்
வேந்த னும்அல்லா உனேகேட்கையில்
உனக்கு பதில்தர முடிந்திடாது
ஒமஆஜிதைக் கேளு மென்றார். (2)

ஹக்கன் வானேழும் படைக்கு முன்னே
அவனேழ் மலக்குகள் தமைபடைத்து
தக்க ஏழுவான் வாசலுக்கும்
தவறு தொவ்வொரு *தர்பான்களே
ஷக்கில் லாமலே காவலாக்கி
சட்டம் சிலபல தவர்க்குச் சொல்லி
ஹக்காம் அமல்களே உள்ளேவிடும்
ஆகா தமல்களே யகற்று மென்றான். (3)

அடியன் பஜர்தொடுத் தஸ் தம்வரை
அமல்கள் செய்வதைக் காதிபீன்கள்
வடிவராம் ஒளிதட்டி லேந்தியேமுன்
வான வாசலிற் கொண்டுபோக
கடினதர் பான்மலக் குறைப்பார்
கனத்த இவ்வமல் செய்திருந்த
அடியன் முகத்திலே வீசாட்டுங்காள்
ஆகும் நான் †கீபத் மலக்காகுவேன். (4)

அல்லா எனக்குச்செய் யேவல்கேளும்
அடியன் எவனேனும் கல்குகளின்
பொல்லா கீபத்துச் செய்வோனுட
புண்ய அமல்களே யுள்ளேவிடா

---

* தர்பான்கள் என்பது, காவலாளர்கள் என்றறிக.

† கீபத் என்பது, புறம்பேசல் என்றறிக.

எல்லே யுடன்காக்க ஏவல்செய்தான்
இவ்வ மல்புறங் கலந்ததினுல்
இல்லே யிதுபோக இங்குவழி
என்ன விதத்திலுங் கிடையா தென்பார். (5)

இரண்டா வதுகிபத் தில்லாதொத்தன்
ஏற்ற அமல்களே தட்டிலேந்தி
பிரகா சத்துடன் மலக் கொருவர்
பிரிய மாய்கொண்டு போகும் போது
இரண்டாம் வானத்தின் தர்பான் பார்த்து
இந்த அமல்செய்தோன் முகத்தில்வீசும்
பாமப் புவிதேட செய்த அமல்
படைத்தோ னிடஞ்செல்ல லாகாதென்பார். (6)

மூன்ருவது ஒத்தன் தொழுகை நோன்பு
உகந்து செய்ஸகாத் ஹஜ்ஜுடனே
உளன்றலாய் செய்த நலவுகளே
ஒளிவின் தட்டத்தி லேந்தி செல்ல
மூன்ரும் வானத்தின் தர்பான் கண்டு
உகந்தி தைச்செய்தோன் முகத்தில் வீசும்
தோன்றுந் * தகப்புர் செய்த அமல்
துடர்ந்து செலவழி யில்லேஎன்பார். (7)

நான்கா வதுஒரு அடியானுட
நலத்த தொழுகைதஸ் பீஃதஹ்லீல்
நோன்பும் ஹஜ்ஜுடன் உமறஃவையும்
நூரின் தபகிலே எந்திப்போக
நான்காம் வானத்தின் தர்பான்பார்த்து
நன்ரு இதைச்செய்தோன் முகத்தில்வீசும்
உளன்றலாய் குறூர்செய்த அமல்
உயர்த்த வழிஇங்கு இல்லேஎன்பார். (8)

* தகப்புர் என்பது, பெருமை.

ஐந்தா வதுஒத்தன் செய்அமலே
 அழகா மணபெண்போல் சிங்காரித்து
ஐந்தாம் வானத்திற் கொண்டுபோக
 அருள்வா ரவ்வானின் தர்பான்கண்டு
இந்த அமலிலே போருமையும்
 இறையோ னுலமாக்கள் ஆபித்கள்மேல்
எந்த நாளுமே எரிந்துக் காய்தல்
 இருப்ப தால்செல்ல முடியாதென்பார். (9)

ஆரு வதுஒத்தன் அமல்கதிர்போல்
 அனந்த தஅரீபா வந்திப் போக
ஆரும் வானத்தின் தர்பான் பார்த்து
 அமல்க ளதையல்லத் தட்டிசொல்வார்
பேராம் கல்நெஞ்சன் இறக்க மில்லான்
 படைத்தோ னடியர்க்கு துயரீந்ததை
பூராய் சந்தோஷித் திருந்தோன் அமல்
 போகவ ழிஇங்கு இல்லைஎன்பார். (10)

ஏழா வதுஒத்தன் தொழுகை நோன்பு
 ஏற்ற சத்காவும் தக்வா வையும்
ஏழாம் வானத்திற் கேந்திப் போக
 ஏற்ற தர்பானும் பரிசோதித்து
மீளா திவ்வமல் மனிதர் மெய்க்க
 மிகைப்பாய் செயமனு மெச்சிக் கொண்டார்
மேலாம் அமலிலே* இகுலாசில்லா
 மெலிவாம் அமலிது தள்ளுமென்பார். (11)

எட்டா வதுஒத்தன் றொழுகை நோன்பு
 ஏற்ற ஸக்காத்து ஹஜ்ஜுமுறம்ஃ
திட்ட மாகசெய் நன்றி யுடன்
 திக்கிர் செய்பிகிர் வகைக ளெல்லாம்

* இகுலாசில்லா என்பது, கலப்பறுத வில்லா.

சட்ட மாயொளி தட்டில் வைத்து
சருகா வானேழுங் கடந்துசென்று
மட்டில் லாவல்லான் திருமுன் வைத்து
மறுங்கின் அமலென்று சாட்சி சொல்வார். (12)

அப்போ துஹக்கன் வானோருக்கு
அருளு வான்நீங்கள் வெளிறங்கத்தை
தப்பா தறிந்தவர் நானவனின்
தவறு கல்பதைப் பார்த் திருந்தேன்
மெய்பாய் செய்தவன் அமல்பேரிலே
எனது லஅனத்து என்று பின்னும். (13)

இன்னு மவனெந்தன் கல்குகளை
ஏமாற்ற நாடி அமலே செய்தான்
நன்று நானுகும் * கைபறிவோன்
நம்மை ஏமாற்ற அவனு லாமா
பன்னு மொவ்வொரு மனுவோர் செய்யும்
பாங்காம் அமல்காணுங் கையூபுநான்
என்னை யாபிக்கான் அமலின் பேரில்
எந்தன் லஅனத்து என்று பின்னும். (14)

இன்னு மெழுவானம் புவியிலுள்ள
எல்லா மலக்குகள் லஅனத் தென்க
நன்று யங்குள்ள மூவாயிரம்
நல்லார் மலக்குகள் நாயகனே
உன்றன் லஅனத்து மெங்களுட
உண்மை யினுமெல்லாப் படைப்புகளின்
வின்ன லஅனத்து மவன்பேரிலே
வேந்தே யாகுக எனவுரைப்பார். (15)

* கைபென்பது, இரகசியம் அல்லது மர்மம்.

இந்த விதம்நபி யவர்கள் சொல்ல
எல்லாங் கேட்டுமெஆ தவர்கள்
சிந்தைத் தடுமாரி அழுது எங்கி
செப்பி னுர்ஹக்கன் திருத்துர்தரே
இந்த ஹாலத்தில் எங்களுட
ஏற்ற மாம்நஜாத் எவ்வாறென்று
புந்தி நொந்தவர் கேட்டப் போது
புகலு வார்நபி ஓமஆதே. (16)

உமது நபியுட செயலைப் பற்றும்
உற்ற அமலிலே தவறதானுல்
தமது ஆகிரத் மீட்கிக் காக
* தத்பீர் செய்யுங்காள் கேபத்தில்லா
உமது இஸ்லத்தை தேடிக்கொண்டு
உகப் பாகமற்ற மனுக்களுட
தமது இஸ்லத்தைப் போக்காமலே
தரித்துத் துண்டாக்கா திருப்பதுடன்
உமது நபியுட செயல்களை நீர்
உண்மை மனதொடு செய்யுமென்றூர். (17)

அப்போ துமஆஜ் எம்† ஹாதியே
அன்பாம் வழிசொல்லு மீட்சிக்கென்க
ஒப்ப முடன்சொன்னுர் ஓமஆதே
உம்மால் தவருனுல் உலகத்திலே
சப்பாய் கூடும்நாள் மஹ்ஷரிலே
சஞ்ச லத்திடா ஜெயம் பெருக
மெப்பா யெத்தனம் மானதுவை
மொழிய சிலதுண்டுங் கேளுமென்றூர். (18)

---

* தத்பீர் என்பது, எத்தனம்.

† ஹாதியே என்பது, நேர்வழி காட்டியே.

புறம்பே சுவதை பயந்துக் கொள்ளும்
புன்மை *ஐபுன்னில் நிறைந்திருக்க
பிறரின் ஐபதை வெளியிடாதீர்
பின்னுமெவரையுந் தாழ்மை யாக்கி
உரமா உம்மேன்மை நாடிடாதீர்
உங்கள் அமல்களை விர்த்திசெய்யும்
பாம துனியாவின் பலதொல்லையில்
பண்பா யாகிரம் மறந்திடாதீர். (19)

இன்னும் உம்மை எல்லோரைக் காண
ஏற்ற நலவாக எண்ணிடாதீர்
பின்னுங் கும்பலில் நீரிருந்தால்
பொல்லா வார்த்தைகள் பேசிடாதீர்
உன்னு வைக்கொண்டு மனுவோர் களின்
உடலைத் துண்டிக்கா திருந்தீ ராகில்
துன்ப நரகத்தின் நாயானது
துண்டிக் காதுந்த னுடலை என்றார். (20)

இன்னு மெதைக் கொண்டு நீர்பொருந்தா
திருப்பீரோ அந்த ஒன்றனதை
நன்றென வெண்ணிப் பிரத்தியார்க்கு
நாடிப் பிரிசமா யாக்கிடாதீர்
அன்பா யித்தகை வேலை யும்மால்
ஆனல் விடுதலை யாவீரென்று
முன்னம் மயில்வடி வாயிருந்த
முஹம்மது நபி எடுத்தோதினர். (21)

இதை தொட்டும் றுவி சொல்லுகின்றார்
இஹ்ஹதீஸ் கேட்ட பின்னர் மஆத்
அதிக மாய்குறு ஆனை ஒதி
அழுது கலக்கமாய் முகம்வாடியும்

* ஐபென்பது, வின்னம்.

பதியாம் புவிவிட்டுப் போம் வரையில்
பயகாம் பர்சொல்லே என்றமட்டில்
அதிநோட் டத்துடன் அமல்கள் செய்து
ஹக்கை பயந்தவர் நடந்தாரென்றார். (22)

—(o)—

## அல்லாஹுத் தஆலாவை பயந்து ஜிப்ராயீலும் நபியுல்லாவும் அழுதது.

— (:) —

ஒருநாள் ஜிப்ரீலும் நபியுல்லாவும்
உரமா யழுகவே ஹக்கன் கேட்டான்
இருவரும் நீங்கள் அச்சந் தீர்ந்தோ
ரென்று நான்சொல்லி யிருக்கையிலே
பெருத்த அழுகைபு மூமக்கேதென்க
பெரியோ னேஅவ்வார்நீ சொன்னாலும்
ஒருகால் நீநாடும் *மக்ரின்பயம்
உரமா யழச்செய்த தென்று சொன்னார். (23)

## உமர்-அலிறலி அன்ஹுமா இரண்டு பேர்களும் உவைஸ் இடம் வசிய்யத்துப் பெற்றது.

மவுத்தின் சிக்கிலே மன்னர்நபி
மருங்கின் உமருடன் அலியை நோக்கி
உவைஸ் கர்னீன் அவர்முதுகில்
உற்ற அடையாள மின்னதென்றும்
அவரிடம் துஆப் பெறுங்க ளென்க
அப்போ கேட்டனர் யாறசூலே

---

* மகர் என்பது, குபாடம்.

உவைஸ் என்னுமப் பெயருடையோர்
ஒரு ஹஜ்ஜுக்கேனும் வந்ததில்லை
அவர்கள் தங்களை சந்தித்திட
அறியோமெனச்சொல்ல நபியுரைப்பார். (24)

இன்பாய் ஹஜ்ஜவர் செய்வதிலும்
என் முலாகாத்து செய்வதிலும்
நன்றியாகிய பெரும் வேலையில்
நாளு மிருக்கிறு ரவையாதெனில்
அன்னை முதுமூப்பி யவருக் குண்டும்
அவர்தம் பணிவிடை செய்துக் கொண்டு
இன்பா யிருப்பதாய் நபியுரைத்தார்
ஏற்ற தாய்சங்கை யறிந் துணர்வீர். (25)

அந்தப்படிதுஆ பெற்றுக் கொள்ள
அலியா ரும்உமர் வெகு காலமாய்
அந்த உவைஸ்வரா சபபினாலே
அதுவே தாகமாய் தேட்டத் துடன்
எந்த மனுக்களைக் கேட்ட போதும்
எமக்கு கர்னனே தெரியா தென்க
விந்தை ஹஜ்ஜுக்கு வந்தோர்களை
விரும்பி அறபாவில் உமருசொல்வார். (26)

இந்தக் கூட்டத்தி லிருப்போர் களில்
எழும்பும் பட்டிகாட் ஜனங்க ளென்றும்
பிந்திகர் னன் ஜனந் தவிர
பிசகா துட்கார்ந்து கொள்ளுமென்க
அந்த சொல்கேட்டு அறபாவிலே
அதிக முதிர்ந்தவர் கிழவர் நின்றார்
பந்த முடனவர் தம்மை உமர்ப்
பார்த்து கர்னன் காராநீர். (27)

முதியோர் ஆமென்க உங்களூரில்
உவைஸ் என்பவ ருண்டோ வென்க
பதிலுண் டுமென்க அவர் காரியம்
பரிசு நடக்கையு மேதுவென்க
அதிக பெயர்பெற்ற மனித னல்ல
அவரோ ஓர் பெருங் குடும்பியல்ல
நிதியா யொட்டகை மேய்த்து வரும்
நீச்சத் தொழில் செய்யுங் கோனுரென்றூர். (28)

அந்த மொழிகேட்டு உமர்நாயகம்
அவரை கேட்டனர் கர்ணைனது
எந்தப் புறமெந்தப் பாதையிலே
எந்தக் காடென்க விபரஞ்சொல்ல
அந்தப் பாதையின் காட்டில் உமர்
அலியும் போகயில் மரத்தடியில்
அந்த முடனுத்தர் கம்பிளிதுண்
டணிந்து முஸல்லாவில் தொழுகக் கண்டார். (29)

தொழுப வர்சலாம் கொடுத்த பின்னர்
துய்தாக சலாமிருவர் சொல்ல
தொழுதோர் பதில்சொல்லி பின்னுமவர்
தொழுகத் தக்பீர்கட்டிக் கொண்டு
தொழுது முடிந்தபின் இரண்டு பேரும்
திரும்ப வும்சலாம் சொல்லி கேட்பார்
பழுதில் லாவல்லான் அடிய ரேயும்
பேரே தென்கஅப் துல்லா என்றூர். (30)

பின்னுங் கேட்கவே முன்போலவே
படைத்தோ னடிமை நானுகு மென்றே
அன்பாயிது போல பத்துதாம்
அவர் சொல்லி தங்கள் யாருஎன்க

என்பேர் உமர் இவர் பெயருஅலி
    என்க கைக்கட்டி எழுந்து நின்று
என்றன்தவறதைப் பொறுக்க வேண்டு
    மெனது பேர்உவைஸ் என்றுசொன்னுர். (31)

அப்போ கம்பளி போர்வை நீக்கி
    அவர்தம் முதுகடை யாளங் கண்டு
தப்பா திவருவைஸ் என்றிருவர்
    தகுமா யோசித்து இவர் எழுமை
ஒப்பமுள நல்லப் போர்வைக் கூட
    உடுத்தக் காணுமென் றவரை பார்த்து
செப்பி ஞர்உமர் உமக்கு சட்டை
    சிறப்பாய் கொடுவரப் போரேனென்ருர். (32)

அருளி ஞர்உவைஸ் இவ்விடத்தில்
    அடிமை எனைநீங்கள் சந்தித்நீரே
அருமை யாகிய இம்முலாகாத்
    அடுத்து போய்வந்து காணமாட்டீர்
தருகும் உம்சட்டை எனக்கு வேண்டாம்
    தரித்த கம்பிளி துண்டேபோதும்
கரும மேனுனல் ஆகிறத்தின்
    கடின மன்ஜில்கள் கடந்துசெல்ல. (33)

போகும் பாதையில் முள்வேலிகள்
    போடப் பட்டதில் பிரையாணிக்கி
ஆகும் சட்டையும் ஜூப்பாவையும்
    அணிந்து அவ்வழிப் போவதானல்
எகும் பாதையில் முள்மாட்டியே
    இழுத்து கஷ்டத்தி லாக்குமதால்
ஆகை யாலிந்த அடிமை தனக்
    கணிந்த கம்பளி துண்டேபோதும். (34)

அந்த மன்ஜில் கள்கடந்துப் போக
ஆகும் குதிரையில் மெலிந்ததுதான்
பந்த முடனல்லப் பார்வையான
பலத்தால் திடத்துடன் புஷ்டியுள்ள
அந்தக் குதிரையில் நடந்துசெல்ல
ஆகா முடியாமல் சிக்குண்டது
சொந்த தலம்போக முடியா தென்னும்
சொல் நசீஹத்தைப் பெற்றுசென்றார். (35)

——(:)——

## இப்ருஹீம் பல்கீ அவர்களை இப்லீல் லஅனத்து கலைக்க நாடியது.

—(:)—

ஒருநாள் இப்ருஹீம் பல்கியவர்
ஒட்டுப் போட்டுடைத் தைத்துக் கொண்டு
சருகா கடலோர மிருக்கையிலே
ஷைத்தான் லஅனத்து வந்துசொல்வான்
பெருத்த செங்கோலை விட்டுமிந்த
பெரிய மிடுமையில் ஆழ்ந்தீரென்று
உருக்க மாகவே மல்ஊன் சொல்ல
உரைப்பார் இப்ருஹீம் பல்கியவர். (36)

இந்தப் பெரும்செங்கோ லெனதைக்காண
இழிவாம்புவி செங்கோல் பெரிதோஎன்க
அந்த மொழியதைக் கேட்டிபுலீஸ்
அருளு வான்கந்தைத் துணிகளுக்கு
விந்தை யாமொட்டுப் போடுகின்ற
விபரீத செங்கோல் பெரிதோ என்க
பந்த முடனப்போ பல்கீ சொல்வார்
பாரடா எந்தன் களிம்பூசியை. (37)

கடலில் வீசுறேனிதை யெடுக்க
கர்த்தன் லஅனத்தே உன்னுடனே
அடவுடனிந்த உலக செங்கோல்
அனைத்துங் கூடியே என்வூசியை
திடமாகத் தேடிக் கொண்டுவர
திரமாய் முடியுமா வென்று கேட்க
உடனே முடியாதுஎன்று சொல்ல
ஊசி யதைபல்கி கடலில் போட்டே. (38)

இந்த நேரமே என்ஊசியை
எடுத்து வாருமோய் மீன்க ளென்க
விந்தையான பொன் தங்கவூசி
வாயில் கவ்வியே மீன்கள்தர
இந்த ஊசிஎன் ஊசி யல்ல
எனது களிம்பூசித் தாருமென்க
அந்த நேரமே யவ்வூசியை
அன்பாய் தேடியோர் மீன்தந்ததே. (39)

அந்த ஊசியை பல்கியவர்
அன்பாய் பெற்றுபின் ஐஇபுலீஸ்
இந்த தௌலத்துப் பெரிதாகுமா
இடராம் புவிசெங்கோல் பெரிதாகுமா
விந்தை சொல்லடா என்றுகேட்க
விசனத் தோடவன் ஏக்கமுற்று
சிந்தையில்மிக நொந்தி புலீஸ்
செல்லாது நம்கை யென்று சென்றான். (40)

——(:)——

## ஒரு ராஜனுக்கு கிலுருநபீ அலைஹி அவர்கள் உபதேசம் சொன்னது.

—(:)—

ஒருவலி யிடம் கிலுருநபி
ஒவ்வோர் சமயத்தில் வருவதுண்டு
அருமையிதை யவ்வூர் அரசன்கேட்டு
அந்த வலிதமக் கருள லுற்ருன்
சருகா தும்மிடம் வரும்கிலுரை
சந்திக்க எனக் காவலுண்டும்
வரும் சமயத்தி லெனக்குச் சேதி
வகையாய்த் தெரிவிக்க வேண்டுமென்ருன். (41)

அந்த அரசனின் சொல்லைக் கேட்ட
ஹக்கன் வலியுல்லா மனதுக்குள்ளே
நொந்து முகம்வாடி இருக்கும் நாளில்
நுவலும் நபிகிலுர் வந்துகேட்க
எந்தன் முகம்வாடக் காரணமும்
இவ்வா றரசனின் ஏவலென்க
அந்த அரசனின் ஏவற்போல
அன்பாய் தெரிவிக்க கிலுரு சொன்ஞர். (42)

அரச னவன்றனக் கதுபோலவே
அன்பாய் ஒலியுல்லா தெரிவிக்கவே
சரச யுடையணிந் தரசனுமே
சங்கை கிலுரிடம் சந்தித்தவன்
பாமன் புரத்திலே ஆயுள்நீட்டம்
பாக்கியம் பெற்றப் பயகாம்பரே
உரமா யுலகத்திற் பலகாக்ஷியை
உண்மை யாய்க்கண்ட முகத்தை நானும். (43)

அன்பு டன்காண ஆவல் கொண்டேன்
அதுபோல் கண்டுநான் அகமகிழ்ந்தேன்
துனியா தனில் தாங்கள் பலகாக்ஷிகள்
துய்தாய் கண்டதிற் சிலதெனக்கு
நன்று தயவுடன் சொல்ல வேண்டும்
நான்நசீ ஹத்துப் பெருகவேண்டும்
என்று கேட்கையில் கிழுருநபி
இயம்பத் தொடங்கினர் காக்ஷியொன்றை. (44)

நான் ஒருபாதைப் போகும்போது
நல்ல செழிப்புள்ள ஒருபட்டணம்
மேன்மை மெத்தையின் வீடுகளும்
மிக்க மனுவுடன் மாடாடுகள்
கூன் முதுகுடன் குதிரைகளும்
கோட்டைக் கொத்தளங் கொடிபறந்துந்
தோன்றுந் துனியாவின் சுகத்துக் கேற்ற
துய்யப் பட்டண மொன்றைக் கண்டு. (45)

அங்குள்ள சில பேரைக் கண்டு
அழகிய இந்தப் பெரும் பட்டணம்
சங்கை யாளப்போ வானதென்க
சாற்றினு ரென்னைப் பார்த் தவர்கள்
பங்கப் புதுமையாய் காணுதும்சொல்
பார உலகத்தை யாண்டவனும்
அங்க துவர்க்கமாய் படைத்தமுதல்
அமைந்த பட்டண மிதுவுண் டென்றார். (46)

சரிஎன்று கேட்டு நானுஞ் சென்று
சருகி சிலபல காலஞ் சென்று
பரிவுட னந்தப் பாதைவர
பட்ட ணமது காடாகியும்

மரிகள் மாடுகள் மேயக்கண்டும்
மந்தை மடக்குவோர் தம்மைக் கண்டு
பிரிச மாபேசி யிந்தகாடு
பிலத்தி லுற்பத்தி எப்பவாச்சு. (47)

சொல்லுமென கேட்க இடையர்களும்
சொல்வா ரும்வார்த்தைப் பெரும்புதுமை
தொல்லை யுலகெப்ப ஆரம்பமோ
துடர்ந்த காடிது உள்ள தென்றார்
நல்ல தெனக்கேட்டு பின்னும் சென்று
நான் சிலகாலம் கடந்த பின்னர்
எல்லை யுடன்வா அந்தக் காட்டை
ஏற்ற அலைவீசுங் கடலாய்க்கண்டேன். (48)

அந்தக் கடலிலே மீன்பிடிப்போர்
அன்பாய் வலைவீசி மீன்பிடிக்க
பந்த முடன்கேட்டே னிந்தக் கடல்
பாரில் உற்பத்தி எப்பவென்று
அந்த முடன்கேட்க பதிலுரைத்தார்
அதிகப் புதுமையும் கேள்வி என்றும்
இந்த உலகது அமைந்த முதல்
எப்போ துமிது கடல்தா னென்றார். (49)

அந்த மொழிகேட்டு புதுமைபட்டு
அகன்று சிலகாலம் சென்றுவந்து
பந்த முடன்பார்க்கப் பட்டணமாய்
பலத்த மாளிகை மெத்தைகளாய்
அந்தமுள தோட்டந் துரவுகளாய்
அங்கு வசிப்பவர் மிகுக்ஷேமமாய்
விந்தை யாய்கண்டு பேரைக்கேட்க
விளம்பி னரிது ஷஹ்ரே ஆபாத். (50)

நன்று சொல்கேட்டு பின்னவானே
நலத்தஷஹ ரெப்போ வானதென்க
சொன்னு ரும்கேள்வி புதுமையிது
சொகுசு மிகவுள்ள ஷஹரே ஆபாத்
பன்னும் புவியிதை யாண்டவனும்
படைத்தா னேஅது முதற்கொண் டிந்த
அன்பின் ஷஹரிது ஆபாத்தென்று
அறியு மென்றிதைச் சொன்னூர்களே. (51)

அப்போ திம்மொழி கேட்டரசன்
அழுது கிலுர்நபி தமக் குரைப்பான்
ஒப்ப முடன்சொன்ன தம்நஸீஹத்
உத்த மர்க்கிது போதும் போதும்
மெப்பா மனதிலே இருத்திக் கொண்டேன்
மேன்மை விடைதாரு மென்று வாங்கி
மெப்பாய் சென்றன ரிக்காலத்தில்
மேலெண் ணங்கொள்வோ ரறிந்துணர்வீர். (52)

தாவுத் நபிஅலை ஹிஸ்ஸலா மவர்கள் லுக்மான் அலைஹி
யிடம் நான்கு வசிய்யத்து பெற்றது.

கும்மி இராகம்

அல்லாவின் ஏவற்போல் இல்மைப் படிக்கவே
ஹலறத்து லுக்மான் அலைஹி இடம்
நல்லார் நபிதாவூத் போய்கேட்க வசிய்யத்து
நான்கை யவர்பற்ற சொன்னூர்களே. (53)

ஒன்றுவ துலகத்தில் உள்ள மட்டும் றிஸ்கை
உமக்காகத் தேடிக்கொள் இரண்டாவது
நன்றாகிர் நாள்நீட்டம் சுருக்கம் கவனித்து
நல்அமல் செய்திடு மென்றூர்களே. (54)

மூன்றுவது முன்னோன் பார்க்கா தலத்திலே
முறைதவர் பாவங்கள் செய்துக் கொள்ளும்
நான்கா வதுநரக சூட்டை தாங்கு மட்டும்
நாயனுக்கு மார்செய் யென்றார்களே. (55)

அப்போது நபிதாவூத் லுக்மானை கேட்டனர்
அவனியில் ஜீவித்தல் சுருக்கமென்க
ஒப்ப முடன்பதில் உலக சுருக்கம்போல்
உணவதைத் தேடிக்கொள் என்றார்களே. (56)

ஆகிரத் நாளது எப்போது முடிவில்லா
அபதுல் ஆபாதாச்சே என்று கேட்க
ஆகிர்நாள் நீட்டத்தைக் கவனித்து மிகுதியாய்
அமல்களைச் செய்துகொள் என்றார்களே. (57)

ஹக்கன் பார்க்காதலம் ஆலத்தில் எங்குமே
அறவே கிடையாதே என்றுகேட்க
ஹக்கன் விலக்கின பாவங்களானதை
அறவேநீர் செய்யாதீ ரென்றார்களே. (58)

நெருப்புச் சூட்டைத்தாங்க எவ்வாறு முடிந்திடும்
நிச்சயம் முடியாது என்றுகேட்க
உறுதியானுலிது உடையோ னுக்குமாறு
ஒருபோதும் செய்யாதீ ரென்றார்களே. (59)

ஆகையால் மேல்சொன்ன நசீஹத்து நான்கையும்
ஆண்பெண்கள் ஆய்ந்தறிந் தமல்கள் செய்து
ஜாகையாம் ஜன்னத்தில் சருகாமற் புகுந்திட
சங்கையா மமல்தேடி செய்வீர்களே. (60)

——(o)——

அடியர்களை நரகில்போட காரணம் அல்லாவிடம் மூசாநபி அலைஹிஸ்ஸலா மவர்கள் கேட்டது.)

— (:) —

தோங்கல்

ஹக்க னிடம்மூசா நபியொரு நாள்
அடியர் களைபடைத் திரணந் தந்து
தக்க விதமாக வளர்த்து பின்னேன்
தணலாம் நரகத்தில் போடலென்க
ஹக்க னருளினான் மூசாவே நீர்
அன்பாய் வெள்ளாண்மை செய்யுமென்க
அக்கரை யுடன் பாடு பட்டு
அன்பாய் விளைந்தபின் தவசங்களை
மிக்க பதனமாய் செய்துக் கொண்டு
மிச்சப் பதர்வெய்க்கோல் நீக்கிவிட்டார். (61)

அல்லா கேட்டனன் மூசாவேயும்
அன்பாம் பயிரென்னச் செய்தீரென்க
நல்லா விளைந்தபின் பதனமாக
நான்வைத்துக் கொண்டே னென்று சொல்ல
எல்லாப் பயிருமா அதிற் சிலதா
என்கப் பதர் வெய்க்கோல் நீக்கிமணி
நல்லா இருப்பதை என்வசமாய்
நான்வைத்துக் கொண்டே னென்று சொன்னார். (62)

அப்போ திறைசொன்னான் மூசாவே கேள்
அதுபோ லடியாரையான் படைத்து
தப்பாத வரவர்க் கிறண மீந்து
தவ்ஹீ தைப்பற்ற ஏவல்செய்து
மெப்பாய் தௌஹீதைப் பற்றினோரை
மேன்மை சொர்க்கத்தில் சேர்த்துக்கொள்வேன்
ஒப்பா தவர்களை நரகத்திலே
உரமாய் போடுவே னென்று சொன்னான். (63)

## பீபி ருபிஅ பஸிரி அவர்களின் எட்டு சுவால்கள்.

—(o)—

கும்மி இராகம்.

அல்பகல் உலகத்தின் தொல்லைகளில் சிக்கி
ஆயுளை வீணுக்கும் அன்பர்களே.
நல்மா ராயம்பல தடியி லுரைப்பதை
நண்பொடு கூர்ந்தமல் செய்வீர்களே. ()

قَالَ اللّٰهُ تَعَالٰى: مَنْ عَمِلَ صَالِحًا فَلِنَفْسِهٖ وَمَنْ اَسَاءَ فَعَلَيْهَا ○

(தலீல்.) மன் அமில ஸாலிஹன் பலிநப்ஸிஹி. வமன் அஸாஅ பஅலைஹா.

எந்தொரு வன்சாலி ஹான அமல் செய்தால்
அவனப்சுக் காகவே செய்துக் கொண்டான்
இன்னுங் கெடுதியைச் செய்தா லவன்பேரில்
செய்துக் கொண்டா னென்றான் புருகானிலே. (1)

وَقَالَ تَبَارَكَ وَتَعَالٰى: اَفَحَسِبْتُمْ اَنَّمَا خَلَقْنٰكُمْ عَبَثًا ○

(தலீல்.) அபஹஸிப்தும் அன்னமா கலக்னாகும். அபதா.

அபஹஸிப்தும்அன்ன மாகலக்னாகும்
அபஸா என்னும் ஆயத்தில் உங்களை [களா
அபஸாுக்காய் படைத்தோமென் றெண்ணிக் கொண்டீர்
என்றிறை யோன்சொன்னான் தீனோர்களே. (2)

உலக பருக்கிலே உடையோனை மறந்தோரே
ஒருமாது ருபிஅ பஸிரியவர்
நலஞ்செய்த சேதியு மவருட கவலேயும்
நவிலவே கேளுங்காள் நீனோர்களே. (3)

அல்லா றசூலேவல் அல்பகல் பற்றுவார்
ஐவேளைத் தொழுகையைத் தொழுது கொள்வார்
நல்லாக திக்கிரும் தஸ்பீஹாம் தஹ்மீதும்
நாடோறுஞ் செய்குவார் தப்பாமலே. (4)

தசுபீஃ தஹஜ்ஜாத் இஷ்ருக்லு ஹாவுடன்
தவறு சலாத்துல் அவ்வா பீனேயும்
விசுவாச மனதுடன் விருப்பமாய் நபிலேயும்
வேண்டிய மட்டிலுந் தொழுவார்களே. (5)

நாற்ப தாண்டுவரை நாளும்இஷாத் தொழ
நாடிச் செய்தஉலு வுடனேபஜர்
கூர்மையாய் தொழுதநல் ருபிஅ பஸிரியின்
கூர்ந்தவர் நாட்டத்தைக் கேட்பீர்களே. (6)

இஷாவைத் தொழுது முடித்துதன் னப்சதை
இன்பாய் நோட்டமிட்டு ஷாக்று செய்து
உஷாறு இருந்துக்கொள் ஜநப்ஸே இன்றின்னுர்
உடையோன் மவுத்ததைப் பெற்றுர்களே. (7)

அந்த மவுத்தாக்க ளோடுன்னை யாண்டவன்
அன்பாய் சேர்த்துமவுத் தாக்கிருந்தால்
இந்த இரவை நீபெற்ற முடியுமா
இரவிது கடைசியுன் ஹக்கி லென்பார். (8)

என்றுச் சொல்லியந்த இரவு முழுதுமே
இறையோனை பயந்தஞ்சி தொழு தழுது
நன்றுகிர் நாளே நினைத் தருகிவாடி
நன்று பஜர்வக்தைத் தொழுவார்களே (9)

இவ்வித மாகவே ஒவ்வோ ரிராவிலும்
இதுவே கடைசி இரவென் றெண்ணி
நவ்வி இஷாவுக்கு செய்த உலுவுடன்
நாற்ப தாண்டுபஜர் தொழுதார்களே. (10)

புருஷர்பணி விடைசெய்துக் கொள்வா ரின்னும்
புகழுக் குடையோனை யாபிக்குவார்
அருமை யுடனவர் வாழும் நாளில்பத்தா
அல்லா புரத்திலே சேர்ந்தார்களே. (11)

சிலகாலஞ் சென்றபின் ஹஸன்பஸி ரியிமாம்
சிறப்புள்ள பதினோரு ஆலிம்களை
நலத்த நாட்டத்துடன் அழைத்துக் கொண்டுபோய்
நல்ருபிஅ வீடு வந்தார்களே. (12)

வந்தோர்கள் தலைவாயல் நின்றுக்கொண்டு உள்ளே
வருக அனுமதி கேட் டிடவே
சிந்தை மகிழ்ந்தவர் திரைகட்டி வரச்சொல்லி
சேதி என்னவென்று கேட்டார்களே. (13)

அந்த மொழிகேட்டு ஹஸன்பஸிரி இமாம்
ஐருபிஅ வேகேள் அல்லா அமர்
வந்தப்போல் பேவாவாய் வாலீப முன்னது
வீணிலே போகிற தென்றார்களே. (14)

ஆகையால் வந்துள்ள பன்னிரண்டு பேர்களும்
ஆலிம்கள் பாஜில்க ளானதினால்
ஜாகைப் புவியிலே ஒருவர் நிக்காஹிலே
ஷறஎவற் படியாகு மென்றார்களே. (15)

அப்போது ருபிஅ ஐஇமாம் உஸ்தாதே
ஆலிம் பன்னிரண்டில் அஅலா எவர்
மெப்பாக சொலுமென்க பதினோரு பேர்களும்
மேன்மை ஹஸன்பஸரி என்றார்களே. (16)

அதுகேட்டு றாபிஅ ஹஸ்னுல் பஸரியே
ஆலிமே உஸ்தாதே எனப்புகழ்ந்து
பதுமையாய் நான்தங்கள் கேள்விக்கு பதில்சொல்ல
பண்பெட்டு கேள்வியுண் டென்றார்களே. (17)

என்எட்டு கேள்விக்கு பதிற்சொல்லும் ஆலிமை
இன்ஷா அல்லாஹூதம் சொற்படிக்கி
வின்னம் மாநிக்காஹ் செய்யலா மென்கவே
விபரீயு மதுயாது என்றார்களே. (18)

ஒன்று வதுசுவால் ஆலமே அர்வாஹில்
உடையோன்முன் பிரிந்திட்ட பலகூட்டத்தில்
என்றூஹூ மூமின்கள் காபிரீன் கூட்டத்தில்
எதில்நின்ற தெனகேட்க அழுதார்களே. (19)

ஏதும் மஸ்அலா கேட்பீராக்கு மென்று
எண்ணினேன் எளிதாக ஐறாபிஅ
நீத முடனுந்தன் கேள்வியை கவனிக்க
நெஞ்சங் கலங்குதே என்றார்களே. (20)

ஏனென்றால் ஆலமே அர்வாஹில் என்றூஹூம்
எக்கூட்டத் தில்நின்ற தோஅறியேன்
நானென்ன பதில் சொல்வே னும்முட கேள்விக்கு
நாய னறிகுவான் என்றார்களே. (21)

இரண்டா வதுசுவால் நான்பிறக் கும்போது
என்ஹக்கில் சீதேவி மூதேவியா
இரண்டி லெதைத்தான் வரைந்தார் மலக்கென்க
இதைகேட் டிமாம்பஸிரி யழுதார்களே. (22)

இப்படி றாபிஅ கேட்டிட காரணம்
எவ்வொருத்தன் பிறக்கையில் மலக்கொருவர்
தப்பாது சீதேவி மூதேவி என்பதை
தனியோ னிடங் கேட்டு * வரைவார்களே. (23)

* வரைந்தார்களே என்பது, எழுதுவார்களே.

ஜிஸ்முட ஆலத்தில் வரும்போது மலக்குகள்
செய்கைநா லெழுதுரூர் அமலும் ஹயாத்
றிஸ்கும்ஸ ஆதத் ஷகாவத்து மென்றிமாம்
கஸ்ஸாலி யவர்களும் சொன்னூர்களே. (24)

இதைத் தொட்டு மேபீபி ரூபிஅ கேட்டதில்
எற்ற இமாம் ஹஸன் பஸிரியவர்
பதரி யழுதுதான் ஐரூபிஅ இதைப்
படைத்தோ னறிகுவா னென்ருர்களே. (25)

இன்னு மூன்ரும்சுவால் என்ஒடுக்கம் மது
ஈனுமடன் ஆகு மாமாற்றமா
நன்றுசொல் லெனகேட்க ஹஸன்பஸிரி இமாம்
நடுங்கி பயந்தஞ்சி யழுதார்களே. (26)

ஒருவனுக்கு *அஜல் முடுகி விட் டாலவன்
ஒடுக்கம் ஈமானுடன் அல்லதில்லா
தருவது எதில்றாஹைஹஎன்று நமனவர்
தனியோ னேவல்பெற்று வருவார்களே. (27)

அவரவ ரமல்படி அமரே இலாஹிபோல்
அடியன் றாஹைஹநமன் பற்றுவது
தவருது ஒவ்வொரு அடியர்க்கு முண்டென்று
தாஹா நபிஇதைச் சொன்னூர்களே. (28)

ஆனதால் ரூபிஅ இதைதொட்டுங் கவலையாய்
ஆலிமே உஸ்தாதே என்றுகேட்க
ஞானமாய்ஹஸனுல் பஸிரி இமாமவர்
சஞ்சல மாயப்போ சொல்வார்களே. (29)

நானுமிக் கேள்வியில் என்ஹாலை யோசித்து
நலிந்துக் கலங்குறேன் ஐரூபிஅ
உளன மில்லாதஉன் கேள்வியதை ஹக்கன்
ஒருவன் தானறிந்தவன் என்ருர்களே. (30)

---

* அஜல் என்பது, மவுத்து.

நான்காம் சுவாலென்னை கபரிலக்கிட
நலமுடன் முன்கர் நகீரும் வந்து
ஊன்றலா யென்னை இருத்தாட்டி கேட்கையில்
உரைப்பேனா பதிலென்று கேட்டார்களை. (31)

இதைகேட் டிமாமவர் எதும் பதிலையா
இடுக்க மானகபர் திடுக்கங் களை
நிதியாக யோசித்து நெஞ்சங் கலங்கியே
நினைந் துருகி பயந் தழுதார்களை. (32)

அதாவது தாருல் பனாவிட்டு மேபகா
அளவில் போகமுதல் மஞ்ஜில்கபர்
இதாகில்நலம் எல்லா மன்ஜிலும் நலமாக
எற்கு மெனநபி சொன்னார்களே. (33)

قَالَ النَّبِيُّ صلعم اَلْقَبْرُ رَوْضَةٌ مِنْ رِيَاضِ الْجِنَانِ اَوْ حُفْرَةٌ مِنْ حُفَرِ النِّيرَانِ

(ஹதீஸ்.) அல்கப்ரு றவ்லதுன் மின்றியாலுல் ஜினானி அவ்ஹுப்றதுன் மின்ஹுப்ரின் னீரான்.

நல்லோர்க்கு கபாது நற்பதிபூந்தோட்டம்
நலமற்ற பேர்கட்கு நரகத்துட
பொல்லா நெருப்பின் படுகுழியாமென்று
புகழான நபிசொன்னார் தீனோர்களே. (34)

இந்த ஹதீஸதை கேட்ட முதற்கொண்டு
எங்கியே முதல்மன்ஜில் கபர்நினைத்து
சிந்தைக் கலங்கியே உதுமான்றலியவர்
ஜெகத்தி லுள்ளமட்டு மழுதார்களே. (35)

நரகபயான் செய்தால் கொஞ்சமா யழுகுவார்
நலத்த கபர்பயான் கேட்டா லவர்
உரமாக அழுகுவார் இதைகேட்க ஆகிரத்
உண்மை முதல்மன்ஜில் என்பார்களே. (36)

قَالَ النَّبِيُّ صلعم. يَا صَفِيَّةُ قُوْلِي مُحَمَّدٌ اِبْنُ اَخِي ○

(ஹதீஸ்) யாஸபியது கூலிநபீ முஹம்மது இப்னு அகீ.

ஆலநபி *குப்பி ஸபியாவை கபரிலே
அடக்கும் போதுநபீ ஓ சபியா
கூவிநபிமுஹம்மத் இப்னுஅகீ என்று
குறித்திந்த தல்கீனை சொன்னார்களே. (37)

சொல்லும் ஓசபியாவே என் அண்ணன் மகனரு
சங்கை முஹம்மது நபியாமென்று
சல்லல்லா நபிசொல்ல கேட்டசஹா பாக்கள்
சார்ந்ததின் கருத்தைப்பின் கேட்டார்களே. (38)

நாயகர் நபிசொன்னார் நன்றெந்தன் குப்பியை
நாம்தபன் செய்தபின் முன்கர் நகீர்
பாய முடன்வர பார்த்துப் பயந்ததால்
பகர்ந்தேன்நான் தல்கீனை என்றார்களே. (39)

அப்போ ஸஹாபாக்கள் அழுது எமக்குயார்
அன்புடன் தல்கீனை சொல்லுவார்கள்
எப்படி எங்கள்ஹால் என்று அழுகையில்
இறங்கிட்ட தாயத்து அந்நேரமே. (40)

قَالَ اللّٰهُ تَعَالٰى. يُثَبِّتُ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا بِالْقَوْلِ الثَّابِتِ فِي الْحَيٰوةِ
الدُّنْيَا وَفِي الْاٰخِرَةِ ○

(தலீல்) யுதப்பிதுல்லா ஹல்லதீன பில்களலித்தா பிதி பில்ஹயாதித் துன்யா வபில்ஆகிறஃ.

---

* தகப்ப னுடன்பிறந்த, மாமி என்றறிக.

தரிப் பாடானசொல்லை கொண்டீமான் கொண்டோரின்
தகுமாம் ஹயாத்துனி யாமாகிறில்
தரிப்பாடு செய்குவான் தனியவ னென்றுமே
தகுமாக அறிவித்தா னப்போதிலே. (41)

அனசுறலி சொன்னார் அஹ்மது நபிதங்கள்
அருமை மகள் ஜைனப் மவுத்தாகிட
தனது மகளாரை நபியுல்லா கபரிலே
தபன்செய் திடும்போது அழுதார்களே. (42)

அதின்கார ணங்கேட்க அருளினர்நபியுல்லா
அருமை மகளார் ஜைனபுவை
நிதியாக கபுரது நெருக்கின துன்பத்தை
நான்கண்ட துக்கத்தா லென்றுசொல்லி. (43)

ஹக்கன் கிருபையால் ஜைனபின் கபரதாப்
ஆக்கினேம் லேசென்று சப்தம் வந்தும்
தக்க நெருக்கத்தின் சப்தத்தை மனுஜின்னு
தவிரயெல்லாங் கேட்ட தென்றார்களே. (44)

ஈரற்கொழுந்தான நபிமகள் ஜைனபை
இறக்கையில் கபர்கஷ்டம் நோட்டமிட்டு
தூரத் தலைகபர் என்றெண்ணு மானிடர்
துய்யோனை பயந்தஞ்சி கொள்வீர்களே. (45)

இவைகளை எல்லாமே ரூபிஅ யோசித்து
என்கப ருடைய முதல் மன்ஜில்ஹால்
எவ்வித மாகிடு மென்று இமாமிடம்
ஏக்கத் துடனழுது கேட்டார்களே. (46)

நம்மில் சிலர்க்கிந்த கவலை யில்லாமலே
நாட்களை வீண்விளையாட்டிற் போக்கி
தம்முட மனம்போல நடப்பவர் கெதியதைத்
தனியோ னறிகுவான் தீனோர்களே. (47)

قَالَ النَّبِيُّ صلعم. لَوْ تَعْلَمُوْنَ مَا اَعْلَمُ لَضَحِكْتُمْ قَلِيْلًا وَلَبَكَيْتُمْ كَثِيْرًا ۝

(ஹதீஸ்.) லவ் தஅலமூன மாஅஅலமு லதஹிக்தும் கலீலன் வலபகைதும் கதீரு.

லவ்தஅலமூன மாஅஅலமு ஹதீஸ்
நானறிந் ததைநீங்க ளறிந்துக் கொண்டால்
கொஞ்சமா சிரிப்பீர்கள் மிகுதமா யழுவீர்கள்
குவலயந் தனில்நீங்க ளென்றூர்களே. (48)

ஆனதால் ரூபிஅு ஹஸனுல் பஸிரியை
ஆகிர் முதல்மன்ஜில் பற்றிகேட்க
தானுமிதைப்பற்றி கவலேயி லிருப்பதால்
தனியோ னறிகுவான் என்றூர்களே. (49)

ஐந்தாம் சுவாலது அணேவோர் கியாமத்தில்
அல்லாவின் வஅுதாப் போலெழும் பியபின்
அந்தமுட னல்லோர் பொல்லோரை பிரிக்கையில்
ஆமெதில் நான் நிற்பே னென்றூர்களே. (50)

قَالَ اللّٰهُ تَعَالٰى - وَامْتَازُوا الْيَوْمَ اَيُّهَا الْمُجْرِمُوْنَ ۝

(தலீல்.) வம்தாஜுல்யவ்ம அய்யுஹல் முஜ்ரிமூன்.

வம்தாஜுல் யவ்ம ஐய்யுஹல் முஜ்ரிமூன்
வண்மை ஆயத்தில் ஓ முஜ்ரிம்களே
இன்றையில் நல்லோர் களைவிட்டும் பிரியுங்காள்
என்றிறை யோன்சொல்வான் மஹ்ஷரிலே. (51)

மஹ்ஷர்நாள் மனுவோர்க்கு மருங்குங் குறைவதும்
மன்னவன் முதல்செய்வ திதுதா னென்று
யஹ்யாவிலே இமாம் கஸ்ஸாலி யவர்களும்
இன்பா யுரைத்தார்கள் திறேனோர்களே. (52)

கடல்போல மனுவுகள் திரளாகக் கூடும்நாள்
கலந்தோரை வெவ்வேறு பிரிக்கையிலே
அடவுட னவரவர் அமல்களை கவனித்து
அழுதுக் கலங்கியே நிற்பார்களே. (53)

அல்லல்கி யாமத்தில் மூமினோருக் கிஸ்ஸத்
ஆகாத காபிர்க்கு செய்யும் ஸில்லத்
அல்லா தருவது இதுமுத லென்றிமாம்
கஸ்ஸாலி யவர்களும் சொன்னார்களே. (54)

பெருங்கூட்ட தஅவத்தி விருப்போனை வெளியிட
பிறப்பட்டோன் வெட்கித்துத் தலைகவிழ்ப்பான்
சருகாது மஹ்ஷரின் கூட்டத்தில் பிரிக்கையில்
சங்கைக்கே டேதுவாகுங் காண்பீர்களே. (55)

மஹ்ஷர்நாள் நபிமார்கள் யாவரின் உம்மத்தும்
மன்னர் நபிதங்கள் உம்மத்துவும்
பஹறைப்போல் நிற்கையில் பிரித்திடி லெவ்வித
பலீஹத் தாகுமென் றறிவீர்களே. (56)

உலகக் கூட்டங்காண மஹ்ஷர்நாள் கூட்டத்தை
உன்னப்ஸில் கவனித்து அறியாமலே
பலதொல்லைக் காளாகி பலகுற்றங் கள்செய்து
பலிஹத்தே ஞகிடல் ஜாஹில்களே. (57)

மரித்தப்பின் மஹ்ஷருக் கெழும்புவ தில்ஷக்கு
மனதிலே ஜாஹ்லாக்கள் வைத்துக் கொண்டு
பரிகாசஞ் செய்திடும் பாதகர்க்கு வல்லான்
பகர்ந்திடும் ஆயத்தைக் கேட்பீர்களே. (58)

قَالَ اللّٰهُ تَعَالٰى. ثُمَّ يَجْمَعُكُمْ لِيَوْمِ الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ

(தலீல்.) தும்ம யஜ்மஉகும் லி யவ்மில்கியாமதி லா றைபபீஹி.

தும்ம யஜ்மஉகும் ஆயத்திலே பின்பு
துய்தாக உங்களைச் சேகரிப்போம்
அம்மஹ்ஷர் நாளையில் ஆமென்ப தில்ஷக்கு
அறவே கிடையாது என்றுரைத்தான். (59)

وَقَالَ اللّٰهُ تَعَالٰى. ثُمَّ اِلٰى رَبِّكُمْ تُرْجَعُوْنَ ○

(தலீல்.) தும்மஇலாறப்பிகும் துர்ஜிஉளன்.

இன்னும் தும்ம இலாறப்பிகும் துர்ஜிஊன்
எனும் ஆயத்தில் பின்னு முங்களுட
நன்றுறப்பின் முன்னே மீளுவீர்க ளென்று
நாயனுரைத் தானே தீனோர்களே. (60)

இதுபோல் மஹ்ஷரில் எழும்பல்நிஜ மென்று
இறையோன் புறுகானில் பலதலத்தில்
நிதமாக சொல்லிய ஆயாத்தை கவனிக்கா
நெடியோனை மறந்தாரே ஜாஹ்லாக்களே. (61)

ஆகையால் ருபிஅ அந்நாள் கவலையால்
ஆமெந்தக் கூட்டத்தி லாவேனென்று
ஜாகைப் புவிநம்பா உஸ்தாதை வேண்டியே
சஞ்சல மிகவாகி கேட்டார்களே. (62)

இந்தசு வாலுக்கு பஸிரி இமாம்ஜவாப்
என்ஹாலு மெக்கூட்ட மோஅறியேன்
அந்தக் கவலைக்கு ஆளாகினே னிதை
அல்லா அறிகுவான் என்றார்களே. (63)

ஆரா வதுசுவால் அவரவ ரமலதை
ஆய்ந்துப் பார்க்கமீஜான் தட்டில் வைத்து
சீராக நிறுக்கையில் றண்டுதட்டி லொன்று
செய்கைப்போல் கனத்திடும் வேளையிலே. (64)

எந்தன் அமலதை மீஜானில் நிறுக்கையில்
எதுகன மாகிடும் லேசாஎது
அந்த முடன்சொல்லு மென்க கேட்டுஇமாம்
ஹஸன் பஸிரிதுக்கப்பட் டழுதார்களே. (65)

மன்னர் நபியிடம் ஆயிஷா நாயகி
மனுவோர் கியாமத்து நாளையிலே
தன்மக்கள் மனைவியை மற்றோரைக் கவனிக்க
தானுது மாஎன்று கேட்டார்களே. (66)

அப்போது நபிசொன்னார் மூன்று தலத்திலே
ஆரையுங் கவனிக்க முடியாததில்
மெப்புடன் மீஜானில் அமலைநி றுக்கையில்
மீஜான் முள்ளைப் பார்க்கும்நேரத்திலே. (67)

ஏனெனில் வலபுறம் முள்ளது சாயுமா
என்றெண்ணி ஏக்கமாய் பார்க்கையிலும்
தானுகப் பட்டோலைப் பறந்துமுன் வலக்கையில்
தரிப்படு மாஎன்ற நேரத்திலும். (68)

மூன்று வதுபாலம் புல்சிறுத் தேகையில்
மூண்டிடும் பயங்கரம் திடுக்கத்திலும்
உளன்றலா யிம்மூன்று தலத்திலு மொருவரை
ஒருவர் கவனிக்கா ரென்றார்களே. (69)

நன்மை கனத்திடில் நற்பதி புகுமாசை
நாட்டத்தா லன்னேரம் நப்ஸீஎன்றே
அன்பாய் நிறுக்கையில் மீஜானின் முள்ளதை
ஆவ லுடன்பார்த் திருப்பார்களே. (70)

இந்த சபபினல் ருபிஅ மீஜானில்
என் ஹக்கில் எதுகன மாகுமென்க
அந்த மொழிகேட்ட பஸிரிஇமாமவர்
அழுதவர் துக்கித்துச் சொல்வார்களே. (71)

என்ஹக்கில் மீஜானில் எதுகனக்கு மென்று
எனக்குத் தெரியாமல்எக்க முற்றேன்
உன்ஹக்கில் யான்சொல்ல என்னுல் முடியாது
உடையோ னறிகுவான் என்றூர்களே. (72)

ஏழா வதுசுவால் பட்டோலை முன்வந்து
எனது வலக்கையில் தரிப்படுமா
பாழாகும் பாவிக்குப் பின்புறம் கிடைக்கும்போல்
பதியுமா இடகையி லென்றூர்களே. (73)

நன்று சுவாலுக்கு பஸிரிஇமா மவர்
நல் ரூபிஅகேளு முன்ஒலைதான்
நன்றுன் வலக்கை யிடக்கையி லாவதை
நாய னறிகுவான் என்றூர்களே. (74)

எட்டா வதுசுவால் புல்ஸிருத் கடந்துநான்
ஏற்ற சுவர்க்கத்தில் புகுதுவேனு
தட்டுண்டு அறுபட்டு நரகத்திலே வீழ்ந்து
தடுமாறி கிடப்பேனு என்றூர்களே. (75)

பாலத்தின் நீட்டமு மூவாயிர மாண்டு
பயணத்தின் துலைதூரப் பாலம்மது
ஓலமுட னதை நரகேழின் முதுகிலே
உயர்பாலம் நிற்பதால் கேட்பீர்களே. (76)

நல்லோர் பொல்லோர்யாவர் அப்பாலங் கடந்துதான்
நற்பதி யல்லது நரகத்திலே
எல்லை யுடன்சேர வேண்டியி ருப்பதால்
இதைத் தொட்டும்ரூபிஅ கேட்டார்களே. (77)

எட்டாம் சுவாலுக்கு ஏற்றஇமாம் பதில்
இதைப்பற்றி உமக்காக பத்வாதர
திட்டமா என்னிலே முடியாது ரூபிஅ
தீங்கில்லா னறிந்தவன் என்றூர்களே. (78)

அப்போது ஹஸனுல் பஸிரியை ருபிஅ
அன்பாக ஒருகேள்வி கேட்க லுற்றார்
தப்பா தறிவதை ஆண்பெண்ணுக் கெவ்விதந்
தனியவன் பங்கிட்டா னென்றார்களே. (79)

அதுகேட் டிமாமவர் ஐருபிஅ கேளும்
அகலே பத்து பாகஞ் செய்தாண் டவன்
பதுமையா யாண்கட்கு ஒன்பது பாகமும்
பாவையர்க் கொன் றீந்தா னென்றார்களே. (80)

பின்னரும் ருபிஅ ஹஸனுல் பஸிரியை
பிரிசமாய் கேட்டனர் * இஷ்கானதை
இன்பாக எத்தனை பாகஞ்செய் திறையவன்
எவ்வாறு பங்கிட்டா னென்றார்களே. (81)

இதற்கு பதில்இமாம் ஐருபிஅ கேளும்
இஷ்கை அல்லா பத்துபாகஞ் செய்து
சிதாம லொன்பதை பெண்கட்கு மற்றொன்றை
சேர்ப்பித்தான் ஆண்களுக் கென்றார்களே. (82)

அதுகேட்டு ருபிஅ உஸ்தாதே எனபோற்றி
அடியாள் ஆகிர்நாள் கவலையுள்ளாள்
சரியான துனியாவி னிச்சைக்கு எவ்வாறு
சந்தோஷ மாகுவா ளென்றார்களே. (83)

அப்போது பின்னுமே ருபிஅ கலக்கமாய்
அடியாள் இஷ்கோன்பது பாகத்தை
தப்பாது ஒருபங்கு அறிவைக்கொண்டு தட்டி
தயங்கையில் மேலெட்டுக் கேள்வியிலே. (84)

அவ்வெட்டு கேள்வியில் அல்பகல் முங்கியே
அதி கவலையுள்ளாள் மணஞ்செய்திட
எவ்வாறு முடிந்திடு மென்ககேட்டு இமாம்
ஏங்கி விடை பெற்றுச் சென்றார்களே. (85)

* இஷ்கென்பது, ஆசையை அல்லது மோகத்தை.

பெண்ணுய்ப் பிறந்தநல் ரூபிஅ பஸிரிதம்
பேராழ்ந்தக் கவலேயைப் பிரிசம்முடன்
கண்ணுற் கண்டுங்காதால் கேட்டப்பின் ஞவது
கைசேதம் பின்னுகா நடப்பீர்களே. (86)

அல்லாஹு உந்தன்அடியார்கள் எல்லோரும்
அஹ்ஸன் அமல்களேத் தேடிசெய்ய
நல்லார் நபீதோழர் கிளேயார் பொருட்டினுல்
நல்தௌபீக் தருகுவா யாகஆமீன். (87)

ஆமீன்வ ஆகிரு தஅவாஞ அனில்ஹம்து
லில்லாஹி றப்பில் ஆலமீன்
ஜாமீனீ யாகியே சகலமுஸ்லிங் களே
ஜன்னத்தில் புகுதச்செய் யாமீனுமின். (88)

## தன்பீ ஃ

அல்லாவை பயந்தஞ்சு மடியார்கள் நடக்கையும்
அவர்கள் கவலேயும் மழுகையையும்
நல்லா கண்டுங்கேட்டும் நாயனே பயந்தஞ்சி
நல்அம லேத்தேடிச் செய்வீர்களே. (1)

ஆதிஏவல்நபி ஏவலே என்றுமே
ஆய்ந்துப் பாராசெய்யுங் காரியத்தால்
தீதுபலாவும் முசிபத் தடர்ந்திடும்
திட்டமா யறியுங்காள் தீனேர்களே. (2)

ஹக்கு பாதில்களே ஷக்கில்லா காட்டின
ஹாதி றசூல்நபி நாயகர்தீன்
ஷக்கில்லா தீனிது மற்றுந் தீனேக்காண
சங்கைதீன் நமதென் றறிவீர்களே. (3)

இக்காலத் தில்சிலர் இடர்பாவ முணராது
　　இடர்கூடு பஞ்ஜாவும் பலவேஷமும்
மிக்க மீசைவெட்டா தாடி சிறைத்துமே
　　மேன்மைப் பாராட்டுறார் ஜாஹில்களே. (4)

இன்னும் ஹஜ்ஜுசெய்யப் பாத்திரமாகியே
　　இருந்தும் ஹஜ்ஜுசெய்யா பாவிகளாய்
வின்னப்புவி வாழ்வை நம்பிகாலம் போக்கி
　　விதிஹஜ்ஜை மறக்கிறார் சீமான்களே. (5)

அவர்கட்கு அல்லாவின் ஏவலும்நபிஏவல்
　　அஹ்ஸன் அமல்செய்ய சொல்வதற்கு
தவறாது எந்நாவில் கல்பிலே ஊசாட்டம்
　　தந்தாள்க றஹ்மானும் தீனோர்களே. (6)

——( : )——

## விதியான ஹஜ்ஜை செய்யாதவர்க்கு தன்பீஃ.

### இராகம்—கும்மி.

ஐந்தாம்பரலான ஹஜ்ஜு விதியாகி
　　அதைஇருத் தாமலே உலகாசையால்
பந்தமுடன்காலம் போக்கும் சீமான்கட்கு
　　பகரநல் மாராயங் கேட்பீர்களே. (1)

உலகத்தில் சம்பத்தும் தௌலத்துமா வாழ்ந்து
　　உண்மை மஹ்ஷரில் தலைகவிழ்ந்து
பலதொல்லைக் காளாகா பாக்கியம் பெறநாடும்
　　பண்புள்ள சீமான்கள் கேட்பீர்களே. (2)

இந்தஉலகத்தின் சம்பத்தும் ஆவியும்
எமைவிட்டு நீங்குமுன் ஹஜ்ஜுசெய்து
சொந்த தௌலத்தை நாடும்சீ தேவிகள்
சொல்வதைக் கவனமாய் கேட்பீர்களே. (3)

ஹஜ்ஜு செய்யும்படி அல்லாவு மவன்தூதர்
அனந்த மாகஏவல் செய்திருக்க
ஹஜ்ஜதாச் செய்துமே ஹாஜிகளுடன் சோா
ஆண்பெண்கள் உலகத்தில் மிகுத்தார்களே. (4)

ஆனதா லவர்கட்கு அல்லா றசூ லேவல்
அனந்த மாகவந்த திற்சிலதை
ஞான முடன்சொல்ல கூர்மையாகக் கேட்டு
ஹஜ்ஜதா செய்யுங்காள் சீமான்களே. (5)

قَالَ النَّبِيُّ صلعم. مَنْ دَخَلَ الْكَعْبَةَ آمِنَ مِنَ الْهَاوِيَةِ ○

(ஹதீஸ்.) மன்தகலல் கஅபத அமின மினல் ஹாவியஃ.

அல்லாவின் வீடான கஅபாவிற் புகுந்தவன்
ஹாவியா நரகத்தை விட்டுமவன்
நல்லா அமன்பெற்று னென்றுமே இச்சொல்லை
நம்மிற சூல்நபீ சொன்னார்களே. (6)

நல்கூலி ஹஜ்ஜதா செய்தோ ருக்குஅல்லா
நலமாய் கொடுப்பது சொர்க்க மென்று
நல்லார் நபியுல்லா சொன்ன ஹதீசிதை
நலமாய் புகாரியில் காண்பீர்களே. (7)

தோங்கல்.

அடியர் செய்கின்ற அமல்களிலே
ஆகும் சிறந்தமல் யாதெனிலோ
நெடியோன் றன்பேரில் நபியின்பேரில்
நேர்மையுடனீமான் கொள்வ தென்றும்

படிமேல் ஜிஹாதையும் ஹஜ்ஜதையும்
 பண்பாய் செய்வதா மென்றிதனை
நெடியோன் தூதரா மிறசூலுல்லா
 நேர்மை மணிவாயா லருளிச் செய்தார். (8)

இப்னு உமர்சொன்னர் யாதொருவன்
 இன்பாய் புறப்பட்டால் ஹஜ்ஜுசெய்ய
தப்பா தவனேகு மடியொன் றுக்கும்
 தவறு தவனேறும் வாகனமும்
ஒப்ப முடன்வைக்கு மடியொன்றுக்கு
 ஒருதின்மைப் போக்கி யொரு நன்மையை
மெய்ப்பா எழுதியே தறஜாஒன்று
 மேலாம் சுவனத்தில் உயறுமென்றார். (9)

இராகம்—கும்மி.

இந்த விதமாக ஹஜ்ஜுட பலன்களை
 ஏழைகள் கேட்டபின் இந்தப்பலன்
அனந்தமாய் நாம்பற்ற இல்லையே என்றவாள்
 ஆயாச மாகவே இருந்தார்களே. (10)

அப்போதே ஜிப்ரயீல் ஜுமஆவின் தொழுகையை
 அல்லாவி னருட்படி கொண்டுவந்து
தப்பாம லேழைகள் ஜுமஆவைத் தொழுதிடில்
 தவறு ஹஜ்ஜுபல னென்றூர்களே. (11)

وَقَالَ النَّبِيُّ صلعم. اِبْشِرُوْا يَا مَعْشَرَ الْفُقَرَاءِ قَدْ فَرَضَ اللّٰهُ عَلَيْكُمْ

صَلٰوةَ الْجُمُعَةِ مَنْ اَدَّاهَا مِنْكُمْ فَقَدْ اَدَّى الْحَجَّ ○

(ஹதீஸ்) இப்ஷிரூ யாமஅஷரல் புகருயி கத்பறலல் லாஹு அலைகும் ஸலாதல் ஜும்அதி பமன்அத்தாஹா மின் கும் பகத் அத்தல் ஹஜ்ஜ.

சந்தோஷ மாகுங்கள் புகழுக்களே நீங்கள்
　　சருகா ஜமாஆத் தொழுஹஜ்ஜை அதா
அந்தமுடன் செய்த பலனுகு மென்றிதை
　　அஹ்மது நபியுல்லா சொன்னார்களே. (12)

قَالَ النَّبِيُّ صلعم. مَنْ اَيْسَرَ وَلَمْ يَحُجَّ وَمَاتَ عَلَىٰ ذٰلِكَ دَخَلَ النَّارَ دَخَلَ النَّارَ دَخَلَ النَّارَ ○

(ஹதீஸ்) மன்ஐஸர வலம்யஹுஜ்ஜ வமாதஅலாதாலிக தகலன்னர தகன்னர தகலன்னர்.

பாத்திர வானகி ஹஜ்ஜுசெய்யா செத்தோன்
　　பாவிநரகிற் புகுந்தா னென்று
மாற்ற மில்லாஇதை முவ்விடுத்தம் மாக
　　மன்னர் நபீ இதை சொன்னார்களே. (13)

قَالَ النَّبِيُّ صلعم. مَنْ مَاتَ وَلَمْ يَحُجَّ فَلْيَمُتْ يَهُودِيًّا اَوْ نَصْرَانِيًّا ○

(ஹதீஸ்) மன்மாத வலம்யஹுஜ்ஜ பல்யமுத் யஹூதிய்யன் அவ் நஸ்ருனிய்யன்.

இன்னும் ஹஜ்ஜுசெய்ய விதியாகிச் செய்திடான்
　　இறக்கையில் யஹூதியா யல்லதவன்
துன்ப நசாருவாய் சாவானென்று இதை
　　துய்யோன் னபிபுல்லா சொன்னார்களே. (14)

கஅபாவைக் கட்டவே நபிகலீ லவருக்கு
　　கர்த்தன் ஏவல்செய்யக் கட்டியபின்
கஅபாவை அர்வாஹும் அஜ்ஸாமும் சந்திக்க
　　கலீலே சொல்லுமென்றான் பாங்கதையே. (15)

அப்போது நபிகேட்டார் அல்லாஹூ என்சப்தம்
அர்வாஹூம் அஜ்ஸாமுக் கெத்தா தென்க
ஒப்ப முடன்சொல்லு மதைஎத்த வைப்பது
என்வேலை என்றுனே தீனோர்களே. (16)

அதுபோல நபீகலீல் பாங்கதைச் சொல்லவே
ஹக்கன் அவனுட குதறத்தினால்
இதமாக அர்வாஹூம் அஜ்ஸாமுக் குஎல்லாம்
எத்த வைத்தா னதைத் தவறாமலே. (17)

அந்த சப்தங்கேட்டு பலவிடுத் தம்லப்பைக்
அல்லா ஹூம்ம லப்பைக் என் றுபதில்
சிந்தை மகிழ்வாக சிலதுசொல்லி யப்போ
சிலது பதிற்சொல்லா திருந்திட்டதே. (18)

ஆகையால் அவர்வாஹில் பதிலீந்தோர் கல்பிலே
ஆசை யுண்டாகியே ஊசாட்டமாய்
ஜாகையாம் கஅபாவை ஸியாறத்துச் செய்திட
சருகாது செல்குவார் அறிவீர்களே. (19)

நபிகலீல் பாங்குக்குப் பதில்சொல்லா நிமிர்ந்தவர்
நாயன்வீட் டையவர் சந்தித்திடார்
புவிமீதில் ஹஜ்ஜூக்குப் பாத்திரமாகியும்
போகா திருக்கின்றார் வெகுபேர்களே. (20)

ஆதமுக்கு சஜ்தஃ செய்யசொல்ல அல்லா
அழிச் சாட்டியக் காரன்னிமிர்ந்த துபோல்
ஓதும் கலீல்பாங்கைக் கேட்டும்பதில் சொல்லா
உரமாக நிமிர்ந்தாரோ யானறியேன். (21)

ஆலமே அர்வாஹில் ஒருஜின்ஸில் பதிலீயா
ஆலமே அஜ்ஸாமி விறண்டான பின்
ஜாலங்கள் பேசியே விதிஹஜ்ஜை மறந்தவர்
சாங்காலத் தைநோட்டம் செய்வீர்களே. (22)

உலகத்தின் வாழ்க்கையும் ஆகிரத் வாழ்க்கையும்
உற்று ணர்ந்துப் பார்த்து சீமான்களே
பலசுகம் அபதுல் ஆபாதில் பெற்றுக் கொள்ள
பறல்விதி ஹஜ்ஜதா செய்வீர்களே. (23)

சீமான்கள் ஆகிரம் நாளையில் ஜெயம்பெற
சிந்தை மகிழ்ந்தவாள் ஹஜ்ஜு செய்து
ஈமா னுடன்சேர்ந்து அஹ்ஸன் பதிபெற
இறையோன் தௌபீக்தர ஆமீனுமீன். (24)

பலநன் மாரா யங்கள்

முற்றுப் பெற்றது.

## மீசையை வெட்டா தாடியை
## சிறைப் பவர்க்கு தன்பீஃ

### கும்மி இராகம்

கடைசி ஸமானுவா மிக்காலத் திற்சில
கண்மூடி கள்செய்யுங் கோலங்களை
சடையா துரைக்கவே சலியா மனங் கொண்டு
சருகாது கேளுங்காள் தீனோர்களே. (1)

இன்சான் ஜடலத்தில் எடுப்பதுந் தரிப்பதும்
ஈரைந்தை நபிகலீல் இன்புற்றது
நன்றைந்தை தலையிலும் நலமைந்தை உடலிலும்
நம்நபி தாமதை யுகந்தார்களே. (2)

முகத்துக் கலங்காரம் மீசைவெட்டி தாடி
முழுதும் விடுவது என்று ஹதீஸ்
உகப்புடன் வந்ததை உம்வாலீப மதம்
ஒதுங்கச் செய்திட்டதோ ஜாஹில்களே. (3)

தாடியைச் சிறைப்பவன் செத்திடி லவன்றன்னை
தபன்செய் தடக்கிடில் முன்கர்நகீர்
நாடி வரும்போது நசுறுமுகம் போல
நாணங் குலைவானே ஜாஹில்களே. (4)

மார்க்கக் கல்வியதை முஸ்லிங்கள் படிப்பது
மணமான பறலென்று வந்திருக்க
மூர்க்கத் தனஞ்செய்த மூதேவி யொருவனின்
முறட்டுச் செயல்கேளும் ஆகில்களே. (5)

ஒருவன்றன் மகனுக்கு தீனதைக் கற்பிக்கா
உருக்கமாய் இங்கிலீஷா படிக்கவைக்க
சருகா தவன்மகன் மிட்ரிக்உடன் எப்வ
என்னுவோ பாஸ்செய்தான் தீனோர்களே. (6)

பாசை மகன்செய்ய நேசமா யொருவரும்
பையனின் தந்தையைக் கேட்கலுற்றார்
ஆசையா யும்மகன் பாசானது மெத்த
அதிர்ஷ்டமே என்றுபின் கேட்டார்களே. (7)

ஆனாலே உம்மகன் ஆங்கிலேயப் படிப்பினால்
அவன்குணம் நூதனம் யாதுவென்க
மேனாட்டுப் படிப்புப்போல் நூதனம் பலதுண்டும்
மென்னச் சொல்வே னென்றான் தெம்பாகவே. (8)

ஆகிலுங் கொஞ்சத்தைச் சுட்டிக்காட்டுமென்க
அப்பா எந்தன்மகன் பாசானபின்
போகிறான் உஸ்கீ பிறாந்திஜின் குடிக்கவே
பூரிப்பாய்ப் பலநாளுந் தவறாமலே. (9)

குடிப்பது தண்ணீரோ காபியோ டீபனோ
கோனும லென்மக னின்றுக் கொண்டு
இடது கையில்கிளாஸ் ஏந்திக் குடிக்கிறான்
என்னநான் சொல்லுவேன் புதுமைகளே. (10)

இன்னுமோர் புதினத்தை என்னநான் சொல்லுவேன்
எப்போது மென்மகன் மூத்திரத்தை
தன்பேரில் பட்டிடா நாயைப் போல்நின்றுமே
தாட்டியாய் பேய்கிறான் ஜோக்காகவே. (11)

பின்னுமே என்மகன் மீசைமேல் கத்திரி
பிசகியே பட்டிடா காப்பாற்றியும்
இன்னுந் தினந்தோறும் தாடிசவரத்தை
இன்புற்றுச் செய்கிறான் தவறாமலே. (12)

இன்னுந் தலையிலே மயிர்மட்டம் நீட்டமும்
ஏழெட்டு விதமாக மூலைவிட்டு
நன்ருய் கிருப்வேலை நாடோறுஞ் செய்கிருன்
நசாரு முகத்துக்குச் சரியாகவே. (13)

உட்காரல் குர்சியில் உண்பது டேபிலில்
உண்டதும் சுருட்டதைப் பத்தவைத்து
புட்பால் டிருமா பயாஸ்கோப் நாடகம்
போய்பார்த்து வருகிருன் தவருமலே. (14)

இன்னு மொருவேலை பெரும்வேலை செய்கிருன்
என்னெனில் ருக்கூவும் சுஜ்ஜூதிட
என்ன விதத்திலும் முடியாத உடுப்புகள்
எப்போது முடுத்துருன் சுருவால்களே. (15)

எங்கள் பாட்டன்பூட்டன் காலத்திலும் எம்மில்
எவருமே செய்திடாப் புதினங்களை
இங்கிலீஷு படிப்பதின் திறமையால் செய்திட
என்மகன் பாசானு னென்றுரைத்தான். (16)

கேட்டவ ரும்மகன் நடப்புத் தெரிந்தது
கேடாகும் நரகுக்குப் பாசாகிட்டான்
தாட்டியாய்ப் போகுவான் உன்னையு மிழுக்குவான்
தவருது என்றுபின் சொல்வார்களே. (17)

ஆங்கிலேய படிப்பதைப் படிக்கொண்ணு தென்றல்ல
அவசியம் இல்மேதீன் படித்ததின்பின்
பாங்காக எப்பாஷைப் படித்தாலும் இல்மேதீன்
பழுது வாராகார்க்கு மறிவீர்களே. (18)

இங்கிலீசு படிப்பிலே எப்ப முதற்கொண்டு
எல்லாமே பாசாகி எம்ஏவரை
அங்க முடன்பாசு ஆகிட்ட போதிலும்
அவர்தீனைக் கைவிடார் தீனேர்களே. (19)

உலகத்தின் தொழிலுக்கும் உன்பெண்டுப் பிள்ளைக்கும்
உந்தன்மேல் விதிபரல் நபகாவுக்கும்
செலவு சம்பாதிக்க எப்பாஷை படித்தாலும்
சிரைக்க லாமோ தாடி ஜாஹில்களே. (20)

ஆங்கிலேய படிப்பிலே அதிலுள்ள முடிவரை
அன்பாக பாசான மூமினோர்கள்
தாங்கள் ஷரீஅத்தைப் பற்றுவா ரல்லாது
தலையில் கிராப்விடார் தீனோர்களே. (21)

முழுதுமே இங்கிலீஷு படித்தாலுந் தீனவர்
முன்னோர்கள் நல்லோர்கள் செய்கைவிடார்
தொழுகைக்கு வகுத்தானல் தொழுதுக்கொண்டு நாளும்
துய்யோனை யாபிப்பார் தீனோர்களே. (22)

துடுக்காக தாடியை முடுக்காக சிறைத்துமே
துடப்பக் கட்டைப்போல மீசைவைத்து
குடுக்குக் கோழிமூக்கில் குத்தின சிறகுபோல்
கோணமல் காட்டுருய் நாணமலே. (23)

தாடியைச் சிறைத்துமே மீசையைத் தரித்திடா
தலையில் கிருப்வைக்கும் ஜாஹிலுகள்
நாடியே பார்த்துநல் அமல்செய்ய இருஹதீஸ்
நவிலவே கேளுங்காள் ஆகில்களே. (24)

قال النبي صلعم. من لم يأخذ من شاربه فليس منا ○

(ஹதீஸ்) மன்லம் யஅகுது மின்ஷாரிபிஹி பலைஸ மின்ன.

மன்லம் யஅகுஜு என்னும் ஹதீசிலே
மேல்மீசையை வெட்டா விடிலொருவன்
என்உம்மத் தலவென்று எம்மிற சூல்நபீ
இயம்பித் திருவுளம் பற்றினரே. (25)

قَالَ النَّبِيُّ صلعم مَنْ قَطَعَ شَعْرَةً مِنْ لِحْيَتِهِ اَوْ مِنْ تَحْتِ لِحْيَتِهِ لَا يُسْتَجَابُ دُعَائُهُ وَلَا تَنْزِلُ عَلَيْهِ الرَّحْمَةُ وَلَا يَنْظُرُ اللّٰهُ تَعَالٰى نَظَرَ رَحْمَةٍ وَتُسَمِّيْهِ الْمَلٰئِكَةُ مَلْعُوْنًا وَهُوَ عِنْدَ اللّٰهِ تَعَالٰى بِمَنْزِلَةِ الْيَهُوْدِ وَالنَّصَارٰى ○

(ஹதீஸ்) மன்கதஅ ஷஅறதன் மின்லிஹ்யதிஹி அவ்மின் தஹ்தி லிஹ்யதிஹி லாயுஸ்தஜாபு துஆஉஹு வலாயன்துருல்லாஹ நதர றஹ்மதின் வதுஸம்மீஹில் மலாயிகது மல்ஊனன் வஹுவ இந்தல்லாஹி தஆலா பிமன்ஜிலதில் யஹூதி வன்னஸாறு.

மன்கதஅ ஷஅறதன் என்னும்ஹதீசிலே
மனிதனைத்தன் தாடி யில்நின்றொரு
அன்பான ரோமத்தை வெட்டினு லவன்துஆ
ஆகா குபூலென்று சொல்லி பின்னும் (26)

இன்னு மவன்மேலே றஹ்மத் ததுமில்லை
இறையோனின் றஹமத்தின் பார்வையில்லை
நன்று வானோர்களின் லஅனத்து மவன்தலம்
நசாறு எஹூதியில் என்றார்களே. (27)

மீசை நீட்டம்வைத்து தாடிச் சிறைத்துமே
மேன்மைப் பாராட்டுமோய் வாலிபரே
மீசைப் பட்டநீரை மற்றோர் குடிப்பது
மிக்க ஹறுமடா ஜாஹில்களே. (28)

தொழுகையைப் பற்றியே முன்கேள்வி மஹ்ஷரில்
துய்யோனுங் கேட்கையில் றுகூசுஜூத்
எழுந்துங் குனியவும் முடியாத உடுப்புள்ளோன்
எப்படி மீளுவான் ஆகில்களே. (29)

தொழுக முடியாத உடுப்புகளை மாட்டி
துய்யோனைத் தொழுகாத தோஷியவன்
பழுதில்லா மஹ்ஷரில் படைத்தவன் கோபத்தால்
படுகுழி நரகத்திற் பதிகுவானே. (30)

அந்நாளைப் பார்த்து இந்நாளில் யாரென்று
அட்டகாசம் பேசும் அசடர்களே
அந்நாளி லும்கெதி எந்நாகு மென்பதை
அடியில் ஹக்கனுறை கேட்பீர்களே. (31)

قَالَ اللّٰهُ تَعَالٰى. فَإِنَّمَا هِيَ زَجْرَةٌ وَاحِدَةٌ فَإِذَا هُمْ يَنْظُرُوْنَ وَقَالُوْا يَاوَيْلَنَا
هٰذَا يَوْمُ الدِّيْنِ هٰذَا يَوْمُ الْفَصْلِ الَّذِيْ كُنْتُمْ بِهٖ تُكَذِّبُوْنَ ۝

(தலீல்) பயின்னமாஹிய ஸஜ்றதுன் வாஹிததுன் பயிலா ஹூம் யன்துருன். வகாலூ யாவைலனு ஹாலாயவ்முத்தீன் ஹாலா யவ்முல் பஸ்லில்லதீ குன்தும்பிஹி துகஜ்ஜிபூன்.

பயின்ன மாஹிய என்னு மாயத்திலே
படைப்பை எழுப்புத லொருசப்தமே
பறக்க முழித்தவாள் எம்கேடே என்றுமே
பகரயில் சொல்வார் மலக்குகளே. (32)

இந்த நாளுதானே நீதம்செய் கின்றநாள்
இதுவேதான் பைசலு செய்கின்ற நாள்
இந்நாளை நீங்களும் பொய்யாக்கி வைத்தீரே
அந்த நாளே இது என்பார்களே. (33)

அப்போது பாவிகள் அழுதுப் புலம்பியே
அடித்து மோதிவிம்மி அலறிநின்று
தப்பாது உலகத்தில் தான்தான்செய் குற்றத்தின்
தவரதை யாபித்து அழுவார்களே. (34)

கெஞ்சிடும் நாளையில் மிஞ்சிடும் பாதகர்
　　கிருபை யாளன் மிஞ்சும் நாளையிலே
அஞ்சியே நாம்கெஞ்சி அழுதாலும் விடுவானோ
　　ஆய்ந் தறிந்துஅமல் செய்வீர்களே. (35)

ஹக்கன் அனைவர்க்கும் ஹக்குபாத்தில் களை
　　ஆய்ந்து நல்அஹ்ஸன் அமல்செய்திட
மிக்கக் கிருபையும் தௌபீகைத் தந்தவன்
　　மேன்மேலுங் காக்கவே ஆமீனுமீன். (36)

ஹுருவ்ஸ் கூடு கொடி முதலியவைகளை விலக்கல்.

—(o)—

(கும்மி இராகம்.)

எல்லாம் படைத்தாளும் வல்லவனே எற்ற
　　இசுலாமின் பிறவிகள் பிரிசமுடன்
பொல்லாக் கொடிகூட்டைப் போக்கிநல் அமல்செய்ய
　　புகழுக் குடையவன் காப்பாமே. (1)

அல்லாவைத் தவிரவே நயநஷ்டங் கள்தர
　　ஆருக்குமே சக்தி யில்லை யின்னும்
அல்லாவைத் தவிரவே எவருக்கும் நேர்ச்சைகள்
　　ஆகாது செய்வது ஷறீஅத்திலே. (2)

அல்லாவின் தோஸ்தான ஒலிமார்கள் எவர்கட்கும்
　　அமைத்தல் கொடிகூடு பஞ்ஜா அது
பொல்லா விலக்கலும் ஷிற்கும் ஹறுமென்று
　　புக்ஹாக்கள் சொல்பார்த் திருப்பீர்களே. (3)

அல்லாவின் ஒலிமார்கள் மருங்கை யுத்தேசித்து
அன்பாக கொடிகூடு ஸந்தலதை
நல்லாநாம் செய்திடில் நலமுண்டும் விட்டிடில்
நஷ்ட மாகுமென்பார் ஜாஹில்களே. (4)

அதற்கு வரிப்போட்டு வாங்கலுங் கொடுக்கலும்
அன்பாக முன்னின்று செய்வதுவும்
இதமாய் கூட்டங்கூட்ட எற்றஅலங்கிர்தம்
இன்புற்றுச் செய்வதும் பெரும்பாவமே. (5)

இன்னு மவைகட்கு பிஸ்மில்லா சொல்லியே
எடுப்பதும் பிடிப்பதும் குபிருஎன்று
வின்னம் மில்லான்ஆயாத் வேண்டும் அஹாதீஸ்
விருப்ப *அஇம்மாக்கள் பத்வாக்களில். (6)

எற்பட் டிருப்பதை இறையோன் றனக்காக
எற்ற உலமாக்கள் விலக்கிவர
நேர்மை என்றுகண்ட அனந்தஊர் வாசிகள்
நிறுத்தியே விட்டார்கள் கொடிக் கூடதே. (7)

மார்க்க மறியாதும் அறிந்து முணராது
மாநி லத்தில்சில ஊர்களிலே
மூர்க்கத் தனமான கண்மூடி கள்சிலர்
மீறியே நடத்துறுர் கொடிக் கூடதே. (8)

கொடியப் பாவமான கொடிகூட்டை விலக்கவே
கோமா னறிவாளர் தாமுரைக்க
நெடுங்காலச் செய்கையை நாங்கள் விடோமென்று
நீட்டியே பேசுவோர் கேட்பீர்களே. (9)

قَالَ اللّٰهُ تَعَالَىٰ. اِنَّ الْمُبَذِّرِيْنَ كَانُوْا اِخْوَانَ الشَّيَاطِيْنِ ۝

(தலீல்) இன்னல் முபஜ்ஜிரீன் கானு இக் வானுஷ் ஷயாதீன்.

* அஇம்மாக்கள் என்பது, நான்கு இமாம்கள்.

இன்னல் முபஸ்ஸரீன் என்னும் ஆயத்திலே
இப்லீசின் உடற்பிறந் தாரவர்கள்
வின்னவீண் செலவிடும் வீணர்தானே என்று
வேந்த னுரைத்தானே புறுகானிலே. (10)

கூடுக் கொடிஏற்றச் சிலவதையு மன்றைக்
கொட்டு மேளங்கொட்டும் செலவதையும்
ஈடு சொல்லவேணும் இறையோன் திருமுன்னே
†இஸ்றுபில் செலவிட்ட ஜாஹில்களே. (11)

துனியாவில் நாம்வந்தக் காரிய மறியாமல்
தடுக்காகக் கொடிகூடு கந்தூரியில்
அனியாய பாவத்திற் காளாகும் வீணர்கள்
ஆயத்தைக் கவனித்துப் பார்ப்பார்களே. (12)

கொட்டு மேளங்கொட்டிக் கூடை எடுக்கவே
கோமான் நபீவலீ சொன்னதுண்டா
அட்டு ழியம்பேசி ஆகாப் பாவஞ்செயல்
அதுவீணற் செயலாகு மறிவீர்களே. (13)

சிலகால வாழ்க்கையில் பலகால துன்பத்தின்
ஷிற்குக் குபிர்ஆட்டம் பாட்டங்களை
நலமென்று செய்திடும் வம்பர்கள் மஹ்ஷரில்
நாணங் குலைந்துநின் றழுவார்களே. (14)

செய்துள்ளப் பாவங்கள் போதாதென் றுங்களை
ஷைத்தான் ஊரார்கள் பாவமெல்லாம்
அய்தம் முடனுக்க அவ்லியா நேர்ச்சைக்கு
ஆளாக்கி னுனும்மை ஜாஹில்களே. (15)

ஆசை யுடனீங்கள் அவ்லியாக் கள்பேரில்
ஆவலாய் செய்திடும் நேர்ச்சை யதில்
தோஷம் விளைக்குமென் றுலமாக்க ளுரைத்திடில்
தடுக்காகப் பேசுவோர் கேட்பீர்களே. (16)

† இஸ்றுபில் என்பது, வீணில்.

قَالَ النَّبِيُّ صلعم. قِوَامُ الدُّنْيَا بِأَرْبَعَةِ أَشْيَاءَ أَوَّلُهَا بِعِلْمِ الْعُلَمَاءِ وَالثَّانِي

بِعَدْلِ الْأُمَرَاءِ وَالثَّالِثُ بِسَخَاوَةِ الْأَغْنِيَاءِ وَالرَّابِعُ بِدُعَاءِ الْفُقَرَاءِ ○

(ஹதீஸ்) கிவாமித் துன்யா பிஅர்பஅ திஷ்யாஅ அவ்வலுஹா பிஇல்மில் உலமாஇ வத்தானீ பிஅத்லில் உமருயி வத்தாலிது பி ஸகாவதில் அகனியாயி வற்ராபிஉ பி துஆயில் புகருயி.

உலகம் நிலைப்படல் உலமாக்கள் இல்மினால்
 * உமருக்கள் நீதத்தால் கொடையாளரால்
நலதுஆ புருக்கள் செய்வதி னாலென்று
 நாயகர் நபியுல்லா மொழிந்தார் களே. (17)

இந்த ஹதீசுபோல் எல்லோரும் நடந்திடில்
 இருலோகில் அடாது துன்பந்துயர்
அந்தம் முடன்அறி யாஇணைவைப் போர்க்கு
 ஹக்கன் அருளதைக் கேட்பீர்களே. (18)

قَالَ اللهُ تَعَالَى. إِنَّ اللهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذٰلِكَ لِمَنْ يَشَاءُ ○

(தலீல்) இன்னல்லாஹ லாயக்பிரு அன்யுஷ்றக பிஹி வயக்பிரு மாதூன தாலிக லிமன் யஷாஉ.

திட்ட மாகஅல்லா பொறுக்கா னவனுடன்
 தீங்கான இணைவைக்கும் பாவங்களை
நட்ட இணையல்லால் மற்றதைப் பொறுக்குவேன்
 நாடின பேர்க்கென்றான் தீனோர்களே (19)

* உமருக்க ளென்பது, அமீர்கள்.

وَقَالَ تَبَارَكَ وَتَعَالَى. وَمَنْ يُشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلَالًا بَعِيْدًا ○

(தலீல்) வமன்யுஷ்ரிக் பில்லாஹி பகத்தல்ல தலாலன் பயீதா.

இன்னு மொத்தன் அல்லா வுக்குஇணை வைத்தால்
இவன்கிட்ட மாய்தூர வழிகெட்டிலே
வின்னமாம் வெளிகெட்டுப் போனு னவனென்று
வேந்த னுரைத்திட்டான் புறுகானிலே. (20)

ஷிற்கென்ப தென்னெனில் இணைவைத்த லாமென்றும்
சிறந்தோ னுடன்யாது மிணைசேர்த்தவன்
முர்தத்து வாகிட்டான் முஸ்லிம் பங்கைவிட்டு
மூமினோர் யாபித்துக் கொள்வீர்களே. (21)

அரச னுக்குச்சொந்த மானதோர் வஸ்துவை
ஆளனைக் கேட்டால் கிடைத்திடுமா
சரசமாய் கிடைத்தாலு மவ்வஸ்து நிலைக்குமா
சரிவா நிலைக்காது கேட்பீர்களே. (22)

அல்லா வுக்குச்சொந்த மானதோர் வஸ்துவை
அவனுட ஆளனைக் கேட்டிடிலோ
நல்லா கிடைக்குமா நாயன் பொருத்தமா
நன்றாக யோசித்துப் பார்ப்பீர்களே. (23)

பிரத்தியா னுடனொத்தன் பெண்சார்தித் தனியாக
பேசக் கண்டுமனம் சகிக்காமலே
உரமா யவளை யொழிக்கும்போ லிணைவைத்தோர்
ஒருபோது மீடேற்ற மாகார்களே. (24)

மார்க்கச் சட்டம்விட்டு மூர்க்கம்போல் சட்டங்கள்
மனதாலும் நினைப்பதுங் கூடாதென்று
தீர்க்கமாய் தீனுட புகஹாக்கள் உலமாக்கள்
திட்டமா யொருமித்துச் சொன்னார்களே. (25)

இவ்வா றிருக்கையில் இறையோனுக் கிணைவைத்து
எடுத்தல் கூடும்நேர்ச்சை ஷறீஅத்திலே
செவ்வை யென் றுநானி நானுபாட்டன் பூட்டன்
செப்பும் கிதாபுண்டோ ஜாஹில்களே. (26)

ஆதார மில்லாமல் ஹக்கன் பொருந்திடா
அழிச் சாட்டியமாக கூடெடுக்க
வாதாட்டங்கள் செய்து வல்லோனுக் கிணைவைத்து
வழிகெட்டுப் போகாதீர் தீனோர்களே. (27)

قَالَ اللهُ تَعَا . اَلَآ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ○

(தலீல்) அலா இன்ன அவ்லியா அல்லாஹி லாகவ்புன் அலைஹிம் வலாஹும் யஹ்ஜனூன்.

அலா இன்ன அவ்லியா அல்லாஹி ஆயத்தில்
அல்லாவின் தோஸ்துகள் கட்டாயமாய்
எல்லா பயங்கர மற்றோரென்று மின்னும்
சலிக்க மாட்டாரென்றான் தீனோர்களே. (28)

அவ்லியா அல்லாஹி என்பது யாரெனில்
அல்லாவின் இஷ்டர்க ளறிந்துக் கொள்ளும்
யவ்மல் கியாமத்தை எப்போதும் யாபித்து
ஏற்ற அமல்செய்தோர் அறிவீர்களே. (29)

அல்லா றசூலுட சொல்லுக்கு வழிபட்டு
ஆராய்ந்து பறலையும் வாஜிபையும்
நல்லார் நபியுட சுன்னத்தை யும்பேணி
நாளும் நடந்தின்னுங் கேட்பீர்களே. (30)

அல்பகல் அல்லாவின் பயங்கரத் தினாலே
அழுதக்கண் துடைத்த முகமாகவும்
தொல்லை துனியாவைத் தூராக்கி துய்யோனின்
தோஸ்துக ளாகிய ஒலிமார்களே. (31)

இரவில் வணக்கமும் பகலில் நோன்பதும்
எப்போதும் திக்கீரும் பிக்கீருடன்
உரமாகச் செய்திட்ட ஒலிமார்கள் மருங்கதை
உணராத சிலஊரில் ஜுஹலாக்களே. (32)

அவ்லியா தமக்காகப் புண்ணியக் தேடவே
ஆகிர் ஸமானுவா மிக்காலத்தில்
தவ்ஹீதை யுணராத தர்மகர்த்தா சிலர்
தர்காவில் கர்மத்தைச் செய்றார்களே. (33)

உலகத்திற் பலபுத்து உண்டுமதற் கெல்லாம்
உற்றதாய் புத்தென்று ஜோடித்ததை
பலபக்க மெடுக்கச்செய் தர்மகர்த்தா வுக்கே
பாவ மெல்லாஞ் சொந்த மறிவீர்களே. (34)

கூட்டை எடுக்கவும் கொட்டு மேளங் கொட்டி
கொளுத்தும் விளக்குடன் வீதிவர
வீட்டை விட்டும்வெகு தேட்டமுடன் பார்க்க
வெளியில் வருகிறார் பெண்டுகளே. (35)

கொட்டு மேளங்கொட்டுங் கூத்தாடிப் பரையனுங்
கூடெடுக் குங்கூலிக் காரனெல்லாம்
வெட்க மில்லாமலே வெளிவந்தப் பெண்களை
விருப்பமாய் முறைக்குவார் பலபேர்களே. (36)

கள்ள ஹறுமிகள் பெண்களைக் கூட்டத்தில்
கண்டு களித்துமே மோகத்துடன்
உள்ளா வுருகியே ஊராரைக் கூட்டியே
ஒய்யாரம் பேசல்கேள் ஜாஹில்களே. (37)

கண்டனன் தர்காவில் வீதியில் உருசன்று
கனத்த வழகுள்ள குமரிகளை
தண்ட மவர்கள்முன் நம்முட பெண்களை
தலைசுத்தி வீசலா மென்பார்களே. (38)

கண்ணினுல் பெண்களைப் பார்த்துக் களித்தவன்
கனவில் மனிகாரி ஜாகும்பாவம்
ஒன்றுந் தவருமல் தர்மகர்த்தா எட்டில்
உரமாகப் பதிவாகும் அறிவீர்களே. (39)

பத்தினி யாகிய உத்தமிப் பெண்களைப்
பலீஹத்தி லாக்கிடும் புருஷனவன்
மெத்தப் பாவியவன் மேலோனின் லஅனத்தை
மேன்மேலும் பெறுவானென் றறிவீர்களே. (40)

قال الله تعالى. لعنة الله على الظالمين ۝

(தலீல்) லஅனதுல்லாஹி அலத்தாலிமீன்.

லஅனத் துல்லாஹி அலஜ்ஜா லிமீனென்னும்
ஆயத் திலேபாரும் அல்லாவுட
லஅனத்து ஜாலிம்கள் பேரிலா குமென்று
நவின்றுனே புறுகானில் தீனோர்களே. (41)

அழிச் சாட்டியம் செய்த இப்லீசு ஷைத்தானை
ஆண்டவன் லஅனத்து செய்த பின்னர்
பழிகார னிபுலீசு அல்லாவைக் கேட்டதைப்
பகரவே கேளுங்காள் தீனோர்களே. (42)

ஆதம் பொருட்டினுல் ஆனேன்நான் மல்ஊனுய்
அவரைநான் கெடுக்குவேன் சத்தியமாய்
நீத மவர்மக்கள் யாவரை கெடுக்குவேன்
நிச்சய மாஎன்றுன் அப்போதிலே. (43)

அல்லா அருளினுன் கேளடா மல்ஊனே
அடியரில் உன்சொல்லைக் கேட்பவர்கள்
எல்லாமே மல்ஊனு என்னுட தர்பாரில்
இப்லீசே என்றுனே தீனோர்களே. (44)

அப்போது இப்லீசு அல்லாவைக் கெஞ்சியே
அடுக்குங் கியாமத்து வரையி லென்னை
மெப்பா ஹயாத்தாக்கி வைப்பாயென்று கேட்க
மேலோன் சரிஎன்ருன் தீனேர்களே. (45)

பின்பு இபுலீசு இறையோனைக் கேட்டனன்
பிரிசமா யென்னுட செங்கோலுக்கு
இன்பாக நபியாரு எனகேட்க குறிசொல்வோர்
என்றுனே இறையவன் ஜாஹ்லாக்களே. (46)

என்வேத மெதுவென்க இப்லீசே உன்வேதம்
ஏற்றப் பச்சைக்குத்தல் என்றுரைக்கப்
பின்னர் இபுலீசென் மஸ்ஜிது எதுவென்க
கடைவீதி என்றுனே ஜாஹில்களே. (47)

என்பள்ளிக் கழைக்கவே வாங்குச் சொல்லுமோதீன்
எவரென்க கொட்டுமே ளங்கொட்டியே
வின்னப் பிடீல்வீணை சாரிந்தா வாத்தியம்
வாசிப்போ ரென்றுனே ஜாஹில்களே. (48)

இப்லீசின் மஸ்ஜிது கடைவீதி என்றும்பின்
இவனுக்கு மோதீனர் கொட்டுமேளம்
தப்பாது உண்டென்று ஷறஉ மிஷ்க்காத்திலே
தகுமா வந்ததைப்பாரும் ஆகில்களே. (49)

கொட்டு மேளசப்தங் கேட்டகோஷாப் பெண்கள்
குதித்து வெளியிலே ஓடிவந்து
தட்டுக் கெட்டுத்தலை விரித்து நின்றபாவம்
தர்ம கர்த்தாவுக்கே அறிவீர்களே. (50)

கொட்டு மேளம்மது இப்லீசின் பாங்கதை
கொட்ட வைத்ததர்ம கர்த்தா அவன்
திட்டமா இபுலீசின் மஜ்லீசுக் கழைக்கின்ற
திங்க னவன்றுனே தீனேர்களே. (51)

மவுத்தானக் கிழவியை மண்ணி லிறக்கையில்
மறைவாக்கி தபன்செய்ய மார்க்கஞ் சொல்ல
கவுத்தன் மஜ்லீசில் உயிருள்ள குமர்களைக்
காண்க விடலாமோ ஜாஹில்களே. (52)

பத்தினி யாகிய உத்தமிப் பெண்களை
பலபேர்கள் இச்சிக்க பாங்குசொல்லி
எத்தாக அழைக்கச்செய் தர்ம கர்த்தாவுக்கே
எல்லா பலாவாகும் ஆகில்களே. (53)

இன்னுங் கொடிகூட்டை இன்புடன் பார்ப்போரும்
இயல்பாக முன்னின்று செய்தவரும்
வின்னப் பாவஞ்செய்த வீணர்கள் தாமென்று
விருப்பமா யறியுங்கள் தீனோர்களே. (54)

உங்கள்மேல் வலிமார்கள் றாஹூ சந்தோஷிக்க
உகப்புட னுடிடும் தீனவர்கள்
சங்கை ஷறஉபோல் செய்கின்ற நேர்ச்சையை
சருகா துரைக்கவே கேட்பீர்களே. (55)

அல்லாஹூ என்ஹாஜத் இன்னதை யுன்னுட
அவ்லியா இன்னவர் தம்பொருட்டால்
நல்லா நிறைவேற்றில் இன்னதை உனக்காக
நலஞ் செய்வதாய் நேர்ச்சை செய்வீர்களே. (56)

அன்னம் சமைத்ததை முஸ்லிம்க ளுக்கீந்து
அல்லாவின் புறுகானை யோதவைத்து
நன்றிந்தப் பலனதை நாயன்புரஞ் சாட்டி
நாயன் வலிமார்க்குச் சேர்ப்பீர்களே. (57)

இதைவிட்டுச் சதியாக கொட்டுங் கொடிகூடு
இடரான நேர்ச்சையும் இணைவைத்தலும்
பதைத்துத் துணிந்துசெய் பாவிகள் பேரிலே
படைத்தோன் லஅனத்து அறிவீர்களே. (58)

ஆகில்க ளுக்கிந்த மட்டும் போதும்போதும்
அறிந்துதன் ஈமானைக் காப்பாற்றுவார்
ஜாஹில் களுக்கெந்த உபதேச முரைத்தாலும்
சற்றேனு மேற்காது வாகையினால். (59)

இந்த மட்டும்சொல்லி இறையோன் பரம்சாட்டி
இதைக் கொண் டிசுலாத்தி னுணுபெண்கள்
நிந்தனைக் காளாகா அஹ்ஸன் அமல்செய்ய
நெடியோன் தௌபீக்தர ஆமீனாமீன். (60)

— (:) —

## முஹற்ரம் மாதம்பிறந்ததைப் பற்றிய நல்மாராயம்.

### கும்மி இராகம்.

அர்வாஹே ஆலம்பின் ஆயிரக் கணக்கான
ஆண்டுகள் சென்றபின் இந்தப்புது
வருஷந் துவக்கமாய் மாதமுஹற்ரமை
வல்லோ னனுப்பினான் நமக்காகவே. (1)

இந்த முஹற்ரமின் மாதம்வரையிலே
எம்முட வயதுக ளெத்தனையோ
அந்த முடன்சென்று எத்தனை வாலிபர்
ஆனார் கிழவராய் தீனோர்களே. (2)

இன்னுமே நம்முட எத்தனை யன்பாசை
எல்லா மழிந்துமண் ணாகிட்டது
பின்னுமே எத்தனை சீமான்கள் ஏழையாய்
போனார்கள் கவனியும் ஆகில்களே. (3)

இன்னுமே எத்தனை ஏழைக்குடிகள் தான்
ஏற்ற சீமானுமா யாகிவிட்டார்
பின்னெத் தனைமனு மடிந்துமண் ணாகிட்டார்
பிசகாது கவனியும் தீனோர்களே. (4)

இன்னுமே என்போல வீரசூரத்திலே
எனக்கெதிர் யாருமே இல்லையென்றோர்
நன்று வலுப்பேசும் பலபேர்கள் மண்ணிலே
நாய னமற்படிப் புகுந்தார்களே. (5)

ஆகையா லிதுபோல இவ்வாண்டு முடிவரை
யார் இருப்பார் யார்இறப் பார்களோ
ஜாகைப் புவியிலே என்னென்ன சஞ்சலம்
சாருமோ அறியோமே தீனோர்களே. (6)

قَالَ اللّٰهُ تَعَالٰى قُلِ اللّٰهُ يُحْيِيكُمْ ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يَجْمَعُكُمْ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ لَا رَيْبَ فِيهِ ○

(தலீல்) குலில்லாஹு யுஹ்யீகும் தும்மயுமீதுகும் தும்ம யஜ்மஉகும் இலாயவ்மில் கியாமதி லாறைப பீஹி.

குலில்லாஹு யுஹ்யீகும் ஆயத்திலே சொல்லும்
உங்களை அல்லா ஹயாத்தாக்குவான்
பின்பு மவுத்தாக்கி சேகரிப் பானதில்
பிசகில்லை என்றானே தீனோர்களே. (7)

قَالَ اللّٰهُ تَعَالٰى إِنَّ الْمُجْرِمِينَ فِي عَذَابِ جَهَنَّمَ خَالِدُونَ ○

(தலீல்) இன்னல் முஜ்ரிமீன பீஅதாபி ஜஹன்னம காலிதூன்.

இன்னல் முஜ்ரிமீன பீ அதா பாயத்தில்
எந்நாளும் பாவிகள் திட்டமாக
துன்ப அதாபை நரகிற் பெருவதாய்
துய்யோ னிதைச்சொன்னான் தீனோர்களே. (8)

மவுத்தை மறந்துமே மனைமக்க ளாசையால்
மருங் காம்ஹயாத்தான கொள்ளை வாழ்க்கை
கவுத்த னிபுலீஸால் கைசோர விட்டிடா
கர்த்தன் நபிஏவல் கேட்பீர்களே. (9)

இந்த ஏவல்கள்போல் எம்முட மவுத்தின்பின்
எழும்பல் கியாமத்து நாளும்வரும்
அந்நாளில் அல்லாவின் திருமுன்னே நிற்பது
யாருக்குந் தவறாதென் றறிவீர்களே. (10)

நம்முட மேலெண்ணம் நமக்கு உதவாது
நாயன் நபியுல்லா சொல்லுதவும்
செம்மையா யோசித்து முஹற்றமில்செய் யமல்
செப்பவே கேளுங்காள் தீனோர்களே. (11)

## ஆஷூறு நாள் சங்கை

கும்மி இராகம்.

அல்லாவைப் புகழ்ந்துபின் அஹ்மது நபிபேரில்
அன்பாய் சலவாத்தை சொல்லியபின்
நல்ல ஆஷூறுநாள் சங்கையைச் சொல்வதால்
நலமுடன் கேளுங்காள் தீனோர்களே. (1)

ஆஷூரு நாளது எல்லா நாளைக்காண
ஆகு மதுஎற்ற மாகியநாள்
ஆஷூரு நாளில்தான் வானத்தை ஹக்கனும்
அமைத்தா னென்றுநபி சொன்னார்களே. (2)

அந்நா ளையில்தானே மலைகள் உற்பத்தியும்
ஆகும் கல்த்தையும லௌஹதையும்
அந்த முள்ளஅறுஷூ குர்சியை படைத்ததும்
ஆஷூரு நாளையில் என்றார்களே. (3)

இன்னும் பாவாஆதம் நபியைப் படைத்ததும்
எற்ற சுவர்க்கத்தில் புகவைத்ததும்
பின்னும் சுவர்க்கத்தை விட்டாத நபிதம்மை
பிரித்தநாள் ஆஷூரு என்றார்களே. (4)

அந்நாளை யில்தானே ஆதம்சபியுல்லா
அவர்கள்துஆ குபூலான துவும்
இன்னுமே இப்ருஹீம் நபிகலீல் பிறந்தது
மிதுவே ஆஷூருநா ளென்றார்களே. (5)

இன்னுமே பிர்அவ்னு மவன்கூட்டம் நீலாற்றில்
எல்லோரு முங்கியே மாண்டதுவும்
பின்னும் நபீமூசா பிர்அவ்னை வென்றதும்
பிரிச ஆஷூருநா ளென்றார்களே. (6)

இந்நா ளில்தான்நபி ஐயூபு நோய்விட்டும்
இவர்சுக மானது முலகத்திலே
அந்த முள்ளநபி ஈசாப் பிறந்ததும்
ஆஷூரு நாளென்று சொன்னார்களே. (7)

இன்னு மிந்தஎற்ற ஆஷூரு நாளையில்
இயல்பாக ஆகும்கி யாமத்துநாள்
நன்றிந்த நாள்செய்யும் அமலுட சங்கையை
நாயகர் நபிசொல்லைக் கேட்பீர்களே. (8)

நோன்பொன்று ஆஷூறு நாளையில் வைத்தவன்
நோன்பாளி யவனுட வருஷமொன்றின்
தோன்றும் பாவங்களைப் பொறுக்கப் படுமென்று
துய்யோன் நபியிதைச் சொன்னார்களே. (9)

ஒருவன் ஆஷூறுநாள் நோன்புவைத் தால்கேளும்
ஒருபதி னாயிரம் ஷூஹதாக் களின்
சருகாப் பலன்பதி னாயிரம் ஹாஜிகள்
சங்கை என்றுநபி சொன்னார்களே. (10)

இன்னுமந் நாள்நோன்பு வைத்தோனுக் குமவன்
இன்பான மக்கட்கு மவ்வாண்டிலே
அன்பாக ரிஸ்கதை வஸ்த்திர ணமாக
ஹக்கன் செய்வானென்று சொன்னார்களே. (11)

இன்னுமந் நாளையில் உடையில்லா தவர்கட்கு
எவன்உடுத் தாட்டினா னேஉடையை
நன்றவன் மஹ்ஷரின்கஷ்டம்நீங்கு மென்று
நாயன் னபியுல்லா சொன்னார்களே. (12)

இன்னு மன்றுகைறு கைருத்து முதலிய
ஏற்ற நலஞ்செய்த ஒருவனுக்கு
நன்று பலன்நாயன் கணக்கில்லா தருவதாய்
நம்நபி உகந்திதைச் சொன்னார்களே. (13)

இன்னுமந் நாளையில் நல்ல வஜீபனம்
இன்பாக சமைத்துதன் மித்திரர்கள்
இனத்தினர் அஹ்பாப் மிஸ்கீன் எத்தீம்கட்கு
ஈவதி னல்பலன் கேட்பீர்களே. (14)

அவ்வாண்டு முழுதுமே அவனுட தொழிலிலே
அதிக பறக்கத்தை ஹக்தஆலா
செவ்வையாய் தருகுவான் என்னும் ஹதீசிதை
சிறந்தோன் னபியுல்லா சொன்னார்களே. (15)

ஆகையா லன்பான ஆஷூரா நாளையில்
அரிதான குறுஆனை ஓதியுமே
ஜாகை யிதைநம்பா நோன்புவைத் தமல்செய்து
சங்கையைப் பற்றுங்காள் தீனோர்களே. (16)

## ஹுஸைன் றலியல்லாஹு ஷஹீதாக காரணம்.

அலியுல்லா புத்திரர் அழகார் ஹுஸைன் றலீ
ஆஷூறா நாளதில் கர்பலாவில்
நலிந்து மெலிந்தவர் நல்ஷஹீ தாகிடல்
நாயன் பரிக்ஷைஎன் றறிவீர்களே. (1)

இந்த பயானை விரிவாக உரைத்திடில்
இச்சிறு நூல்பெரி தாகுமென்று
அந்த முடன்சில முக்கிய விஷயங்கள்
அருளினம் சுருக்கமாய்த் தீனோர்களே. (2)

ஏனெனில் விரிவாக உரைத்திடில் படிப்பவர்
இன்புற்றுக் கேட்பவர் சடைவு கொண்டு
தானே மலைத்தவாள் விட்டிடா கல்பதில்
தரிக்கும் வண்ணம் சொல்லக் கேட்பீர்களே. (3)

قَالَ اللّٰهُ تَعَالٰى. وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِنَ الْاَمْوَالِ
وَالْاَنْفُسِ وَالثَّمَرَاتِ ۝

(தலீல்.) வலனப்லு வன்னகும் பிஷையின் மினல்கௌபி
வல்ஜூஇ வனக்ஸின் மினல் அம்வாலி வல்அன்புஸி
வஸ்தமராத்.

இன்னுங் கட்டாயமாய் பரிசோதனைச் செய்வோம்
உங்களை சிற்சில வஸ்தைக் கொண்டு
பன்னும் பயம்பசி பொருள் நஷ்ட முடலின்னும்
பழவர்க்கத் தாலென்றான் தீனோர்களே. (4)

இந்தப் பரிக்ஷைகள் யாவுமே ஆஷுரு
ஏற்றநாளில் ஹுஸைன் றலியவர்மேல்
அந்தம் முடன்அல்லா பரிசோதனைச் செய்த
அமளியைப்பின் சொல்லக் கேட்பீர்களே. (5)

ஆயத்துப் போலவே *ஐயூபு நபிதம்மை
அவர்சொத்து மனைமக்கள் நஷ்டத்துடன்
தீயப் பெரும்நோயை திரேகத்திலே விட்டு
திட்டமாய் சோதித்தான் அறிவீர்களே. (6)

இதுபோல நம்நபி நாயகர் பேரிலே
எத்தனை யோவித கஷ்டங்களை
அதிபதி றஹ்மானும் விட்டுசோதித் ததை
அனந்த மாய்கேட்டு மிருப்பீர்களே. (7)

(நபி நாயக மவர்களுக்கு பேரர்களுடைய பிரிசம்.)

நபிமகள் பாத்திமா லஹ்றாவின் மக்களை
நாயக றழைப்பது இப்னேன் றுதான்
புவிமீதில் பேரர்சன் றழைக்கவில்லை என்று
புகாரியில் வந்ததைக் காண்பீர்களே. (8)

மவுத்துட சீக்கிலே மன்னர்நபி யிடம்
மருங்கான தோழமா ரஸ்ஹாபுகள்
தவுலத்தே எமக்காரை விட்டுப்போறீ ரென்று
தத்தளித் தழுதவாள் கேட்டார்களே. (9)

* நபி ஐயூபு அலைஹி சீமான்தனம், 30 ஆயிரம் குதிரைகள் 40 ஆயிரம் ஒட்டகங்கள் 50 ஆயிரம் எருதுபசுக்கள் முதலிய மாடுகள் 60 ஆயிரம் ஆடுகள் 30 ஆயிரம் லவுண்டி குலாம்கள் 6 பீபிமார்கள் 12 ஆண்மக்கள் 6 பெண்மக்களு மிருந்தனர் :—

அழுதிடுந் தோழர்க்கு தேர்ச்சைப் பலசொல்லி
அஸ்ஹாபு மார்களே உம்மிடத்தில்
பழுதில்லா புறுகானு மென்ஆலும் விட்டனன்
பயப்படா தீரென்று சொன்னார்களே. (10)

ஆல்என்பது நபி மகளாரு பாதிமா
அன்பாய் பெரும்பாலர் ஹஸனுசைனர்
பாலர் களைவிட்டுப் போறேனென்று நபீ
பகர்ந்தக் கருத்தாகு மறிவீர்களே. (11)

அப்போல் கொத்தஹுஸைன் றலியல்லா பேரிலே
ஆபத்தும் துன்பமும் கர்பலாவில்
தப்பாது நடந்திடக் காரணம் யாதென்றத்
தகமையை சுருக்கமாய் கேட்பீர்களே. (12)

மன்னர் நபிநாளில் ஷாமுக்கு அதிபாய்
மஆவியா றலியவர் தாமிருந்தார்
பின்னர் நபியுல்லா ஆகிரம் சென்றதும்
பிரிசத் தோழர்நான்கு பேர்களிலே. (13)

(நான்கு தோழமார்களுடைய கிலாபத்து)

முதல்தோழர்* அபூபக்கர் மறுதோழர் †உமரவர்
முறைபோல தீனின்கிலா பத்ததை
இதமாக வேபெற்று நடத்திய காலத்தில்
இயல்பாய் நடந்தது தீனோர்களே. (14)

மூன்றுவ துதோழர் உஸ்மான்றலி யவர்
முறைபோல வேதீன்கிலாபத் ததை
ஊன்ற லாய்நடத்திடும் நாளையில் மர்வானால்
உண்டான கலகத்தைக் கேட்பீர்களே. (15)

* அபூபக்கர் றலியவர்கள் கிலாபத்து 2 வருடம் 4 மாதம் செய்து ஹிஜ்ரீ 13-வது ஆண்டில் 63-ம் வயதில் வபாத் தானார்கள்.

† உமர்றலியவர்கள் கிலாபத்து 10-வருடம் செய்து ஹிஜ்ரீ 23-வது ஆண்டில் 63-ம் வயதில் வபாத் தானார்கள்.

உசுமான் றலிஇன்னும் மஆவியா றலியுமே
உமையாவின் கிளையிலே சேர்ந்தவர்கள்
விசுவாச மாகவே வேந்தர் உதுமான்றலி
விருப்பமாய் வாழ்ந்திடும் நாளையிலே. (16)

மர்வான் வஜீருனன் உஸ்மான் றலியிடம்
மாபாவி மர்வானின் மனதில்கெட்ட
துர்நாட்டங் கொண்டவன் மிஸ்ருத் தலைவரை
தூஷணித் தாசரு மெழுதிடும்போல். (17)

வாசக மெழுதியே மிஸ்ருக் கனுப்பினன்
வந்தக் கடிதத்தைக் கண்டுஅமீர்
ஏசியே தாமென்னை தூஷித்து எழுதிட
எக்கா ரணமென்று எழுதிகேட்டார். (18)

கடிதங்கள் வருவதைக் காட்டாம லரசர்க்கு
கனதூஷ ணையாக பின்னெழுதி
அடிக்கடி மர்வானு மாசர் எழுதும்போல்
அனுப்பினன் அனந்தங் கடிதங்களே. (19)

அக் கடிதங்கண்டு மிஸ்ருக் கமீருன
அபூபக்கர் மகனர்முஹம்மத் றலீ
மிக்கக் கோபத்துடன் படைஎடுத்து வந்து
மதீனத் தாசர்மேல் போராடினர். (20)

ஹிஜ்ரீ முப்பத்தைந்து துல்ஹஜ்ஜு பதினேழில்
இறையோன் புறுகானில் சூரத்துந்நூர்
ஹஜறத்து உஸ்மான் றலிவீட்டி லிருந்தோத
ஹம்ருன் மகன் ஸவ்தான் என்பவனும். (21)

மற்றொரு சொற்படி மிஸ்ரி லுள்ளஉதைஸ்
மகனப்துற் ரஹ்மான் வாளைக்கொண்டு
நற்றவ உதுமான் றலிதம்மை வெட்டவே
*நல்ஷஹீ தானர்கள் அறிவீர்களே. (22)

* உஸ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கிலாபத்து 12-வருடம் செய்து ஹிஜ்ரீ 35-வது ஆண்டில் 82-ம் வயதில் ஷஹீ தானர்கள்.

அதன் பின்கிலாபத்தை அலிறலி தாம்பெற்று
அன்பாய் நடத்தையில் மஆவியாவும்
மிதமிஞ்சி கோபித்து அலியார்தான் உதுமானை
மெய்யாக வெட்டினு ரென்றெண்ணியே. (23)

தனதுக் கிளையாரை அலியுல்லா வெட்டியே
தவறாது தாம்பட்டம் பெற்றாரென்று
மனம்போலப் பழிக்குப் பழிவாங்க யோசித்து
மஆவியா றலிகோபித் திருந்தார்களே. (24)

அப்போது மஆவியா கோபித்தல் ஹக்கென்று
அருளுவா ரொருகூட்ட மின்னுமொரு
ஒப்ப முளக்கூட்டம் அலிறலி யல்லாஹூ
உண்மையில் இருப்பதாய் சொல்வார்களே. (25)

இன்னு மொருகூட்டம் எதும்பேசாப் பொதுவாக
இருந்தவாள் பிரிந்திட்டார் இருகூட்டமாய்
அன்பாக கார்ஜியும் ருப்ஜியு மென்பதாய்
அக்காலத் தில்வெளிப் பட்டார்களே. (26)

இவர்களில் கார்ஜீகள் மஆவியா றலிதம்மை
இன்சாபி லிருப்பதாய்க் பேசிக்கொள்வார்
தவறாமல் ருப்ஜீகள் அலிறலி நீதத்தில்
தகுமாக இருப்பதாய்ச் சொல்வார்களே. (27)

அப்போது மஆவியா மதீனத் தாசர்க்கு
அனுப்பும் கடிதத்தில் அதிகோபமாய்
ஒப்பமா உதுமானை வெட்டின தாரென்று
உடனே பதில்சொல்லக் கேட்டார்களே. (28)

அந்தக் கடிதத்தை அலியுல்லா கண்டதும்
அழகார் உதுமானைக் கொலைச் செய்தவன்
எந்த நபரென்று தண்டித்துந் தெரியாதால்
எழுதும் வாசகத்தைக் கேட்பீர்களே. (29)

எந்தன் கிலாபத்து புதிதான படியாலும்
இன்னு மிசர்ப்பதி தலைவர் செய்த
அந்தக் கலகங்கள் அதிகமா யிருப்பதால்
ஆராய்வோம் பின்னென்று வரைந்தார்களே. (30)

இதைக் கண்டுமஅவியா உஸ்மான் றலிதம்மை
இறக்க மற்றுவெட்டி யரசுசெய்ய
சதியெண்ணம் செய்தது அலிறலி தாமென்று
சந்தேக மிகக்கொண்டு அப்போதையே. (31)

நான்காம் தோழரான அலிறலி யவர்கட்கு
நயவஞ்ச கமுடன் மஆவியாவும்
தோன்றுங் கிலாபத்து தனக்கு வேணுமென்று
தூதோலை யனுப்பினர் கடிசாகவே. (32)

மதீனத் தரசான அலிறலி யல்லாஹு
மஆவியா றலியுட கடிதங்கண்டு
பதில ளிக்கவேண்டி அசுஹாப் களைக்கூட்டி
பண்பாக யோஜனை செய்தார்களே. (33)

அதியோஜனை செய்து மஆவியா நாடல்போல்
அன்பாய் கிலாபத்துக் கிடைக்கா தென்று
பதிலனுப் பக்கண்ட மஆவியா றலியவர்
படைகளைத் திரட்டினர் போராடவே. (34)

இந்தச் சேதிகேட்ட ஐரோப்பா ராஜர்கள்
இதுநல்ல சமயமென் றாலோசித்து
அந்தமாய் ஷாமுக்கு தூதர்களை விட்டு
அனுப்பும் சேதிகேளுந் தீனோர்களே. (35)

ஷாமுக்கு அரசாராம் மஆவியாவே கேளும்
சண்டை அலிபேரில் செய்வதானால்
நாமுங்கள் துணைக்காகப் படைகளை யனுப்புவோம்
நாட்ட மெவ்வாறென்று கேட்டார்களே. (36)

இந்தச் சேதிகேட்ட மஆவியா றலியவர்
எங்களின் மார்க்கிலா பத்தநின்
விந்தையாம் கேள்வியின் போராட்ட மிகில்நீங்கள்
வீணுகுந் தலையிடல் என்றுபின்னும் (37)

அதைப்பற்றி யோசிக்கா அலிபேரில் சண்டைக்கு
ஆயத்த மாய்நீங்கள் வருவிராகுல்
முதலுங்கள் பேரிலே சண்டைச்செப்வே னென்று
முழுமன துடன் பதில் அளித்தார்களே. (38)

பின்பு மஆவியா அலிறலி பேரிலே
பெருத்தக் கோபங்கொண்டு பெரும்படையை
இன்பாய் திறட்டியே போராட்டஞ் செய்திட
எதிர்த்து வந்தார் கேளுந் தீனோர்களே. (39)

அதற்குப்பின் சண்டையு மாரம்ப மாகியே
அலிசேனை யில்நாற்ப தாயிரம்பேர்
அதமாக மஆவியா படையிலே அறுபதி
ஞயிரம் பேர்மாண்டார் தீனோர்களே. (40)

அந்தச் சண்டையிலே அலியார் வெற்றிபெற
அப்போது மஆவியா றலியவர்கள்
அந்த முள்ளஉஸ்மான் றலிதம்மை வெட்டினோர்
அலியா ரல்லவென்றுத் தெரிந்தார்களே. (41)

அலியுல்லா தம்முடன் மஆவியா சுல்ஹாகி
அவர்தேசம் ஷாமுக்கு சென்றுவிட்டார்
சலியா கிலாபத்தை அலிறலி நடத்தையில்
சார்ந்த துக்கஞ்சொல்லக் கேட்பீர்களே. (42)

குற்றஞ்செய்த கார்ஜீ ஒருவனை கதல்செய்ய
கோமான் அலிபுலி ஆடர்செய்ய
உற்ற கதல்செய்தார் கார்ஜீ யவன்றன்னை
உகப்புள்ள அவனுட பெண்ஜாதியும். (43)

மல்ஜம் மகனுக்கு மனம்போல் திரவியம்
மற்றும் பலவித உபகாரமும்
நல்வித மாதந்து அலியாரை வெட்டென்று
நங்கை யனுப்பிட மல்ஜம்மகன். (44)

எதிர்பார்த் திருக்கையில் அலியார் கூபாவந்து
ஏற்ற ஜுமஆவின் பள்ளித்தேடி
நிதியாக பஜர்தொழ போம்போதுப் பதுங்கியே
நெற்றியில் வெட்டினன் வாளைக்கொண்டே. (45)

ஹிஜுரத்து நாற்பது றமலான் பத்தொன்பதில்
*இறையோன் புலியலி ஷஹீதாகினர்
ஹஜறத் அலிறலீ ஷஹீதாக அவர்மகன்
ஹஸன்றலி பட்டத்தைப் பெற்றார்களே. (46)

(ஹஸன்றலி யல்லாஹு அவர்களின் கிலாபத்.)

இதைக்கேட்ட மஆவியா கூபாதேசத் தார்க்கும்
இன்னும் பஸருவின் நாடுகட்கும்
நிதமாக ஹஸன்றலி யவருக்கு பைஅத்து
நீங்கள் செய்யொண்ணாது என்றார்களே. (47)

பின்பு மஆவியா ஹஸன்றலி யவருக்கு
பிசகா தெழுதிய வாசகம்கேள்
அன்பாக உம்தந்தை அலியாரும் நானுமே
ஆகுமோர் தர்ஜாவி லுள்ளவர்கள். (48)

அவருக்குப் பின்னர் கிலாபத் தெனக்காகல்
ஆமாகு மதைவிட்டு தாங்கள் பற்றல்
தவறாகு மானதா லெனக்கு கிலாபத்தைத்
தருக வேண்டுமென்று கேட்டார்களே. (49)

* அலிறலி யல்லாஹு அன்ஹு அவர்கள் கிலாபத் $4\frac{1}{2}$-வருடம் செய்து ஹிஜ்ரீ 40-வது ஆண்டில் 63-ம் வயதில் ஷஹீதானார்கள்.

இந்த விதமாக மஆவியா றலியவர்
ஏற்ற மதீனத் தாசருக்கு
அந்த முடனவர் எழுதியே கேட்கையில்
ஹஸன்றலி யல்லாஹு அப்போதிலே. (50)

அங்குள்ள அசுஹாபு மார்களைக் கூட்டியே
ஆலோ சனைசெய்து தீர்மானித்து
சங்கை யாகபதில் எழுதிடும் சேதியே
சாற்றவே கேளுங்காள் தீனோர்களே. (51)

(மஆவியாறலி யல்லாஹு அவர்களின் கிலாபத்.)

உடன் படிக்கையதில் ஓமஆவி யாவே யாம்
உகப்பான தீனின் கிலாபத்துவை
அடவுட *னுங்கள் ஹயாத்து வரையிலும்
அளித்தன மென்றுபின் கேட்பீர்களே. (52)

தங்க ளுக்குப்பின் கிலாபத்தைக் கொடுப்பது
தகுமாகு மதீனத் தாசருக்கு
அங்க முடனெப்பி சம்மத கையொப்பம்
அனுப் பென்று எழுதியே கேட்டார்களே. (53)

அதைக்கண்ட மஆவியா தம்மகன் யஜீது
ஹறும் ஹலா லறியாத மடையனென்று
பதில்தர யோசித்து பண்பா ஷஉருச்செய்து
பத்திர மெழுதல்கேள் ஆகில்களே. (54)

அந்தப் படியேதான் சம்மதமெனக் கென்று
அவர்கை யொப்பஞ் செய்யப் பார்த்த யஜீத்
பிந்திப் பட்டம்தனக் காகாது என்றெண்ணி
பிரையாசை எடுத்தனன் மிகைப்பாகவே. (55)

* ஹஸன்றலி றல்லாஹு கிலாபத்து 6மீ செய்து ஹிஜ்ரீ 41ல் மஆவியா றலிக்கி கிலாபத்தைச் சாட்டினார்கள்.

(ஹஸன்றலி யல்லாஹு அவர்களின் ஷஹீத்.)

பலதந்தி ரம்செய்தும் ஹஸன்றலி யைக்கொல்ல
பாவி யஸீதாலே முடியாததால்
கலக்கத்தி லிருந்தவன் கிழவி யொருத்தியை
கசட னழைத்துக் கழற லுற்ருன். (56)

நஞ்சைக் கொண்டுநீயும் ஹஸனுரைக் கொலைசெய்ய
நல்*மூப்பி யேஉம்மா லாமோவென்க
அஞ்சாமல் நெஞ்சந் துணிகா மாயவள்
அருளுவா ளெனக்கது பெரும்வேலையா. (57)

அழகில் வடிவில் நிறைந்த ஒருபெண்ணை
அலங்கரித் தென்னோ டனுப்பி வைத்தால்
அழகார் ஹஸன்றலி யவர்களைக் கொலைசெய்து
அன்பாக உம்முன்னே வருவே னென்ருள். (58)

அந்த மொழிகேட்டு ஆனந்த மாயஸீத்
அவன்றன் இனத்திலே அழகியபெண்
பந்த முடன்தேடி பண்பாய்ச் சிங்காரித்து
பக்ஷமாய் கிழவிக்கிப் பகர லுற்ருன். (59)

உந்த னுட்டம்போல இப்பெண்ணை யான்தேடி
உன்வசம் சாட்டினேன் ஆகையினுல்
அந்த முடன்கூட்டி மதீனுநகர் போய்
ஹஸனுரைக் கொலைசெய்து வாருமென்ருன். (60)

அதைக்கேட்ட மூப்பியா ளழகியாளைக் கூட்டி
அன்பாக மதீனமா நகரம்வந்து
இதமாக ஹஸன்றலி தம்மைக்கண்டு வாழ்த்தி
இயம்பிடும் †ஹிக்மத்தைக் கேட்பீர்களே. (61)

* மூப்பியே என்பது, கிழவியே.
† ஹிக்மத் தென்பது, தந்திரம்.

அல்லாவுக் குவப்பான அஹ்மதர் பேரரே
அழகான தீனுட மன்னவரே
நல்லார் அலியுல்லாப் புத்தி ரரேஎன்று
நலமாகப் போற்றிப் புகழ்ந் துரைப்பாள். (62)

நானொரு நல்பெண்ணை யழைத்துவந்தே னும்பால்
நலத்திற் குலத்திற் குணமணத்தில்
மானம் மரியாதை இல்மு அமல்களில்
*மதிபோ லழகில் நிறைந்தவளே. (63)

இந்தப் பெண்ணைக்கொள்ள எத்தனை யோராஜர்
ஏற்றப் பணமுள்ள சீமான்பலர்
அந்தமாய் கேட்டாலு மழகியா ளொப்பாமல்
அன்பாக தங்கள்மேலா சைக்கொண்டே. (64)

மணமுடிப் பதானல் மன்னர்நபீ பேரர்
மதீனு அரசரை மணமுடிப்பேன்
இணக்க மாயவர்பணி இன்புடன் நான்செய்து
ஏற்ற மவர்பீபி யாவேனல்லால். (65)

அவரன்றி வேறெந்த அரசரும் சீமானும்
அடியா ளுக்குவேண்டா மென்று சொல்லி
தவறுமல் தங்கள்மேல் எக்கமுற் றிருந்ததால்
தங்கள் சமுகத்திற் கூட்டிவந்தேன். (66)

இந்தப் பெண்ணைத் தாங்கள் இன்பாய் நிகாஹ்செய்து
இவள் தாங்கள் பாரியா ளாகிடவே
அந்த முடன்வேண்டிக் கொண்டே னென்றுமூப்பி
ஆவ லுடன்கெஞ்சி கேட்கையிலே. (67)

அப்போது ஹஸன்றலீ ஆலோசனை செய்து
அந்தப் பெண்ணைமணம் புரிந்துக் கொண்டு
ஒப்ப முடன்மூப்பி யாளையும் தம்வீட்டில்
உகப்புட னிருந்திடச் செய்தார்களே. (68)

* மதிபோல் என்பது, சந்திரனைப்போல்.

பொல்லா னிபுலீசின்மக் கரைக் காணவே
பெரிதாகும் கிழவிகள் *மக்கரென்று
வல்லோன் புறுகானில் உரைத்தாப் போல்கிழவியின்
வகைமோ சத்தைச்சொல்லக் கேட்பீர்களே. (69)

அப்பெண்ணை மூப்பியா ளருகிருத்திச் சொல்வாள்
ஹஸன்றலி மனம்போல நீ நடந்தால்
எப்போதும் முடியாது நாம்வந்தக் காரியம்
இடர்செய்ய அஞ்சொண்ணு தென்றும் பின்னே. (70)

மன்னர் ஹஸனுர் மனம்போ லிணங்கிடா
மாற்றமா நீபெண்ணே நடந்துக் கொண்டால்
அன்பாக நாம்வந்த காரியம் முடிவாகி
ஆனந்த மாய்ப்போவோ மென்றுரைத்தாள். (71)

கள்ளியின் வார்த்தையா லப்பெண்ணும் ஹஸனுரை
கண்ணுற் கருதியும் பார்க்க மாட்டாள்
வள்ளல் ஹஸனுரும் வாய்பேச நாடினுல்
வண்மை முகத்தைத் திருப்பிக் கொள்வாள். (72)

கண்டால் ஹஸனுரைக் கருதமாட்டா ளவர்
காணுத நேரத்திற் களித்திடுவாள்
சண்டி யவள்நசல் கொண்டாப்போ லெப்பொதும்
† சவம்போல நீட்டிப் படுத்திருப்பாள். (73)

இப்பட்டி யப்பெண்ணின் இடையூ றதாலெங்கள்
இரசூல் நபிபேரர் வருத்தமுற்று
செப்பி னர்மூப்பியை அழைத்துமே நீதந்த
சீர்கெட்ட சதிமோச மென்ன சொல்வேன். (74)

* மக்கர் என்பது, குபாடம்.

† சவம்போல என்பது, பிணம்போல.

மூப்பியே நீதந்த பெண்ணவள் எப்போதும்
முகம்வாடி நீட்டிக் கிடப்ப தல்லால்
கூப்பிட்டாலும் பேசாக் கோதையின் கொடுமையால்
குறை எனக்குமிக வென்றூர்களே. (75)

அப்போது மூப்பியாள் அரசரே எனப்போற்றி
ஆயாசப் படவேண்டா மப்பெண்ணுக்கு
ஒப்ப முடன்புத்தி பலசொல்லி யும்முடன்
உகந் திருக்கச் செய்வே னென்றுரைத்தாள். (76)

வேட்டைக ளாடிட வேந்தர் ஹஸனும்
வரிசைத் தோழர்களு மாகக்கூடி
காட்டைக் கலக்கியே வேட்டைக ளாடியே
கனதாக மாய்வீடு வந்தார்களே. (77)

தாகமாய் ஹஸன்றலி வீடுவந்து தாங்கள்
தவனத் துக்குத்தண்ணீர் கேட்கையிலே
வேகமாய் கிழவியாள் வீட்டில் நுழைந்ததும்
விஷத்தைக் கலந்துமே தண்ணீரிலே. (78)

அந்தப் பெண்பாலிட மக்கிழவி சென்று
ஹஸன்றலி தம்முட னதபுடநீ
பந்த முடன்பேசி யெந்த விதத்திலும்
பாஷாண மவருக்குக் குடிப்பாட்டியே. (79)

வந்தநம் அலுவலை வகையாகச் செய்திடில்
வரிசைப் பேர்கிடைக்கும் யஸீதிடத்தில்
அந்தமாய்ப் * பரிசுங் கிடைக்கு மென்றுமூப்பி
அதி தந்திரம் சொல்லி வெளியில் வந்தே. (80)

மன்னர் ஹஸனர்பால் மூப்பிவந்து சொல்வாள்
மணமான குமருக்கு புத்திபல
இன்பாக நான்சொன்னேன் இனிதங்கள் பணிசெய்ய
இன்புற் றிருப்பதால் கேட்பீர்களே. (81)

*பரிசு என்பது, வெகுமதி.

இப்போது தங்கள்போ யப்பெண் குணத்தையும்
இன்பாகத் தமக்குச்செய் பணிவிடையும்
ஒப்ப முடன்கண்டு சந்தோஷப் படுமென்று
உபசாரம் மிகப்பேசி கிழவி சென்றாள். (82)

பின்புஹஸன்றலி யப்பெண்ணி டம்போக
பிசகா தெழும்பியே அந்தப் பெண்ணும்
இன்பமா யவள்நிற்க இதைக்கண்டு ஹஸனாரும்
இயல்பாக சந்தோஷ மானார்களே. (83)

புவிமீதில் மிஸ்க்கீனும் புதையல்கண் டெடுத்தாப்போல்
பூரித்து நபிபேரர் பிரியங்கொண்டு
தவனத் துக்குத் தண்ணீர் தாருமென்று கேட்க
தவறு தவள்மோசங் கேட்பீர்களே. (84)

சதிமோசம் செய்யவே சண்டாளி யவளுமே
* ஜஹ்ரைக் கலந்திட்ட தண்ணீரதை
அதிசீக்கி ரங்கொண்டு ஹஸன்றலி திருமுன்னே
அடிபணிந் தருள்வதைக் கேட்பீர்களே. (85)

இதுவரை யான்செய்த குற்றத்தைத் தாங்களும்
இறையோன் றனக்காகப் பொறுத்திடுங்காள்
மதீனு நகராளும் மன்னவரே கேளும்
மணவாள ரேஎன்றன் மதியேஎன்றாள். (86)

பாதகி இவ்விதம் பக்ஷமாய்ப் பகர்ந்திட
படைத்தோ னமறப்படி ஹஸன் றலியும்
பேதக மெண்ணாமல் அவள்தந்தத் தண்ணீரைப்
பிரியமாய் வாங்கியே குடித்தார்களே. (87)

குடித்தப் பின்ஹஸன்றலி யல்லாஹு அவர்களின்
குணமாறி கலக்கமுற் றிருக்கையிலே
சடுக் கென்றுகிழவியாள் சதிகாரி யைக்கூட்டி
சருகா மறைந்தாள் மதீனு விட்டே. (88)

---

* ஜஹ்ரை என்பது, விஷத்தை.

இறசூல்நபீ ஈரற் கொழுந்தான பாதிமா
*இருதயக் கனியான ஹஸனுர் வள்ளல்
இறையோ னமற்படி † ஷஹீதாகி விட்டார்கள்
இதுபெருங் கைசேத மறிவீர்களே. (89)

விஷத்தைக் குடிப்பாட்டி வேந்தர் ஹஸனுரை
வீணன் கொல்ல ஷஹீ தாகிவிட
பிசகாது ஹுசைனுரும் தமையனுர் ஏக்கத்தைப்
பெற்று வாழும் நாளில் கேட்பீர்களே. (90)

(மஆவியாறலி வபாத்தும், யஜீத் ஹாகிமாய்
செய்த அழிச் சாட்டியமும்.)

அல்லாவி னமற்படி ‡மஆவியா மவுத்தாக
அப்பவே அவர்மகன் பாவி§யஜீத்
நல்ல கிலாபத்தின் பட்டத்தி லுட்கார்ந்து
நாடும் கேட்டைக் கேளும் ஆகில்களே. (91)

ஹுசைனே ஒளிக்காத வரையிலே ஆபத்து
உண்டு நமக்கென்று பலதந்திரம்
இசைந்து பார்த்தும் செய்தும் முடியாத சபபினுல்
எக்கமுற் றிருக்கையில் கேட்பீர்களே. (92)

றூமி என்னுமொரு நசுறுணி பாதகன்
ரொம்ப மருங்கு மரியாதையாய்
ஷாமின் அதிபதி அரசரே யஸீதே
சாற்றவே கேளென்றுன் சருகாமலே. (93)

---

* இருதயக் கனியான என்பது, கல்புக்கனியான.

† ஹஸன்றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 50-ம் ஆண்டில் 47-ம் வயதில் ஷஹீதானுர்கள்.

‡மஆவியா றலியவர்கள் கிலாபத்து 20 வருடம் செய்து ஹிஜ்ரீ 60-வது ஆண்டில் 77-ம் வயதில் வபாத்தானுர்கள்.

§ யஜீத் வஸீர்களைக் கொண்டுதான் பட்டத்தி லுட்கார்ந்தது ஹுஸைன்றலி யவர்களுக்குப் பொருத்தமில்லை.

மதிஞ ஹுசைன்பேரில் படைஎடுத் தால்நீயும்
மக்கம் மதிஞவின் நாடுஎல்லாம்
அதித்திர ளாகவே கூடிப் போராடுவார்
அவரை வெல்ல உன்ஞலாகா தென்றும் (94)

ஹுசைனை ஒளித்திட ஒருதந்தி ரம்செய்தால்
உம்செங்கோல் நிலையாகும் யாதெனிலோ
குசலம் பேசுகின்ற * குப்யாக்கள் சிலபேரைக்
கூபாவுக் கனுப்பென்றான் சுறுக்காகவே. (95)

அங்கே யவர்கள்போய் அலிமகன் ஹுசைனரை
அன்பாக வர்ணித்து உன்னை எசி
பங்கமாய் பேசினல் கூபிகள் யாவரும்
பக்ஷம் உசைன்பேரில் வைப்பார்களே. (96)

(குப்யாக்கள் கூபாவுக்குப் போனது)

பட்சம்வைத் தவர்களும் ஹுசைனை தருவிப்பார்
பாயமாய் ஹுசைனை யொழித்திடுவாய்
தட்சணம் குப்யாவை கூபாவுக் கனுப்பென்க
தவருத னுப்பினன் குப்யாக்களே. (97)

வந்த குப்யாக்கள் கூபிகளைக்கூட்டி
வர்ணித்தார் ஹுஸைன்றவி யல்லாஹுவை
பந்தப் பலீஹத்தாய் யஸீதைஏசிட
பட்சம் ஹுசைன்பேரில் வைத்தார்களே. (98)

அன்புப் பிரியமாய் ஹுசைனரைத் தருவிக்க
ஆலோ சித்துஹுசைன் றவிதமக்கு
இன்பாக பைஅத்து தாங்கள் வந்தால் செய்வோம்
என்றே எழுதினர் கூபிகளே. (99)

அந்த சமயத்தில் யஸீதின் இம்சையால்
அழகார் ஹுசைன்றவி மக்கத்துக்கு
வந்து இருக்கையில் கூபிகள் கடிதங்கள்
வந்தது அனந்தமாய்க் கேட்பீர்களே. (100)

---

* குப்யாக்கள் என்பது; இரகசியம். அல்லது மர்மம் பேசுவோர்கள்.

அனந்தங் கடிதங்கள் கூபிகள் அனுப்பியும்
அதற்குப் பதில்வரா காரணத்தால்
மனம்நொந்து கூபிகள் சிலபுத்தி மான்களை
மக்கத்துக் கனுப்பினர் மருங்காகவே. (101)

புத்தி மான்கள்வந்தோர் புகழ்ந்து ஹூசைனரை
பூரிக்கும் கூபிகள்நாட்டம் சொல்ல
மெத்தக் கிருபையின் இரக்கமுள்ள ஹூசைன்
மெய்யென்று எண்ணினர் சேதிகளே. (102)

கூபா வுக்குப்போக ஆயுத்த மாகிட
குறைகூறி முஹாஜரீன் பெரியோர்சிலர்
கூபிகள் வார்த்தையை நம்பமுடியாது
கூடாது போவது என்றார்களே. (103)

உண்மை தெரிந்திட முன்னர் கூபாவுக்கு
ஒருவரை யனுப்பியே தெரிந்துக் கொண்டு
பின்புதாம் போவது நல்மாகு மென்றிதை
பிரிசம் மாகச் சொன்னர் பெரியோர்களே. (104)

(முஸ்லிம்றலி கூபாவுக்குப் போனது.)

இதுவும் சரிஎன்றே ஹூசைன்றலி யோசித்து
*ஏற்ற மச்சானன சச்சா மகன்
பதுமை குணமுள்ள முஸ்லிம் றலிதம்மை
பக்ஷமா யனுப்பினர் கூபாவுக்கு (105)

கூபிகள் யாவரு முஸ்லிமைக் கண்டதும்
கொண்டாட்ட மிகச்செய்து வரவழைத்து
சூபிகள் போலவே பேசிஹூசை னரை
சுறுக்காகத் தருவிக்கச் சொன்னர்களே. (106)

* மச்சானன சச்சா மகன் என்பது. சிறிய பிதா மகனும் மச்சானுமான என்றறிக.

அவர்களின் சொல்நம்பி முஸ்லிம் றலியவர்
ஹக்கள் நபிபேரர் ஹுசைனுருக்கு
தவறாது கடிதத்தைக் கண்டவுடன் கூபா
தாங்கள் வாருமென்று வரைந்தார்களே. (107)

(முஸ்லிம்றலி கடிதங்கண்டு ஹுஸைன்றலி
கூபாவுக்குப் பிரயாணமானது.)

முஸ்லிம் கையோப்பத்தை முஸ்தபா நபிபேரர்
முற்றும் பார்த்து தங்கள் மனமகிழ்ந்து
இஸ்லாமின் விர்த்திக்கு கூபாவுக்குப் போக
இன்புடன் பயணத்தை வைத்தார்களே. (108)

பலர்பல விதமாகத் தடுத்துமே கேளாமல்
பாலர்பெண்டுப் பிள்ளைக் குடும்பத்துடன்
நலமாக அன்பது தோழர்க ளுடன்கூடி
நபிபேரர் புறப்பட்டார் கூபாவுக்கே. (109)

(பக்தாது கவர்னர் கூபாவந்து செய்த கோரேங்கள்.)

இதற்கிடை யில்முஸ்லிம் கூபாவந்த சேதி
யஸீதுக்குத் தெரிந்ததும் யோசித்தவன்
சதிகாரன் அப்துல்லா பக்தாது கவர்னர்க்கு
சரசமா யெழுதுதல் கேட்பீர்களே. (110)

எந்தன் கடிதத்தைக் கண்ட வுடன்நீயும்
ஏதும் சுணங்காமல் கூபாவிற்போய்
வந்துள்ள முஸ்லிமைகூபாவின் தலைவரை
வாளால் வெட்டும்படி ஆர்டர்களே. (111)

செய்துபின் வருகின்ற ஹுசைனையு மவருடன்
சேர்ந்தோ ரையும்வெட்டிச் சிதைத்தீரானல்
அய்த முடன்இருக் பக்தாத் உன்சொந்தம்
ஆக்கினே னென்றெழுதி யனுப்பினனே. (112)

ஆர்டரைக் கண்டதும் பக்தாத் இராகின் மேல்
அப்துல்லா பின்ஸயாத் ஆசை கொண்டு
கூடவே படைகளைத் திரட்டிக் கொண்டுமவன்
கூபாவந்து சேர்ந்து ஆலோசித்து. (113)

தந்திர மாகவே கூபாத் தலைவர்க்கு
தஅவத்துச் சொல்லியே வாவழைத்து
சிந்தை மகிழ்வாக ஸய்யாது மகன்பாவி
சிதைக்கவே செய்திட்டான் தலைவர்களே. (114)

இன்னு முஸ்லிமைப் பிடித்து வரச்செய்து
இவரைக் கதல்செய்ய ஷஹீதாகினார்
பின்வரும் ஹுஸைன்றலி வரவை எதிர்பார்த்துப்
பிரியங் கொண்டிருந்தானே அப்போதிலே. (115)

(ஹுஸைன்றலி முசாபிரைக் கூபாசேதி
கேட்டதும் பதிலும்.)

ஹுஸைன்றலி யல்லாவு மவருட தோழரும்
ஒருமன்ஜில் கூபாவிற் கிடையிருக்க
விசையாக நடக்கு முசாபிர் ஒருவரை
விருப்பத் துடன் ஹுஸைன் கேட்டார்களே. (116)

எங் கிருந்துஎங்கே போகின்றீ ரென்கவே
யான்கூபி மதீனா நகர்போகிறேன்.
அங்க முடனதை ஹுஸைன்றலி கேட்டதும்
அன்பாய் முசாபிரைக் கேட்டார்களே. (117)

கூபா சேதிகேள்க ஸய்யாது கொடுமையும்
கொலையுண்ட தலைவர்கள் சேதியையும்
மாபாவி இன்னுமே முஸ்லிமைவெட்டிய
மொழிகேட்டு துக்கத்தா லழுதார்களே. (118)

துக்கத்தால் துன்பத்தால் துயரத்தால் யோசித்து
துரிதமாய் திரும்பியே மதீனம்போக
மிக்க இரவிலே வாகனம் யாவற்றை
மதீனப் புறந்திருப்பி விட்டார்களே. (119)

(கூபாஎல்லையில் ஹுஸைன்றலியும் குடும்பமும் சேர்ந்தது.)

மப்பு மந்தாரமு மிருட்டு இராவிலே
மதீனு பாதைவிட்டு வாகனங்கள்
ஒப்ப முடனது உடையோ னமற்படி
உதையங் கூபாஎல்லை சேர்ந்ததுவே. (120)

அந்தச்சேதிகேட்ட அப்துல்லா பின்ஸயாத்
ஐந்நூறு குதிரை சவாரிகளை
முந்தி யனுப்பியே முற்றுகை போட்டவன்
முன்னூர்டர் செய்ததைக் கேட்பீர்களே. (121)

அன்னந் தண்ணீரேதுங் கர்பலா தலத்துக்கு
அனுப்ப விடாமலே ஆர்டர்செய்ய
என்ன விதத்திலுந் தண்ணீர் கிடைக்காமல்
ஏக்கமாய் தவனமா யிருந்தார்களே. (122)

அன்னந் தண்ணீரில்லா ஐம்பதுதோழமார்
அன்பாய்ச் சண்டைசெய்து ஷஹீதாகிட
மன்னர் ஹுஸைனரு மன்னவன் பாதையில்
மகிழ்வாக போர்செய்யத் தொடர்ந்தார்களே. (123)

பசிக்கு உணவில்லாப் பட்டினி யாகவும்
பருகவே நீரில்லா தாகத்துடன்
நசிக்கு மொழிப்பேசி எதிர்வந்த பேர்களை
நாசம் செய்துவந்தார் ஜாலிம்களை. (124)

தொழுகைக்கு வக்தானல் தயமஞ்செய்துக் கொண்டு
துய்யோனைத் தொழுதுபின் துஷ்டர்களை
பழுதாக வாட்டையில் எதிரி தாக்கல்வாங்கி
பசியால் களைத்தவர் சோர்ந்தார்களே. (125)

அப்போது பாகர்என்போ னொத்தன்வந்து
ஐஹுசைனே இந்த ஆபத்துவன்
ஒப்பமா யஸிதுக்கு பைஅத்துச் செய்திடில்
ஒழியும் இம்சைஎன்ருன் தவருமலே. (126)

அந்தச்சொல் கேட்டதும் ஹக்கன் மஹ்பூப்போர்
ஆகாது பைஅத்துச் செய்திட நான்
அந்த முடன்மூன்று வார்த்தைபாட் செய்கிறேன்
ஐபாகர் கேளென்ருர் சலிப்பாகவே. (127)

ஒன்று வதுநான் மதீனு நகர்போனல்
உண்மையா யஸிதுக்கு இடற்செய்திடேன்
பின்ன ரென்வீட்டுக்குள் புகுந்தபின் வெளியிலே
புறப்படே னென்றுபின் சொன்னர்களே. (128)

மூன்று வதுமுன்சொல் இரண்டுமாகா விட்டால்
முறைபோல என்னை யஸீதிடத்தில்
தோன்றும் படிவிடப் பேசிக்கொள்வே னென்று
துக்கித்துச் சொன்னரே தீனோர்களே. (129)

பாகரேன் போன்இதை ஸைய்யா திடம்சொல்ல
பாவி யவன்மூன்று மாகாதென்று
ஆகங்கள் பேசியே கதல்செய்ய ஷுமருக்கு
ஆர்ட ரதைச் செய்தான் கடிசாகவே. (130)

ஷுமரென்னும் பாதகன் ஹுஸைனு ரிடம்வந்து
சுணையில்லா மழுங்கிய வாளைக்கொண்டு
* கமருபோ விலங்கிடும் முகத்தை பூமிபுறம்
கஷ்டமாய்த் திருப்பினன் கண்மணியே. (131)

---

* கமருபோல் என்பது, சந்திரனைப்போல்.

பின் கழுத்துப்புறம் மயங்கிய வாள்வைத்து
பரிதாபக் கஷ்டமாய்த் துணித்துவிட
மன்னர் *ஹுசைனரும் மவுலாவி னுட்டம்போல்
மணமாம் ஷஹீதானுர் தீனேர்களே. (132)

நபிசுரற் கொழுந்தான மகளாரு பாத்திமா
நாயகி பெற்றிடும் ஹுசைனுர் வள்ளல்
புவிமீதில் தீனுக்குக் கர்பலா மைதானில்
பொல்லான் ஷுமர்வாளால் கேட்பீர்களே. (133)

அறுபட்டு ஷஹிதானுர் அல்லாவி னமற்படி
ஆஷுரு பத்தாம்நாள் ஜுமஆவிலே
குறுபானி யாகிட்டார் கோமானின் பாதையில்
குத்துகள் பலதுண்டும் ஜடலத்திலே. (134)

எதிரிகள் தாக்கலால் முகத்தில் மட்டுங்காயம்
எழுபத்தி ரண்டானுல் உடல்மொத்தமும்
சதிகாய மெத்தனை யிருக்குமென் றேசித்து
சற்றே நோட்டமிடும் ஆகில்களே. (135)

உம்மு குல்தும்பீபி கனவிலே நபியுல்லா
உயர்வான விசனமா யலங்கோலமாய்
தம்முன் வரக்கேட்க கர்பலாமகன் காயங்
தாம்கண்ட துக்கத்தா லென்றுர்களே. (136)

தீனுன பேர்களே தீனுக் கதிபதி
திட்டம் ஷபாஅத் துக்குடைய நபீ
மனுமிலு மகனுரின் துக்கத்தை முறைசொன்ன
மஹப்பத்தைப் பாருங்காள் ஆகில்களே. (137)

---

* ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு ஹிஜ்ரீ 61-ல் தங்களுக்கு 58-ம் வயதில் ஷஹீதானுர்கள் :—

இந்தச் சண்டையில் அவர்களுடன் அவர்களின் அவ்லாதுகள் உடற்பிறப்புகள் குடும்பத்தார்கள்கூடி சுமார் 13 பேர்கள் ஷஹீது.

## கர்பலாவில் யஸீது கூட்டத்தின் கொண்டாட்டம்.

ஷுஹதாக்க ளறுபட்டு ஷஹிதாகி கிடக்கையில்
ஷுமர்பாத கனுடன் மற்றும் சிலர்
முஹம்மதர் படைகளை முறியச் செய்தப் புலி
முன்வந்தோம் நாமென்றார் ஜாஹில்களே. (1)

இன்னும் யஸீத்கூட்டம் ஷர்பத்து கிச்சிடி
இன்பமாய் சமைத்ததை இனத்தாருடன்
ஒன்றாகச் சேர்ந்தவா ளானந்த மாயுண்டு
ஓசாரம் பேசுவார் ஜாஹில்களே. (2)

இந்தப் படையோர்க்கு நானேபுலி என்றும்
இரத்தத்தை ஷர்பத்தை போலுறிந்தேன்
வந்த எதிரியை வாட்டினேன் தீட்டினேன்
வாளாலே என்றாரே ஜாஹில்களே. (3)

குத்பா - இராகம்.

இன்னுமன்று ஜாலிம்யஸீத் கூட்டத்திலொரு பெண்ணவள்
நன்றுஷுஹாதா வயிறைக்கிழித்துக் குடலைமாலை சூட்டி
[யும். (4)

வீதிவீதி யாகத்திரிந்து அவள்கொண்டாடிய வாறுபோல்
தீநிக்கால பேஹயாக்கள் கழுத்திலேநா டாவையும். (5)

போட்டுஆட்டம் பாட்டக்களரி பூரிப்புடனே போயவாள்
தேட்டப்பெருநா ளுடையநாளைப் போலவே கொண்டா
[டியும். (6)

இன்னும்யஸீதின் கூட்டத்தார்இ மாம்களுடைய தலையதை
அன்பா யறுத்து பாலாமுனையில் கோத்துத்திரிந்தாப்
[போலவும். (7)

இக்காலத்தின் சண் டாளதுஷ்டர் பகரமாய்பா லாவிலே
எக்காளத்துடன் எலுமிச்சம்பழங் கோக்கிருர் அன்பாக
[வே. (8)

இவைகளெல்லாம் பாஸிக் பாஜிர்முஷ்ரி கீன்களின்
அவச்செயல்க ளென்று நினேர் விலகிஇருப்பா றறிந்
திடும். (9)

## அஹ்ல பைத்துகளின் பரிதாபம்.

கும்மி - இராகம்.

கண்ணின் மணியான ஹுசைனும் தோழரும்
கர்பலா மைதானில் ஷஹீதாகிட
அன்றை தினத்திலே அஹ்லபைத்து கள்தா
மழுத அலங்கோலங் கேட்பீர்களே. (1)

தன்னை மறந்தவாள் தரையில் மோதிவிழ
தகுமாக யவர்களைப் பரிகாசிக்க
வின்னப் பலவேஷ மிட்டு யஸீத்கூட்டம்
விளையாடி னாப்போ தெம்பாகவே. (2)

குத்பா - இராகம்.

நபியுல்லாவின் கல்புக்குவந்த பேரர்ஹுஸை னவர்ஷஹீத்
றணகளத்தி லானபின்னர் குடும்பத்தார்யா பேரையும். (3)

ஒட்டகையி லேற்றிக்கொண்டு திமிஷகாளு மெஸிதிடம்
அழைத்து துட்டர் செல்லகோஷாப் பெண்டுகள்பரி தாப
[மும். (4)

பலவிதகோ லத்தில்தலையில் துணியில்லாம லழுதவாள்
அலங்கோலமாய் யாஹு ஸைனு வாஹு ஸைனு என்க
வும். (5)

அன்றுபீபி மார்கள் தன்னை மறந்துஅழுத கோலத்தை
நின்றுஅவர்முன் இகழ்ச்சிசெய்து காட்டயஸீத் கூட்ட
மும். (6)

யானைக்குதிரை யொட்டகைமே லேறியேபரி காசமாய்
யாஹு ஸைனு பாஹு ஸைனு என்றவர்கள் கோலமும். (7)

காட்டி சந்தோ ஷமடைந்த வாறுபோலிக் காலத்தில்
தாட்டியாய்வழி கெட்டபோ மான்கள்செயலைக் கேட்
[டிடும் (8)

கும்மி - இராகம்.

அந்த யஸீத்கூட்டம் அஹ்லபைத்தோர்கள்முன்
ஆட்டங்க ளாடியே பரிகாசித்தார்
இந்தக் காலயஸீத் இஸ்லாம் பேரைவைத்து
எக்காளம் போடுறார் ஜுஹ்லாக்களே. (9)

துக்கக் களிரியி நாளதிலே கேளும்
துப்ப முஸ்லிங்கள் துயரங்கொண்டு
மிக்க குருஞேதி மெலிந்தோர்க் கன்ன மீந்து
மேலோன் பரஞ்சாட்டி தினோர்களே. (10)

இந்தப் பலன்களை எங்கள் ஹுஸைனன் கட்கும்
இன்னும் ஷுஹதாக்கள் யாபேருக்கும்
அந்த முடனீந்தே னென்றெண்ணிக் கொள்வது
ஆகும் ஈமானுள்ளோர் செயல்களிதே. (11)

அல்லாவின் நபிபேரர்க் கணுகிய துயரத்தை
ஆராய்ந்துப் பாராத வுத்தர்களே
நல்லா உற்றுப்பாரும் நல்தீனோர் நீங்களா
நாயகர் உம்மத்தா ஜுஹலாக்களே. (12)

## முஹற்ரமைக் கொண்டாடும் மூடர்களுக்கு தன்பீஃ.

இராகம் - கும்மி.

இன்சான் பேரைமாற்றி ஹைவான்வேஷ மிட்டு
இசுலாம் பேரைவைத்த ஈனர் சிலர்
இன்சான் ரூபம் நீக்கி ஹைவான் ரூபங்கொண்டு
எடுத்தாடும் கோலத்தார்க் கேட்பீர்களே. (1)

قَالَ اللّٰهُ تَعَالٰى. لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ فِيْ أَحْسَنِ تَقْوِيْمٍ ○

(தலீல்) லகத் கலக்னல் இன்ஸான பீ அஹ்ஸனி தக்வீம்.

அல்லா அருளினன் ஆதமின் மக்களை
அழகான ரூபத்தில் அமைத்தே னென்று
நல்லா இதை நோட்டஞ் செய்யாத மூடர்கள்
நல் ரூபம் மாற்றுறார் ஜாஹில்களே. (2)

எல்லாப் படைப்புக்கு மேன்மையா இன்சானை
இறையோன் படைத்ததாய் சொன்னதுவை
பொல்லாத லோபிகள் அறியாமல் முஹற்ரமில்
போக்கினர் மேன்மையை ஜாஹில்களே. (3)

وَقَالَ اللّٰهُ تَعَالٰى. وَلَقَدْ كَرَّمْنَا بَنِيْ آدَمَ ○

(தலீல்) வலகத் கற்ரம்ன பனீ ஆதம.

ஆதமின் மக்கட்கு சங்கைத் தந்தோமென்று
அல்லா பெருமையாய் சொன்னதுவை
நீத முணராத நிர்மூடர் கள்சிலர்
நேர் சங்கை போக்கியே கெட்டார்களே. (4)

وَقَالَ تَعَالَى. كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ ○

(தலீல்) குன்தும் கைறஉம்மதின் உக்ரிஜத் லின்னாஸி.

உம்மத்து களில் நீங்கள் கைருன உம்மத்தென்
றுடையோன் புறுகானி லுரைத் திருக்க
உம்மத்தின் மருங்கதை யுணராமல் வழிகேட்டில்
உழன்று கிடக்கின்றார் வெகுபேர்களே. (5)

அருளினர் நபியுல்லா உருவத்தை மாற்றிடும்
அடியன்மேல் அல்லாவின் லகுனத்தென்று
சருகா திதைநோட்டஞ் செய்யாத சண்டாளர்
செய்கின்ற கோலத்தைக் கேட்பீர்களே. (6)

குப்பி நானக்வேஷம் கூத்தாடி பாவேஷம்
கொட்டுங் குழல்கன்சட் வாத்தியங்கள்
ஒப்பமாய் வைத்தடித் தாடிடும் பாவிகள்
உம்மத்தி னர்தானு சொல்வீர்களே. (7)

குருவிக் காரிவேஷம் குரவன் *கோனார் வேஷம்
கொண்டாடி கூத்தாடுங் குறும்பர்களே
மறுநாளை முஸ்லிம்போல் சபையில்வந்து பேச
மானக்கே டில்லையோ சொல்வீர்களே. (8)

திருட்டுப் பயலென்று தீரவேஷ மிட்டு
தெருதெரு வாய்நேற்றை காரிதுப்பி
மறுநாளை யேமுஸ்லிம் சபை வந்து பேசிட
மானமே இல்லையோ ஜாஹில்களே. (9)

மாத்தின் தழைகளை மனம்போல் வாரிகட்டி
மாபாவி கரடியாய் நேற்றாடியே
உரமாக வேஇன்றை மனுவாக புறப்பட
உமக் கில்லையோ நாணஞ் சொல்வீர்களே. (10)

---

* கோனார் என்பது, இடையர்.

தோட்டி வேஷம்போட்டு துடப்பம் முறத்துடன்
துடுக்காக நேற்றுடி மறுநாளையில்
நாடி யூருக்குள்ளே நல்முஸ்லிம் போல்வா
நாணமே இல்லையோ ஜாஹில்களே. (11)

பெட்டை வேஷம்போட்டு பேஹயா பலர்முன்னே
பெண்ணென்று பேர்பெற்று மறுநாளையே
நெட்டையாய் ஆணென்று வந்து உலாவிடும்
நிர்மூடர் யோசித்துப் பார்ப்பீர்களே. (12)

பாப்பாரைப் போலவே பூனூல் கனமாட்டி
பஞ்சாங்கம் குறிசொல்லி மறுநாளையே
சார்பாக நபியும்மத்தென்று உலாவிட
சார்ந்ததோ உம்மனம் ஜுஹலாக்களே. (13)

உடலிலே பலவர்ண மெழுதியே புலிஎன்று
உன்மனம் போலாடி மறுநாளையே
ஜடலம் இன்சானக சபையில் வந்துப்பேச
சார்ந்ததா உம்மனங் கூசாமலே. (14)

மெய்யான புலிவந்தால் நைய்யாண்டிச் செய்தாடும்
மிருகம் மனுப்புலி நீமிறண்டு
அய்த முடன்ஓடும் உன்ஓட்டம் பிடிக்கயார்
ஆகுவார் உலகத்தில் சொல்வீர்களே. (15)

*வல்லியம் போல்வேஷம் வால்வைத்து நேற்றுடி
வந்தவன் வாலின்றை வெட்டியதார்
சல்லிக் குதவாத மிருகமாய் சபைக்கின்று
சரிமனு வாய்வந்த ஹைவான்களே. (16)

ஆடி வரும்புலி வேஷக் காரனுக்கு
அரும்பாவி லுத்தர்கள் ஆனந்தமாய்
தேடி யாட்டைவிட திங்கன் புலிகௌவ
தெம்பாக பார்க்கிறார் ஜுஹ்லாக்களே. (17)

* வல்லிய மென்பது, புலி.

ஆட்டைப் புலிகௌவி வீசிட மற்றொருத்தன்
அறுத்திட புலிறத்த முறிந்திடவும்
தேட்ட முடன்பார்த்துத் தெம்மாங்குச் செய்பவர்
தீனோ ரிவர்களா சொல்வீர்களே. (18)

அறுபட்ட துயாரு றத்த முறிந்த தார்
அறுத்தது யாரென்று ஆராய்ந்து நாம்
கருபலா மைதானில் கண்மணி நபிபேரர்
கைசேதங் கவனிப்போம் மூமின்களே. (19)

எமக்கு ஷபாஅத்து செய்திடும் நாயகர்
ஈரற் கொழுந்தான இப்னவர்மேல்
ஷுமர்க் கோலஞ் செய்வோரைக் கண்டுரோஷ மில்லா
சுணைகெட் டிருப்பதேன் ஜாஹில்களே. (20)

உங்கள் பாட்டன் பூட்டன் அன்னைப் பிதாவிலே
ஊனம் மிருந்ததை யொருவன் சுட்டி
பங்கப் பலீஹத்தா யாடியே காட்டினால்
பார்ப்பீரா சகிப்பீரா ஜாஹில்களே. (21)

قَالَ النَّبِيُّ صلعم. اَلْغَيْرَةُ مِنَ الْاِيْمَانِ

(ஹதீஸ்) அல்கீரது மினல் ஈமானி.

அல்கீரது மினல்ஈமானி எனும்ஹதீஸ்
அஹ்மது நபிதங்கள் திருவாக்கினால்
நல்ரோஷம் ஈமானில் உள்ளதா குமென்று
நாயகர் நபியுல்லா சொன்னார்களே. (22)

قَالَ النَّبِيُّ صلعم. مَنْ لَا غَيْرَةَ لَهُ لَا اِيْمَانَ لَهُ

(ஹதீஸ்) மன்லா கீரதலஹூ லா ஈமான லஹூ.

மன்லா கிரத லஹுலா ஈமான
லஹு என்னும் ஹதீஸில் எந்தொருவன்
பண்பின் ரோஷமில்லான் ஈமானில்லா னென்று
பகர்ந்தாரே நபியுல்லா தீனோர்களே. (23)

கிரத்துச் செய்வது மூன்று விதமதில்
கையாலும் நாவாலும் மனதாலென்று
தீரப் புறுகானின் வேதத்தை நமக்கீந்த
தீனின் னபிசொன்னார் அறிவீர்களே. (24)

قَالَ النَّبِيُّ صلعم. اَلْمَالُ الصَّالِحُ لِلرَّجُلِ الصَّالِحِ ○

(ஹதீஸ்) அல்மாலுஸ் ஸாலிஹு லிற்ரஜ்லிஸ் ஸாலிஹி.

அல்மாலுஸ் ஸாலிஹு என்னும் ஹதீசிலே
அன்பான சாலிஹா னமுதல்கள்
நல்சாலி ஹாகிய மனிதனுக் காமென்று
நவின்றாரே நபியுல்லா தீனோர்களே. (25)

قَالَ النَّبِيُّ صلعم. إِعَانَةُ الْمَعْصِيَةِ مَعْصِيَةٌ ○

(ஹதீஸ்) இஆனதுல் மஅஸிதி மஅஸியதுன்.

அல் இஆனதுல் மஅஸியதி என்னும்
ஹதீசிலே யாரேனும் பாவத்துக்கு
நல் லுதவிசெய்யல் பாவமாகு மென்று
நாயகர் நபிசொன்னார் தீனோர்களே. (26)

இந்த விதமாக ஆயத் ஹதீதது
இஸ்லா மானவர்க்கு வந்திருக்க
விந்தை யறியாமல் புலிக்காக ஆடுவோர்
வெட்க ரோஷமில்லாப் பாவிகளே. (27)

வெட்க ரோஷமற்ற வீணன் அவனுக்கு
வேதாம்பர் சொற்படி ஈ மானில்லே
துட்டப் புலிக்கவன் பணங்காசுக் கொடுப்பது
தொல்லே ஹறுமடா ஜாஹில்களே. (28)

பலவேஷ மிட்டாடி வருகின்ற பேர்கட்கு
* பரிசியும் பணமுள்ள ஹுத்தர்களே
செலவிட்டப் பணத்துக்கு செருப்படி யாருக்கு
செவ்வையாய் யோசித்துப் பார்ப்பீர்களே. (29)

வேஷக் காரனுக்கு விரும்பிந் தருங்காசு
விருப்ப ஹலாலாக தேடினதா
தோஷ ஹறுத்திலே சம்பாதித்த காசா
திடர்ந் தோசித்துப்பாரும் துஷ்டர்களே. (30)

உலகத்தில் செலவிட்ட ஒவ்வொரு காசுக்கும்
உன்னே நிறுத்தாட்டி கேட்கு மந்நாள்
புலிவேஷக் காரனுக் கீந்தகாசுக் கென்ன
பொல்லானே பதில்சொல்வாய் அல்லாவுக்கே. (31)

ஆட்டக் காரனுக்கு பணம்நீ தராவிட்டால்
அடுத்த வருஷத்தில் ஆடுவானு
ஈட்டா விட்டா லவன் உன்கழுத்தி லேறி
இறங்கிடே னென்பானே சொல்வீர்களே. (32)

கும்பலாய் யோக்கியர் சேராவிட்டா லந்தக்
கூத்தாடி கொண்டாட்டம் செய்குவானு
கும்ப வில்லாவிட்டால் ஓரிபோ லொண்டியாய்
கூத்தாடி வருவானே சொல்வீர்களே. (33)

---

* பரிசீயு மென்பது, இனும்கொடுக்கு மென்றறிக.

(சர்க்கிருவின் சவுக்கின் கோலம்)

இத்தாதி வேஷக்கார் எல்லாங் கூடிசவுக்கில்
இவர்கள் தலைவனும் சர்க்கிருமுன்
எத்தாக வந்தாட செய்சர்கிரு பேரில்
இறையோன் லகுனத்து அறிவீர்களே. (34)

அயலானைப் பெண்பார்க்கல் அயல்பெண்ணை ஆண்பார்க்கல்
ஆகா ஹறுமென்று மார்க்கஞ் சொல்ல
நயமாக உணராத நாணமற்ற ஆண்பெண்
நடப்பு களைச்சொல்ல கேட்பீர்களே. (35)

பஞ்ஜாவும் பலவேஷம் பார்க்கவே பெண்டுகள்
பண்பாக மேத்தைமேல் ஏறி நின்று
அஞ்சாம லயலாண்கள் ஆடிடும் ஆட்டத்தை
ஆவலாய் பார்க்கிறார் தோஷிகளே. (36)

ஆட்டக் காரன்ஒட்டுக் கோவணங் கட்டியே
ஆடி வரும்பல வேடிக்கையை
தேட்ட முடன்பார்க்க கோஷாப் பெண்கள்சிலர்
தெம்பாக போகிறார் அறிவீர்களே. (37)

அம்ப லத்தில்பல வம்பர்களைப் பெண்கள்
ஆகா ஹறும்பார்வை பார்த்திடவே
தெம்பாக அனுப்புவோர் தையூசு அல்லவோ
தீனோர்கள் யோசித்துப் பார்ப்பீர்களே. (38)

பலவேஷம் போடலும் பஞ்ஜா எடுப்பதும்
பார்க்கல் ஹறுமென்றே பகர்ந்துசிலர்
நலமற்றோர் செய்கின்ற வேடிக்கை பார்க்கவே
நாணமற்றுப் போறார் வெகுபேர்களே. (39)

தொழுகாளி கள்சிலர் வேஷங் கூடாதென்பார்
துட்டச் செயல்பஞ்ஜா எடுப்ப தென்பார்
பழுதான புலிவேஷம் பஞ்ஜாவே டிக்கைக்கு
பலஊர்கள் போகிறார் வெகுபேர்களே. (40)

(பஞ்ஜா உயிர்பெற்று எழும்பி உட்காரல்)

வருஷம் முழுவதும் பாடைபோல் கட்டியே
வரிசையாய் பரணைமேல் போட்டுவைத்த
உருவப் பஞ்ஜாமேலே எலிபூனை பலஜெந்து
ஓராண்டாய்ப் பெய்திடும் மூத்திரத்தே. (41)

முஹராம் பிறந்ததும் மூடர்கள் எடுத்ததை
முற்றுந் துருபோக்க உப்புப் புளி
உகப்பாக செங்கல்தூள் உறமாகவே தேய்த்து
ஒழுங்காக எடுத்ததை நிறுத்தாட்டியே (42)

பலகாலம் பரணைமேல் பாடைபோல் கிடந்தது
பாதகன் நிறுத்தாட்ட பஞ்ஜாவாச்சு
நலமாக அதுதானே எழுந்துஉட் கார்ந்திடில்
நாயன் அதுவென்றே சொல்வீர்களோ. (43)

அந்தப் பஞ்ஜாவது செம்பு பித்தளை வெள்ளி
அதுகம் மாளன்செய்த உருவம்தானே
நிந்தனை படுக்கையில் நிறுத்தாட்ட மரியாதை
நீங்களே கொடுத்திரோ ஜாஹில்களே. (44)

பஞ்ஜாப் படுக்கையில் சேத்துக் கிடந்ததோ
பண்பாக உட்கார உயிர்பெற்றதோ
அஞ்சாம லும்கையி லெடுத்துநிற் பாட்டிட
அதுயாதுஞ் சொல்லவே கேட்டீர்களோ. (45)

(முஜாவர் காணிக்கையைப் பெற்று நேர்ச்சை
யாளர்க்கு தரும் வேகுமதி.

பந்தல் அடியிலே பஞ்ஜாநிறுத் தாட்டி
பழிகாரன் தடிப்பய லங்கொருவன்
அந்த முள்ளமுஜா வர்நானே என்பவன்
அழிச்சாட் டியஞ்சொல்லக் கேட்பீர்களே. (46)

நேற்றைக் கடன்காரும் முந்தாநாள் கடன்காரும்
நேர்மை யாகதந்தப் பூஹாரத்தை
தீர்க்கப் பஞ்ஜாமேலே போட்டு முஜாவரும்
தேஉண்டிக்கிப் பைசாஎன வேண்டவே. (47)

காசைக் கொடுக்கவே ஆசை யுடன்வாங்கி
கலயத்தில் போட்டபின் ஷக்கருடன்
வாசம் வீசும்பத்தி எங்கே என்றுவாங்கி
வாசிப்பான் பாத்திஹா முணமுணென்றே. (48)

அதற்குப்பின் மயிலிர கால்கட்டும் துடப்பத்தை
அந்தப் பஞ்ஜா முகத்திற் றுடைத்து
சிதாமல் வந்தவன் முகத்தி லடித்துப் பின்
சீரணி சாம்பல்தந் தனுப்புவானே. (49)

பணத்தைச் செலவிட்டு பந்தலி விடிப்பட்டு
பக்கீர் பயல்கையில் துடப்பத்தடி
மணக்கவே வாங்கின நேர்ச்சைக் கடன்கார
மான மில்லானுக்கு என்ன சொல்வேன். (50)

அந்த தடியன் முஜாவர் பஞ்ஜாவுக்கு
அன்பொடு பாத்திஹா ஓதலாமா
பந்தமுடனதை எடுக்கையில் பிஸ்மில்லா
பகர்வது ஆகாது ஜாஹில்களே. (51)

பஞ்ஜா எடுக்கையில் வைக்கையில் பிஸ்மில்லா
பகர்வது குபிராகு மிந்தசொல்லே
அஞ்சாது நெஞ்சந் துணிந்ததைச் சொல்வோனே
அறிவாள ரைக்கேளும் ஜாஹில்களே. (52)

இந்தப் பலீஹத்தை ஏற்றக் காமிலான
இஸ்லாமி லுதித்தவன் ஒப்புவானு
நிந்தனே இச்செயல் வயிருவளர்க் கச்செய்து
நீச்சர் செயலென் றறிவீர்களே. (53)

இந்தப்பாழும் பஞ்ஜா வைத்தக் களரியில்
இஸ்லா மானபெண்கள் ஏராளமாய்
விந்தையாய் போய்ப்பார்த்து துடப்பத் தடிவாங்கல்
வெட்க நாணமில்லாப் பெண்டுகளே. (54)

(பஞ்ஜாவை எடுப்பதின் மகிமை)

பஞ்ஜாவின் பாடையை பத்தாம்நாள் தண்ணீரில்
பாதகர் சுமந்துபோய் அமுக்கிடவே
நெஞ்சார்ந்த பிர்அவ்னை நீலாற்றி லமுக்கல்போல்
நெடும்பாடை எடுகோலங் கேட்பீர்களே. (55)

கள்ளுச் சாருயமுங் கஞ்சாவு மபினையும்
கழுத்து மட்டும் நெட்டி புத்திமாறி
மெள்ள ஆடிப்பாடி பஞ்ஜாவை தூக்கியே
மிறள்பிடித் தோன்போல போகையிலே. (56)

அதைப்பார்த்த மூடர்கள் பஞ்ஜாமகிமையை
ஆஹாநா மென்னத்தை சொல்வோ மென்பார்
இதமாக சவுக்கடி யவன்முது கில்தா
ஏற்ற மகிமையைக் காண்பீர்களே. (57)

அந்தச் சனியனை யவனெடுத் தேகையில்
அறியாத மடையர்கள் காசளித்து
கெந்தப் பொடிவாங்கி யாஉசேன் பாஉசேன்
என்றே பஞ்ஜாமேலே வீசுகிருர். (59)

நாயகர் நபிபேரர் ஹுசைன்றலி மறுங்கதை
நலமா யறிந்தவர் அவர்பேரதை
நேய முடன்சொல்லி காற்றிலே தூத்திட
நிஜமாக ஒருபோதும் ஒப்பார்களே. (60)

இந்தப் பஞ்ஜாவிலே மகிமைகள் உண்டென்று
எண்ணியே ஈமானை இழந்தோர்களே
அந்தப் பஞ்ஜாவது பொன் வெள்ளித் தகடென்று
அதைத் திருடிப்போய் சோ காக்களே. (61)

உருக்கிக் கருக்கியே உருண்டை யாக்கிவிற்று
உரமாகச் சாப்பிட்டு எப்பம்விட
சருகா தவர்களை யந்தப் பஞ்ஜாப் பாடை
சதிசெய்த தீங்கதைச் சொல்வீர்களே. (62)

இவ்வித கொடுஞ்செயல் செய்வ தாகுமென்று
எற்ற உலமாக்கள் சொன்னதுண்டா
செவ்வையாய் நல்லோர்கள் செய்யக் கண்டீர்களா
செப்புங்காள் சீரற்ற ஜாஹில்களே. (63)

உங்க ளுக்குவந்த இருலோகக் கேடென்ன
உற் றுணர்ந்துப் பாரா பாவிகளே
பங்கப் பலீஹத்தா மிச்செயல் செய்வது
பாரிலே யாரென்றால் கேட்பீர்களே. (64)

குடியன் சோதா லுச்சா கொடும்பாவி போக்கிரி
குப்பார் முஷ்ரிகீன் ஜாஹில்களும்
முடிச்சு மாரிகாஞ்ஜா செய்வேலை யாமிது
முஸ்லிம்கட் காகாதென் றறிவீர்களே. (65)

(நேர்ச்சை யாளர்களின் பாணக்கம் கிச்சிடி)

நேர்ச்சை நிறைவேற்றப் பாணக்கங் கரைத்தின்னும்
நேர்மையாய் கிச்சடி சமைத்ததற்கு
பார்த்திபப் பாத்திஹா ஓதுவ தாகாது
பங்கிட லாகாது உற்றருக்கே. (66)

அதையுற்றார் வாங்கியே சாப்பிட லாகாது
அனுப்பும் நேர்ச்சையர்க்கே திருப்பி விட்டால்
இதையவர் மறுவாண்டு முஹற்ரமில் செய்வாரா
எற்ற ஞேஷமற்றோர் கேட்பீர்களே. (67)

வந்ததை வாங்கியே வயிற்றை நிறப்புவோர்
வரிசையா யனுப்பின நேர்ச்சையாளர்
இந்த இருகக்ஷி எல்லோ ருக்கும்பாவம்
எழுதுவார் காதிபீன் தவறுமலே. (68)

(நேர்ச்சைக்கு பாத்திஹாஓதும் லெப்பை மோதீன்)
களுக்கு தன்பீஃ

அந்த நேர்ச்சைக்காக பாத்திஹா ஓதுதல்
ஆகாது லெப்பையும் மோதினும்
பந்த முடனோதிப் பள்ளை நிறப்பிடும்
பக்தர் லெப்பை மோதீன் கேட்பீர்களே. (69)

அப்படி நேர்ச்சைக்கு பாத்திஹா ஓதினல்
ஹக்பரஸ்த் தென்றும்மை சொல்ல மாட்டோம்
தப்பாது உங்கட்கு சாப்பாட் ராமனென்று
தகுமான பேர்வைப்போம் அறிவீர்களே. (70)

இதுகளை விலக்காத கட்முல்லாக்கள் சிலர்
இந்தக் கடைசீ ஸமானுவிலே
பதுமையாய் விட்டதால் பலபல நேர்ச்சைகள்
பரவல் அவர்களின் பெருந்தவறே. (71)

(கிதாபின் முடிவுரை)

இன்னமும் ஜாஹில்கள் முஹற்றமில் செய்கின்ற
இடரான கருமங்கள் எடுத்துரைத்தால்
அன்பாக இந்நூல் விரிவாகிடுமென்று
அருளினம் சுருக்கமாய் அன்பர்களே. (72)

இதுவரையில்சொன்ன உபதேசமானது
ஈமானுள்ளவர்க்குப் போதும் போதும்
சதிகார பிடிவாத வம்பர்க்கு இதைக்காண
சாற்றினு மேற்காது அறிவீர்களே. (73)

அவர்களின் மூர்க்கத்தை மார்க்கமாய் கொண்டாடி
அன்பாய் நடப்பதை அஹ்ஸன் கண்ணால்
தவறுது கண்டதை உள்ளபடி விண்டான்
தனியோன் பொருத்தத்தை மிகநாடியே. (74)

என்பேரில் குறைகூறு இடர்களை தவிர்ப்பதும்
எடுத்திதை நடப்பதுங் கடப்பதுவும்
இன்பாக இஃதெல்லாம் உமைச்சாரந்த தேயல்லால்
இனிஎன்ன யான்சொல்வேன் தீனோர்களே. (75)

அல்லாவின் பொருத்தமே அஹ்ஸனுக்கு வேண்டும்
அடியர்கள் பொருத்தமும் வருத்தமதும்
எல்லை யுடன்நீக்கி இடர்கண்டால் விலக்கிட
எப்போது மஞ்சிடேன் தீனோர்களே. (76)

ஆமீ னாமீன்ஆமீன் அல்லாஹும் மஆமீன்
அஹ்ஸன் அமல்செய்ய அடியர்கட்கு
நேமமாய் நல்தௌபீக் தந்துநீ ஆள்கவே
நேர்மை யுன்தர்பாரில் கேட்டே னாமீன். (77)

வஆகிரு தஅவானா அனில்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

பி றஹ்மதிக யாஅர்ஹமர் ராஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

புஷாறுத்துல் மூமினீன் (மஅ) தன்பீஹுல் ஜாஹிலீன்.
முற்றுப் பெற்றது.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.

நூதனமாக அச்சிட்டுவரும்

அற்புதமாகிய விஷயங்கள் பொதிந்த புதிய கிதாபுகள்.

# இகபர ரகசியம் இசுலாமிற் கவசியம்.

## முதல் பாகம்.

**கிதாபு 1-க்கு ரூ. 1-0-0. வி. பி. யில் ரூ. 1-4-0.**

முஸ்லிம் மித்திரர்களே! இதில் ஆரம்பம் பிஸ்மில்லா உடைய வரிசைகளைப் பற்றிய அநேக ஹதீஸ், ரிவாயத்து, ஹிக்காயத்துகள், இன்னும் நமது நாயகர் நபிஅலைஹி அவர்கள் அற்புதமாகக் காட்டிய முஅஜிஸாக்கள், அவர்கள் தீனுக்காக எடுத்த கஷ்டங்கள், ஹலறத்து உமர்றலி ஈமான் கொண்ட சுருக்கம், அவர்கள் நீதமும், நாட்டமும், நடக்கைகளும், ஹலறத்து, ஹம்ஸாறலி ஈமான் கொண்டதும், அடியார்கள் அல்லாவின் பேரில் தவக்குல் வைத்து உலகம் ஆகிரில் ஜெயம் பெறும் சேதிகளும், இன்னு மனந்தம் நல் மாராயங்களும் பாடல்களாகவே பேசியுள்ளதை விவரிக்க இடம் தாராது. ஆகில்கள் கிதாபின் பெயர் கொண்டே பொதிந்த விஷயங்களை நன்குணர்வார்களென சுட்டிக் காட்டப் பட்டது.

---

# இகபர ரகசியம் இசுலாமிற் கவசியம்.

## இரண்டாம் பாகம்.

**கிதாபு 1-க்கு ரூ. 1-0-0. வி. பி. யில் ரூ. 1-4-0.**

முஸ்லிம் பிறவிகளே! இவ்வரிய நூலில், உம்மத்தோர்கள் சங்கையை துவர்க்கம் செய்து, முஸ்லிம் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்து ஆகிரத்தில் வெற்றிகளைப் பெறும் நல்மாராயங்களை ஓர் வஅஜூடைய அழகிய மஜ்லீசைப்போல் படிப்பவர் கேட்பவர் மனதில் அளவிலா ஆனந்தத்துடன் பேசியுள்ள பாடல்களின் விஷயங்களை முற்றும் சொல்ல இடந் தாராததால் சுட்டிக் காட்டப்பட்டது. இன்ஷா அல்லாஹூ இக் கிதாபு வெளிவந்தபின் கைப்பற்றி சந்தோஷிப் பவர்களுக்கே தெரியும்.

கவனிப்பு: இவ்விரண்டு கிதாபுகளும் றஹ்மானுதவியால் கூடிய சீக்கிரம் வெளிவரும். இப் பதிப்பில் சொற்ப காபிகள் மட்டும் அச்சிடுவதால், பிந்திடாமல் முந்திக் கொள்வீர்களாக. விருப்பமுள்ளவர்கள் ஆர்டர் எழுதினல், தங்கள் பெயரைப் பதிந்துக் கொண்டு கிதாபு வெளிவந்தவுடன் அனுப்பக்கூடும்.

விலாசம்:
ஊ. ஜெயினுல் ஆபிதீன் சாகிபு,
காதர் பேட்டை,
ஆம்பூர் போஸ்டு, நார்த்தாற்காடு.